
மே தினச் சிறப்பிதழ்

# தமிழரசு



1 மே 1978 50 காசு





# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!

"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா




வெளியீடு :—

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.



தோற்றம் 29-4-1891 ❀ மறைவு 21-4-1964



புதுச்சேரி பெருமாள் கோவில் தெருவிலுள்ள புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்ந்த இல்லத்தை புதுவை மாநில அரசு 'புரட்சிக்கவிஞர் நினைவு நூலகமாகவும் காட்சிக்கூடமாகவும்' ஆக்கியுள்ளது.


தமிழரசு
1—5—1978


# இந்த இதழில்...

மலர்: 8 இதழ்: 21


| | |
|---|---|
| நமக்கு ஒரு வால்டேர் நமக்கு ஒரு ஷெல்லி | 3 |
| பாட்டாளியின் முதற் குரல் | 4 |
| தொழிலாளர்கள் நல்வாழ்வே நமது இலட்சியம் | 6 |
| தென்புலத்து நெருப்புமலர் | 7 |
| நலிந்தோர் வாழ்வில் நன்மைகள் பெருகிட | 9 |
| பாவேந்தர் வாழ்விலே... | 11 |
| ஆர்வமூட்டும் ஆட்சி மொழி | 13 |
| 10+2+3 | 17 |
| தொழிலே எழில் | 24 |
| மக்கள் கவிஞரின் மதுவிலக்குப்பாட்டு | 26 |
| மேதினி நாள் | 31 |
| நாட்டுப்புறக் கலைகளின் வரலாறு | 33 |
| பாட்டாளி நலனுக்குப் பாடுபட்டால்தான்... | 41 |
| தொழிலாளர் நலம் | 44 |
| அண்ணா எனும் இலக்கியவாதி | 47 |


மே தினச் சிறப்பிதழாக இவ்விதழ் மலர்கிறது. உழைக்கும் வர்க்கம் உயர்வு பெற்றிட-பாடுபடும் பாட்டாளித் தோழனின் வாழ்விலே பசுமை பொங்கிட-ஆக்கப்பூர்வமான திட்டங்கள் பலவற்றைத் தமிழக அரசு தீட்டியுள்ளது. உழைப்பின். பெருமையைத் தீந்தமிழில் வடித்துக் கொடுக்கும் பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியமும், கருத்தாழமிக்க கட்டுரையும்-தொழிலாளர் நல்வாழ்வுக்காக அரசு ஆற்றிடும் பணிகளைத் தொகுத்துத் தரும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கட்டுரையும் தொழிலாளர் நலத்துறை ஆணையரின் கட்டுரையும், மே தினக் கவிதையும், மே தினச் சிறப்பிதழுக்குச் சிறப்புச் செய்கின்றன.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் புகழ் பாடும் கவிதைகள்-கட்டுரைகள்--பாராட்டுரைகள்—இவ்விதழிலும் இடம் பெற்றுள்ளன. அரசவைக் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் கவிதை-அனைத்துக்கும் முத்தாய்ப்பாய்த் திகழ்கிறது! மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களின் கட்டுரை-புரட்சிக் கவிஞரைப் புதிய கோணத்தில் படம் பிடித்துக்காட்டுகிறது! டாக்டர் சஞ்சீவி அவர்களின் திறனாய்வுக் கட்டுரையும், திரு கோ. முத்துப்பிள்ளை அவர்களின் 'ஆர்வமூட்டும் ஆட்சிமொழி'யும் சிந்தனையைத் தூண்டுவனவாகும்! புரட்சிக் கவிஞர் மகனார் மன்னர் மன்னன், கவிஞரின் வாழ்க்கையிலே நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தந்துள்ளார்!

அடுத்த கல்வி ஆண்டிலிருந்து அமலுக்கு வரும் 10+2+3 கல்வி முறையைத் தெளிவாக விளக்கியுள்ளார் பள்ளிக்கல்வி இயக்குநர். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ.என். பெருமாள் தமிழ்நாட்டுக் கிராமியக் கலைகளைக் கோவையாக எடுத்து விளக்கியுள்ளார். உழைப்பாளிகளுக்கு உவகையூட்டுவன அல்லவா கிராமியக் கலைகள்!

மற்ற வழக்கமான அம்சங்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. அடுத்த இதழ் சுற்றுலாச் சிறப்பிதழாக வெளிவர உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# நமக்கு ஒரு வால்டேர்! நமக்கு ஒரு ஷெல்லி!



**பேரறிஞர் அண்ணா**

**வா**னுலக வீதியிலே சுற்றி, தேவர் தம் வடிவழகைக் கண்டு கூறி வருபவரே கவிஞர், அஃதே கலை என்றிருந்த நிலை மாறி, கவி நம்முடனேயே இருப்பார், நமது உலகில்தான் உலவுவார், நாம் காண்பனவற்றையே காண்பார். ஆனால், அவைகளைப் பற்றி நாம் கூறத் தயங்குவோம் இயலாததால்; அவர் கூறுவார், அறிவுத் தெளிவால், கலைத்திறனால்; இந்தப் புரட்சியைச் செய்தார் பாரதிதாசன்.

புரட்சித் துறையில் ஈடுபட்டவர்கள் பெரிதும், துவக்கத்தில் பூவால் அர்ச்சிக்கப்படுவதில்லை. புன்மொழிகளையே வீசப்பெறுவர். அதிலும் மொழி வீசும் துறையிலே ஈடுபட்ட புலவர்கள் உலகிலே புத்தம் புதிய புரட்சியை ஒருவர் வெற்றிகரமாகச் செய்து வருவது கண்டால், பொச்சரிப்பின் விளைவாகப் புன்மொழி, மாரி போல் பொழியத்தானே செய்யும்?

பாரதிதாசன், இந்த மாரியைச் சட்டை செய்யவில்லை. புரட்சியில் ஈடுபட்டுள்ளவருக்கு இதற்கு நேரம் ஏது? போரிட்டார், போரிட்டார், போரிட்டுக் கொண்டே இருக்கிறார்! வென்றார், வெல்கிறார், வெற்றி பெற்றபடியே இருப்பார்!

அவர் பெற்ற வெற்றிகளிலே ஒன்று அவருடைய கவிதைகளை இன்று மக்கள் அறிந்து கொண்டார்கள். புரிந்து கொண்டார்கள், ரசிக்கிறார்கள், பயன் பெறுகிறார்கள்.

**நாளைக்கு என்ன நடக்கும் என்பதை எண்ணும்போதுதான், ''புரட்சிக் கவிஞரே பாரதிதாசன்; ஐயமில்லை'' என்று அனைவரும் கூறமுடிகிறது. அவர் போர் முகாம் அமைத்து விட்டார்;** போர் வீரர்களைக் கூட்டிவிட்டார். படைக் கலன்களும் தயார். முரசும் கொட்டி விட்டுக் கூப்பிடுகிறார்.

**''கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே''**

என்று. அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்தி விடும் வீரக் குரலாகிவிட்டது! எனவே தான் நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார், நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார், அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடு கூறுகிறது.

நாட்டு மக்களுடைய இந்த மகிழ்ச்சியின் ஒரு சிறு அறிகுறியே இதுபோது கவிஞருக்கு அளிக்கப்படும் பொற்கிழி. இதிலே குவிந்துள்ள ஒவ்வோர் காசும் பேசக் கூடுமானால் மணிக்கணக்கில் பேசும் கவிஞரின் பெருமையை; அதனால் சமுதாயம் பெற்ற பெருமையை— பொற்காசுகள் பேசினாலும்கூட புரட்சிக் கவிஞரின் செவியில் அந்த ஒலி புகாது — எப்படிப் புகும்? அவருடைய செவியிலே ஆலைச் சங்கு, சுண்ணம் இடிக்கும் சுந்தரியின் பெருமூச்சு, பாட்டாளியின் குமுறல், பணமெனும் கொடி கட்டிய படகு வருமா என்று எதிர் பார்த்து ஏங்கும் ஏழையின் ஏக்க மொழி, எழில் ததும்ப இளமை ததும்ப உள்ள மங்கை மஞ்சத்தில் குறட்டை விடும் இளம் மணாளனை கண்டு கண்ணீர் விட்டுக் கதறும் ஒலி இவை புகுந்து, கண்களிலே அனலையும் புனலையும் கிளப்பி விட, ''ஏடா! தம்பி! எடுடா பேனா! கொண்டு வா மைக்கூடு; இந்தக் கொடுமைகளைக் களைந்தேயாக வேண்டும்; இன்றே களைந்தாக வேண்டும்'' என்று முழக்கமிடுகிறார்! அந்த முழக்கம் இந்நாளில் நாம் பெற்ற கருவூலம்! அவர் நமக்கு அளித்த அழியாத செல்வம்; அவர் வாழ்க! வெல்க!

**—புரட்சிக் கவிஞரின் 55ஆம் ஆண்டு நிறைவு விழாவினையொட்டி 1946ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கவிஞர் மலரிலிருந்து.**


### உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்!

பாரதிதாசன் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார். ''தமிழர் சிறந்தவர்'' என்பதை அவர் ஸ்தாபித்து விட்டார்! அவருடைய தமிழ் கனலைப் போன்றது; அநீதியைச் சுட்டுப் பொசுக்கும் தன்மை வாய்ந்தது.

—கி. வா. ஜகந்நாதன்.

பாரதிதாசன் கவிதையில் தேன் ஒழுகுகிறது! அவருடைய பெருமையை வட நாட்டாரும், மேல்நாட்டாரும் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். அது தமிழரின் கடமை.

—டி. செங்கல்வராயன்.




# பாட்டாளியின்

## அரசவைக் கவிஞர்

ஏழுதுகோல் தொட்டால் இயற்கை நதியெனப்
பழுதிலா(து) ஓட்டும் பாவலர்க் கரசன்
வழுவிலாக் கனிகள் வடித்த மாமரம்
வற்றாச் சுனைநீர் வழங்கிய சுனையவன்
அழுதபிள் ளைக்கோ அவன்தா லாட்டு
அகத்துறை இளைஞர்க் கவனோர் இலக்கணம்
சாதிபே தங்களைச் சாடிய நாயகன்
நீதிவா தத்திலே நிலைத்த பெருந்தகை
முன்னு ளிருந்த மூடக் கொள்கைகள்
இந்நா ளழிய இயங்கிய தளபதி
விருத்தம் எய்தா விருத்தக் கவிதைகள்
அழுத்தம் பதிய ஆக்கிய பாவலன்
சந்தக் கவிதைகள் தமிழில் படைத்து
மந்தத் தமிழனும் மயங்கச் செய்தவன்
பூவார் சோலை புதுமணத் தென்றல்
நீரார் கடலின் நித்திலக் குவியல்
புரட்சி நெருப்பில் புடம்போட் டெடுத்த
புத்துல கத்துப் புகழ்பெறும் சிற்பி



# முதற்குரல்!



## கண்ணதாசன்

பாரதி பற்றிப் பாரதி தாசன்
ஆக்கிய அனேத்தும் அவனுக்கும் பொருந்தும்
நூற்ருண் டில்ஒரு நுண்ணறி வாளன்
நோற்றுப் பிறப்பான் நோயிலா தாக
ஆற்று மணல்போல் ஆயிரம் புலவோர்
காற்று வெளியில் கலந்திருந் தாலும்
சாற்றும் படிக்குத் தனித்திறன் படைத்த
ஊற்றுப் புலவோர் ஒருசில பேரே
பாரதி தாசன் பகைவரை எதிர்த்தோன்
பழமை புதுமைப் பாலம் அவனே!
அவன்விழாக் காண அரசு முனேந்தது.
தமிழிடம் கொண்ட தணியாக் காதலால்
முதல்வர் எடுத்த முயற்சி பலித்தது!
வள்ளுவன் கம்பன் வழியில் பாரதி
பாரதி தாசன் பண்பினேச் சாற்றும்
எந்த முயற்சியும் தமிழர்க்கு இனிதே
வாழிய தாசன்! வாழிய அரசு!
வாழிய வேஇவ் வையம் உளவரை!

தமிழ்ப் பண்பாட்டைச் செழிக்க வைக்கும் வகையிலும், 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்னும் கொள்கை கொண்டு, தமிழை வளர்க்கும் பணியிலும் முனேப்பாக ஈடுபட்டு வரும் தமிழக அரசு, கவிஞர் கண்ணதாசன் அவர்களே அரசவைக் கவிஞராக 1-4-78-ல் நியமனம் செய்துள்ளது.

முன்பு 1949-ஆம் ஆண்டில் நாமக்கல் கவிஞர் திரு இராமலிங்கம் பிள்ளே அவர்கள் அரசவைக் கவிஞராக நியமிக்கப் பெற்றிருந்தார். அதன் பின்னர் 25 ஆண்டுக் காலமாக அப்பதவி பூர்த்தி செய்யப்படாதிருந்தது. தற்போது தமிழக அரசு, கவிஞர் கண்ணதாசன் அவர்களே நியமித்ததன் வாயிலாக அப்பதவியைப் பூர்த்தி செய்திருக்கிறது.



# தொழிலாளர்கள் நல்வாழ்வே நமது இலட்சியம்

'**கா**ண்பது எல்லாம் தொழிலாளி செய்தான் அவன் காணத் தகுந்தது வறுமையாம்-அவன் பூணத் தகுந்தது பொறுமையாம்' என்ற பழைய நிலை மாறிவிட்ட காலம்!

தொழிலாளர் நல்வாழ்வு புன்னகைப் பூங்காவாக மாறவேண்டும்—புதுவாழ்வு மலர வேண்டும் என்ற எண்ணம் எங்கும் பரவியுள்ள காலம்!

தொழிலாளர்களின் நல்வாழ்வே தனது இலட்சியமாகக் கொண்டு இயங்கி வருகிறது புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்த தமிழக அரசு.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அங்கே தொழில் புரட்சி ஏற்பட்டாக வேண்டும். தொழில் அதிபர்கள் அதிக முதலீடு செய்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். பொதுவாக கிராமப் புறங்களில் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

தொழிலாளர்கள் தங்கள் உரிமையைக் கேட்கலாம். நாட்டில் தொழிலாளர் போராட்டம் இல்லை என்றால் அங்கே ஜனநாயகம் இல்லை என்று பொருள். ஆனால், தொழிலாளர்களுக்காகவே பாடுபடும் ஒரு முதல் அமைச்சர் ஆட்சியில் பல ஆண்டுகளாகத் தொழிலாளர்களுடன் வாழ்ந்து அவர்களுக்காகப் போராடிய ஒருவன் தொழிலாளர் நல அமைச்சராக வந்துள்ளேன்.

தமிழ்நாடு அரசு, சோஷலிசப் பாதையில் வேகமாகச் செயல்பட வேண்டுமெனில், தொழில்துறையில் வன்முறை இருக்கக்கூடாது; உற்பத்தியில் தடை இருக்கக்கூடாது.

தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். இதற்குச் சட்டத்திலேயே பாதுகாப்பு இருந்தால் வேலை நிறுத்தங்கள் நடைபெறாது. எனவே, தொழிலாளர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க சட்டம் இயற்ற அரசு முயற்சி எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலக் குழு தொழிலாளர்களின் நலனைக் காப்பதற்காக, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இதுவரை இல்லாத 'தொழிலாளர் நலக் குழு' என்ற அமைப்பைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் குழுவில், தொழில் அதிபர்களும், தொழிலாளர்களும், வழக்கறிஞர் பட்டம் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழு தொழிலாளர்கள் நலனைக் கருதி அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு எந்தெந்த வகையில் சட்டத்தின் மூலம் பாதுகாப்புத் தர முடியுமோ அவற்றையெல்லாம் இந்தக் குழு ஆராயும்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெரும்பாலான தொழிலாளர்கள் ஆங்கிலம் தெரியாமல் உள்ளனர். ஆனால் மிகச் சிறந்த யோசனைகளை அவர்கள் அரசுக்கு வழங்குகின்றனர்.

தொழிற் சட்டங்கள் தமிழிலேயே இருக்குமானால் அவர்கள் நல்ல முறையில் படித்து மேலும் பலயோசனைகளை வழங்க முடியும். எனவே, தொழிலாளர் நலச் சட்டங்களைத் தமிழிலேயே வெளியிட தமிழக அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

விபத்துக்கள் வராமல் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றிய யோசனைகளை அரசு தெரிவிக்க வேண்டும்.

இதுபோன்ற ஆலோசனைப் பெற, ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தலாமா என்பது பற்றி தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

தொழில் அதிபர்கள் நியாயமான இலாபம் பெற முயற்சி செய்ய வேண்டும். ஆனால், விரைவிலேயே பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வேண்டாம்.

தொழிலாளர் நலனுக்காகப் பல புதிய சட்டங்களைக் கொண்டு வர இருக்கிறோம். இவைகளுக்கு மத்திய அரசின் ஒப்புதலைக் கேட்டு இருக்கிறோம்.

கதவடைப்பு, மூடுவதுபோன்ற சட்டம் 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு என்று இருப்பதை 50 தொழிலாளர்களுக்கு மேல் இருப்பவர்களுக்கும் பொருந்தும்படி சட்டத்தைத் திருத்துவது பற்றிப் பரிசிலித்து வருகிறோம்.

தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் பாதுகாக்கப்பட்ட ஊழியர்களாக அறிவிக்க, சட்டத்தைத் திருத்த இருக்கிறோம்.

வேலை நிறுத்தம் பற்றி உத்தரப் பிரதேசத்தில் இருக்கும் சட்டம் போல இங்கும் கொண்டு வருவது பற்றியும், நிறுவனங்கள் மூடப்பட்டால் அல்லது நிர்வாக மாற்றம் ஏற்பட்டால் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம் கிடைக்க சட்டத்தைத் திருத்துவது பற்றி ஆராய்ந்து வருகிறோம்.

சங்க நிர்வாகிகள் ரகசிய ஓட்டு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட சட்டம் கொண்டு வர இருக்கிறோம்.

வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் வழக்கு முடிந்து வேலைக்குச் செல்லும் வரை 'சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ்' கிடைக்கச் செய்ய ஆராய்ந்து வருகிறோம்.


போனஸ் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். யாருக்கும் விதிவிலக்கை நாங்கள் தரவில்லை.

போனஸ் சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறோம்.


சங்க ரீதியில் அமைப்பு இல்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கு மாதம் 20 நாட்களாவது வேலை கிடைக்க, பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.


காண்டிராக்ட் தொழிலாளர்களை ஒழுங்குபடுத்த 10 பேர்களுக்கு மேல் உள்ள நிறுவனங்களுக்குச் சட்டம் கொண்டு வர ஆராய்ந்து வருகிறோம்.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் விதிக்கப்படும் அபராதத் தொகையைத் தொழிலாளர் நல நிதியில் சேர்க்க சட்டத் திருத்தம் கொண்டு வருவது பற்றி ஆராய்ந்து வருகிறோம். ஆட்சிக்கு வந்து 10 மாதம்தான் ஆகிறது. எனவே, தொழிலாளர்களும் தொழில் அதிபர்களும் எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்து ஆலோசனைகள் வழங்கவேண்டுகிறேன்.



மாண்புமிகு
தொழிலாளர் நல அமைச்சர்
திரு. எஸ். இராகவானந்தம்







# "தென்புலத்து நெருப்பு மலர்"

**மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. கா. இராசாமுகம்மது.**

சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற கால கட்டத்தில் தென்னாட்டில் ஒரு பாரதி, வங்கத்தில் ஒரு தாகூர், வடமாநிலத்தில் இக்பால், நஸ்ருல் இஸ்லாம் போன்ற கவிஞர் பெருமக்கள் எழுச்சி மிகு கவிதைகளின் மூலம் சுதந்திரக்கனலைத்தூண்டி, மக்கள் உள்ளத்தில் சுதந்திர உணர்வு மங்கிப் போகாமல் நிலைத்திருக்கும்படிச் செய்தார்கள். கவிதை வரலாற்றிலேயே ஏககாலத்தில் உலகப் புகழ் பெற்ற, கவிஞர் பெருமக்கள் நான்கு பேர் பாரத மண்ணில் தோன்றியதும் இந்தச் சந்தர்ப்பத்தில்தான்.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக மட்டும் அவர்கள் கவிதைகளை இயற்றவில்லை. மொழி, இனம், சமயங்களுக்கும் ஏன் தேசியத்திற்கும்கூட அப்பாற்பட்ட மனிதாபிமான நிலையில் நின்று பரந்ததொரு சமுதாயக் கண்ணோட்டத்தில் சகோதரத்துவ உணர்வுகளையும் சமத்துவ நெறிகளையும் உருவாக்க, கவிதை முரசு கொட்டினார்கள். உலக அரங்கில் இது ஒரு தனி முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும். அவர்களின் அடிச்சுவட்டைப்பின்பற்றி சுதந்திர இந்தியாவில் கவிதைச் சுடராக, தென் புலத்தில் பூத்த நெருப்பு மலராகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விளங்கினார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காலத்தில் தேசிய இனங்களின் பாதுகாப்பும் மொழி ஆதிக்க எதிர்ப்பும் மிக முக்கியமான புறச் சூழ்நிலைகளாக அமைந்து இருந்தன. பிறமொழி ஆதிக்கம் தாய்த் தமிழின்மீது திணிக்கப்படுவதற்கான பெரு முயற்சியும் பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு எதிரான சமுதாயக் கொடுமைகளும் நின்று நிலவியிருந்தன. தாய் மொழியாம் தமிழ் மொழியைப்



பேணிப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு அவர் வாழ்ந்த காலத்தின் தலைமுறைமீது சுமத்தப்பட்டது.

தமிழ் என்றால் சமயம் என்ற அளவுக்குத் தமிழை சமயங்களோடு இணைத்து விடக்கூடாது என்பதில் புரட்சிக் கவிஞர் காட்டிய பேரார்வத்தின் விளைவாக, தமிழ் இயக்க வரலாற்றில் புரட்சிக் கவிஞரின் நெருப்புக் கவிதைகள் பெரும் பாத்திரம் ஏற்று அன்றைய சமுதாய உணர்வின் மையமாகத் திகழ்ந்தன.

''தமிழ் மொழியை மதங்களிலே
சாய்க்காமை வேண்டும்''

என்கிற கவிதை வரிகள் ஒரு புதிய சமுதாய மறுமலர்ச்சிக்கான தோற்றுவாயை நிர்மாணிக்க அடித்தளமாக இருந்தன.

திராவிட இனத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமூக அமைப்பு முற்றிலும் மற்ற இனத்தின் அமைப்புக்களிலிருந்து வேறுபட்டவை, சிறப்பானவை என்பதை உலகத்திற்கு உணர்த்திய முதல் கவிஞராகப் புரட்சிக் கவிஞர் விளங்குகிறார்.

''தேவர் யாம் என்பவரைத் தெவ்வரென எதிர்ப்போம்
சாவு தவிர்ந்த மறுமையினை ஒப்புகிலோம்
வாழ்விலறம் தந்து மறுமைப் பயன் வாங்கோம்
மேவும் இக்கொள்கைத் திராவிடத்தை அவ்வடக்கர்
தாவித் தலைகவிழ்க்க வந்தார் தமை எதிர்க்க
பாவையரே காளையரேபல்லாரும் வாரீரோ!''

என்கிற கவிதை ஒரு முழுமையான பகுத்தறிவுக் கொள்கையில் ஒரு நிலை சார்பற்ற பிரகடனமாக அமைந்திருக்கின்றது.

''தீண்டாமை என்னுமொருபேய்—இந்தத்
தேசத்தினில் மாத்திரமே திரியக் கண்டோம்''

என்று சீறிச் சினந்து, சிந்தனையை வளர்க்கும் செந்தமிழ்க் கவிதையினை நமக்குத் தந்து, சாதி பேதமற்ற தீண்டாமையற்ற சமத்துவ சமுதாயம் வேண்டுமெனில் தீண்டாமையை ஆதரிக்கும் தெய்வம் என்று ஒன்று இருந்தால் அந்தத் தெய்வமும்கூட அழியட்டுமே என்கிற வீர உணர்வினை நமக்குத் தந்து சென்றிருக்கிறார் புரட்சிக் கவிஞர்.

சமயத்தின் பெயரால் ஒரு சமுதாயத்தில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை, இருந்துவிட்டுப் போகட்டும் என்று ஏற்றுக் கொள்கின்ற மனப்பாங்கினை, பிற்போக்கு நிலைகளைக் கடுமையாகச் சாடியிருக்கிறார் புரட்சிக் கவிஞர்.



## பாரதிதாசன்

அறிவுக் கோயில்களைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்றபேரறிஞர் பாரதி தாசன்.

—புதுமைப்பித்தன்.

பாரதிதாசனின் தமிழ்ப் பற்றுக்கு எல்லையில்லை. அவர் தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகி விடுவான்.

—டாக்டர் அ. சிதம்பர நாதச் செட்டியார்.

பாரதிதாசனுடன் பழகு வதன் மூலம் பாரதியைப் பார்க்கவில்லையே, அவருடன் பழகவில்லையே என்ற குறை எனக்கு நிவர்த்தியாயிற்று.

—கல்கி.

எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

பாரதிதாசன் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத் தாகம் உண்டு; பண்பும் உண்டு; பயனும் உண்டு.

—ரா. பி. சேதுப்பிள்ளை.

'விடுதலை எல்லாம்
கிளர்ச்சியால் வெல்லும்
விடுதலை வேட்கை
வெறிகொண்ட வீரன்'

—நாமக்கல் கவிஞர்.

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்நாட்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர்; காலஞ்சென்ற பாரதி யாரின் பிரதம சீடராவார். பாரதியாரின் பாடல்கள் தமிழ் மக்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சியை உண்டு பண்ணி னது போல பாரதிதாச னுடைய பாடல்கள் சமூகச் சீர்திருத்த உணர்ச்சியை மக்க ளுக்கு ஊட்டி வருகின்றன என்றால் அது மிகையாகாது. மதங்களிலும், பழைய ஆசாரங் களிலும் ஊறிக்கிடந்த மக்களி டையே இவருடைய பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆதலால், இவர் ஒரு புரட்சிக் கவி, அமெரிக்கப் புரட்சிக் கவி வால்ட்விட்மன். தமிழ்நாட்டுப் புரட்சிக் கவி பாரதிதாசன்.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

### தமிழருக்கு வழிகாட்டி!

'தூக்கத்திலிருந்த மக்களைத் தட்டி எழுப்பி, நிலைமையை உணரும்படி செய்திருக்கிறார் பாரதிதாசன்! பாரதியும், பாரதிதாசனும் தமிழருக்கு வழிகாட்டிகள். தமிழ் அறி ஞர்களையும் கவிஞர்களையும் போற்ற வேண்டியது தமிழர் கடமை.''

—பேராசிரியர்

மு. வரதராசனார்.

ஆசை மலர்களினால்-உலகை
அழகு செய்திடுவான்
ஓசைக்கலையாலே-நாட்டை
ஒற்றுமை யாக்கிடுவான்.

—சுத்தானந்த பாரதியார்.

''நடவு செய்த தோழர் கூலி
நாலணுவை ஏற்பதும்
உடலுழைப் பிலாத செல்வர்
உலகை ஆண்டு லாவலும்
கடவுளாணை என்று ரைத்த
கயவர் கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்.''

என்கிற கவிதையின் ஒவ்வொரு வரியும் புதிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்கான கட்டளை களாக அமைந்திருக்கின்றன. சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்ற பாட்டாளி வர்க்கத் தின் மேன்மைக்காகவும், சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளில் தேவையற்ற ஏற்ற இறக்கத்தைத் தகர்க்க வேண்டுமென்கிற புரட்சி கரமான எண்ணங்களையும், கவிதை வரிகளில் அடக்கி, காலப் பெட்டகத்தின் கருவாக உரு வாக்கியிருக்கிறார். பகுத்தறிவுப் பாதை, சமத்துவ நோக்கு, மானிட சக்தியின் வளர்ச்சி இவற்றின்பால் நிலைத்த நம் பிக்கை கொண்டு, வாழத் தூண்டு கின்ற உணர்வினை தமிழ்ச் சமுதா யத்திற்குக் காட்டியிருக்கின்றார்.

''செல்வமுற் பிறப்பில் செய்த
நல் வினைப்பயன்
சிறுமைமுற் பிறப்பில் செய்த தீ
வினைப்பயன்''

இக்கருத்து நாட்டில் எங்கும் பர வினால் மக்கள் எதிர்ப்பரோ மன்னன் ஆட்சியை? எதிர்க்க மாட்டார்! தாங்கள் எய்திய ''சிறுமை'' முற்பிறப்பில் செய்த தீ வினைப்பயன் என்று சும்மா இருப்பரன்றோ?''

என்கிற கவிதை இப்பிறப்பு, முற்பிறப்பு, இருவினை, ஆன்மா பற்றிய கருத்துக்கள் எந்த அள விற்கு அரசியல், சமுதாய மறு மலர்ச்சிக்குத் தடையாய் இருக் கின்றன என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

தாய்க் குலத்தின் நல்வாழ்விற் காகத் திராவிட ஒழுக்கநெறிகளைக் காக்கின்ற வகையில் சில புரட்சி கரமான திட்டங்களைச் செயல் படுத்த வேண்டுமென்பதில் கவி ஞர் காட்டிய ஆர்வத்தையும் வலி யுறுத்திப் பாடிய கருத்துக்களை யும் என்றும் மனத்தில் நிறுத்திப் போற்றுவதற்கும் அவைகளைச் செயல்படுத்துவதற்கும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

குழந்தைமணம்கூடாது என்றும் வயதுப் பொருத்தம் இல்லாத திருமணத்தைக் கண்டிக்கின்ற வகையில் விதவைத்திருமணத்தை வற்புறுத்தியும், வரதட் சிணைக் கொடுமையை எதிர்ப்பதி லும் அவர் தெரிவித்த சிறந்த சமுதாயக் கருத்துக்களைக் கவித் துவத் தன்மை குறையாதபடி புரட்சிக் கவிஞர் பாடியதைப் போல இலக்கிய வரலாற்றில் வேறு யாரும் பாடவில்லை என்பது என் கருத்து.

''கூவத் தெரியாக்குயிலின் குஞ்சு
தாவாச் சிறுமான், மோவா
அரும்பு''
''மனம் பொருந்தா மணம் மண்
ணைப் போக,
''பெண்டிழந்த குமரன் மணம்
''பெண்டு கொள்ளச் செய்யும்
எத்தனம்
கண்டிருந்தும் கைம்பெண் என்ற
கதை சொல்லலாமோ?
வல்லி உனக்கு ஒரு நீதி—இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்ச
வேண்டாம்''

என்று பல்வேறு இடங்களில் செழு மையான சமுதாயத்தை உரு வாக்கவும், நிலவி நின்று வரும் மூடப் பழக்க வழக்கங்களைக் குழி தோண்டிப் புதைக்கவும்—புரட் சிக் கவிஞர் தம் கவிதைகளால் பெரும் மனமாற்றத்தை ஏற் படுத்தி இருக்கிறார்.

தமிழ்ச் சமுதாய, மறுமலர்ச்சி சிந்தனையின் முன்னோடி, புரட்சிக் கவிஞர் ஆவார். புத்துலகம் கண்ட எழுச்சிக் கவிஞர் அவர்!

வளரும் தமிழகம்



# நலிந்தோர் வாழ்வில் நன்மைகள் பெருகிட....!

**மாண்புமிகு**
**சமூக நலத்துறை அமைச்சர்**
**செல்வி பி. டி. சரஸ்வதி**



இன்றைய தமிழகம் ஒரு புதிய வரலாற்றை—ஏன் சகாப்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அரசியல் முறையிலும் பொருளாதார நிலையிலும், சமூக மேம்பாட்டிலும், புத்துணர்ச்சியோடும் புதிய விழிப்புணர்வோடும் தமிழகம் இன்று செயல்பட்டு வருவதைக் காண்கின்றீர்கள். சமூக நல அமைச்சர் என்ற முறையில் எனது துறையின் சமூக நல முன்னேற்றத் திட்டங்களைப்பற்றிச் சில விவரங்களை நான் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பெண்கள், கருவுற்ற தாய்மார்கள், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், சமூக-பொருளாதார நிலையில் பின்தங்கிய மகளிர், சிறார்கள், உடல் ஊனமுற்றோர் மேலும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், முதியோர் ஓய்வூதியம் ஆகிய பல நோக்கங்கள் கொண்ட சமூக நலத் திட்டங்கள் தமிழகத்தில் சமூக நலத்துறையால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைக் கூற நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

18 வயது முதல் 40 வயது வரை உள்ள சமூகத்தில் ஆதரவற்ற, கைவிடப்பட்ட பெண்களுக்கு தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய மூன்று இடங்களில் பணி இல்லங்களை இவ்வரசு நடத்தி வருகிறது. மேலும் தென் மாவட்ட மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் திருநெல்வேலியில் ஒரு பணி இல்லம் 1977-78-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் மற்றுமொரு பணி இல்லம் தொடங்கப்பட இருக்கிறது. பணி இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் பெண்களுடன் அவர்களின் இரு குழந்தைகளும் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு ஈ. எஸ். எல். சி. வரை கல்வி கற்பிக்கப்படுகிறது.

பணி இல்லங்களில் முன்பு தங்கியிருந்தவர்களின் மறு வாழ்விற்காகக் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

தாம்பரம் பணி இல்லத்திலுள்ள பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 200-க்கு உட்பட்டு உதவித் தொகையுடன் இரண்டாண்டு எஸ். எஸ். எல். சி. குறுகிய பாடமுறை வகுப்பும் நடத்தப்பட்டு வருகிறது. 1978-79-ஆம் ஆண்டில் கடலூர், தஞ்சை ஆகிய பணி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் 25 பேர்களுடன் இரண்டாண்டு எஸ். எஸ். எல். சி. குறுகிய பாடமுறை வகுப்பு நடத்தப்பட இருக்கின்றது. புதிதாக, திருநெல்வேலியில் தொடங்கியுள்ள பணி இல்லத்திலும், 1978-79-ஆம் ஆண்டு தொடங்கப்பட இருக்கும் இல்லத்திலும் மேற்கண்ட வகுப்பு நடத்தப்பட இருக்கின்றது.

ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் பல்வேறு அலுவலகங்களில் (தனியார் அலுவலகங்கள் உட்பட) பணியாற்ற, தங்களுடைய இல்லங்களை விட்டு சென்னையைப் போன்ற நகரங்களுக்கு வருகின்றனர். அத்தகைய, குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் உள்ள பணிபுரியும் பெண்களுக்கு உணவு, உறைவிட வசதிகள் அளிக்க, சென்னை மாநகரில் சமூக நலத்துறை வாயிலாகப் பணிபுரியும் பெண்களுக்கு விடுதி ஒன்று தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இவ்விடுதியில் பயன் பெறுவோர் எண்ணிக்கையைக் கூடுதலாக்கும் நோக்கமும் உள்ளது. பணிபுரியும் பெண்கள்

விடுதிகளை நடத்துவதற்குத் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்காக மத்திய அரசு மானியத்துடன், மாநில அரசின் உதவித்தொகையும் இதுவரை 17 தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மாநிலம் முழுவதிலும் 50 சமூக நலக் கிளைகள் உள்ளன. இதில் சமூக நலத்திட்ட அமைப்பாளர்கள் காலையில் புகுமுக ஆதாரக் கல்வி வகுப்புகள் நடத்துகின்றன. மாலையில் குடும்பக்கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு, உடல்நலம், சுகாதாரம் போன்ற கலைகளைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டுத் தையற் பயிற்சி, பாய் முடைதல், தையல் இலைகள் தைத்தல் போன்ற குடிசைத் தொழில்களை முதிய மகளிருக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். மகளிர், குழந்தைகளுக்கான குறைந்தளவுத் திட்டம் கிராமப் பகுதிகளில் உள்ள பெண்கள் பற்பல சமூக-பொருளாதார வேற்றுமைகளை மறந்து, மகளிர் மன்றங்களில் ஒன்று கூடுவதற்காக வகுக்கப்பட்டது. தமிழகத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 மன்றங்கள் வீதம் 11,220 மன்றங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

1974-75-ஆம் ஆண்டிலிருந்து சிறப்புச் சத்துணவுத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊட்டச்சத்துக் குறைவினால் நலிவுற்ற சிறார்கள், குறிப்பாக நகர்ப்புற-குடிசைப் பகுதிகளில் பள்ளி செல்லும் வயது அடையாத சிறார்களுக்குச் சத்துணவு வழங்குவது இதன் நோக்கமாகும்.

உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்காக அவர்களின் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு அவர்களுக்கென வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்கவும் இதற்காகப் பொது நலப்பணியில் ஈடுபடும் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பது பற்றியும் உடல் ஊனமுற்றோருக்காக ஒரு மாநில வாரியம் தனியாகச் செயல்பட்டு வருகிறது.

53 கருணை இல்லங்கள் தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளன. ஒரு குழந்தைக்கு ரூ. 12.50 வீதம் இவ்வில்லங்கள் இக் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஆகும் மொத்தச் செலவில் 25 சதவிகிதத்தை மானியமாக அரசு வழங்கி வருகிறது. இவ்வில்லங்கள் சில கோவில்களின் கூடுதல் நிதியினால் நடத்தப்பட்டு வருகின்றன.




தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம் தனியார் நிறுவனங்களை உருவாக்கி அவற்றை ஊக்குவித்து வளர்ச்சி பெறச் செய்வதில் முக்கிய பங்காற்றி வருகிறது. முக்கியமாக, மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் நலனுக்காகப் பரவலாகப் பணி புரியும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு உதவ இவ்வாரியம் பணிபுரிந்து வருகிறது.

மாநில அளவில் மைய அரசின் பரிந்துரையை ஏற்று, ஒரு குழு, பெண்கள் முன்னேற்றத்திற்காகச் சமீபத்தில் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. மகளிர் மேம்பாட்டிற்கு, குறிப்பாக, ஆதரவற்ற விதவைகளுக்கும் பிற மகளிருக்கும் உதவி செய்வதற்கு இந்த அரசு முன்னுரிமை அளித்துள்ளது. விதவைகளுக்காக வழிகாட்டி நிலையங்கள் தமிழகத்தில் தஞ்சை, கோவை, மதுரை, சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயுள் ஈட்டுறுதிப் பயன்களையும், வருங்கால வைப்புநிதிப் பயன்களையும் பெறுதல், குழந்தைகளை அனாதை இல்லங்களிலும் கல்வி நிலையங்களிலும் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவும் கல்வி வேலைவாய்ப்புப் பெறுதல் தொடர்பாகவும் விதவைகளுக்கு உதவும் பொருட்டும் இவ்வழிகாட்டி அமைப்பு, ஆலோசனை நல்கும்.

தற்போது 45 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவைகளுக்கு மட்டுமே உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. இந்த வரம்பு 40 வயதாக நடப்பாண்டு முதல் குறைக்கப்பட்டு, மேலும் 5,000 பேருக்கு உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரியிலும், மதுரையிலும் தையல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். சமூக நலத்துறையின் கீழ், மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சாக்கட்டி தயாரிக்கும் தொழிற் கூடங்கள் மூன்றும், மெழுகுவத்தி தயாரிக்கும் தொழிற் கூடங்கள் மூன்றும் தொடங்கப்படும். கதர், கிராமத் தொழில் நிறைவேற்றும் பல திட்டங்களில் ஆதரவற்ற மகளிருக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படும்.

குழந்தைகளுக்கான சத்துணவு சுகாதாரக் கவனிப்பு, பாலர் கல்வி ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைக் காப்பகங்கள் நம் மாநிலத்தில் ஏறக்குறைய 3,000 இருக்கின்றன. அடுத்த ஆண்டில் மேலும் 200 குழந்தைக் காப்பகங்கள் திறக்கப்படும்.

கண்பார்வை இல்லாதவர்களுக்கு நெசவுத்தொழில் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க நெசவுக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் ஏற்படுத்தப்படும். இதனால் 100 பேர் பயனடைவர்.

வாழ்க்கை நிலையில், கீழ் மட்டத்திலுள்ள பெண்கள், ஆதரவற்ற இளம் பெண்கள், சிறார்களின் வாழ்க்கை முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு மேற்கூறிய பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. பொது மக்களின் ஒத்துழைப்பையும், தொண்டு நிறுவனங்கள் தன்னலமற்ற பணிகளையும் அரசுக்குத் தந்து உதவுவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதனை உறுதுணையாகக் கொண்டு தமிழகம் மேலும் மேலும் வளரும் என நம்புகிறேன்.

**(1-4-78 அன்று வானொலியில் ஆற்றிய உரை).**

# பாவேந்தர் வாழ்விலே...

## மன்னர் மன்னன்

### பாடமும் பாராட்டும்

"இவர் நமது ராஜா! இவர் இங்கிலாந்தின் சக்கரவர்த்தி!''—

பாடத்தைப் படித்துக் கொண்டிருந்த மாணவனை நோக்கி ''நிறுத்தடா!'' என்கிறார் ஆசிரியர்.

பையனுக்குத் திகைப்பு; தவறாகப் படிக்கிறோமோ என்று அஞ்சி நடுங்குகிறான்.

ஆசிரியர் அவன் கையிலிருந்து புத்தகத்தை வாங்கிக் கொண்டு தலைமையாசிரியரின் அறைக்குள் நுழைகிறார்.

''நாம், குடியரசு ஆட்சி நடத்தும் பிரான்சு நாட்டின் பகுதியில் இருக்கிறோம். இங்கே சக்கரவர்த்தியை அதுவும் இங்கிலாந்தின் சக்கரவர்த்தியை நமது ராஜா என்று படிக்கும்படி மாணவர்களைப் பயிற்றுவிக்கிறோம்; இது எப்படி முறையாகும்?''

படபடப்பாகத் தமிழாசிரியர் இப்படிக் கேட்டதற்குத் தலைமையாசிரியரால் எந்த மறுமொழியும் கூற இயலவில்லை. ஆசிரியரே ஒரு முடிவெடுக்கிறார்; அந்தப் பாடத்தை மாணவர்க்குச் சொல்லிக் கொடுப்பதில்லை என்பதாக!

தமிழாசிரியரின் இந்த அடாவடித்தனத்தை மேலதிகாரியிடம் தலைமையாசிரியர் சொன்னபோது ''அப்படிப்பட்ட ஆசிரியரை நான் பார்க்க வேண்டும்'' என்று சொல்லிநேரே வந்தார் பள்ளிக்கு!

தலைமை ஆசிரியர் உட்பட எல்லாருக்கும் மகிழ்ச்சி தாளவில்லை. ''சரியாக மாட்டிக் கொண்டார் ஆசாமி!'' என்று சொல்லிக் கொண்டார்கள் தமக்குள்! வந்த அதிகாரி இப்படிக் கூறினார்;



''சுப்புரத்தினம், குடியரசுக் கொள்கையின் வித்துக்களை இளையார் உள்ளத்தில் சரியாக ஊன்ற வேண்டுமே என்ற நல்ல நோக்கம் கொண்ட உன்னைப் பாராட்டுகிறேன். பிரிட்டிஷ் ஆட்சி நடைபெறும் சென்னையில் இந்தப் பாடங்களைப் பயிற்றுவிப்பது சரியாக இருக்கலாம். அதைக் கண்மூடித்தனமாகப் புதுவையிலும் சொல்லிக் கொடுத்த பேதைமை இன்றோடு ஒழியும்!'' என்று பாராட்டிச் சென்றார் அதிகாரி.

மக்களுக்கே ஆட்சி உரியது என்ற மாபெரும் கொள்கையை அன்றே உணர்ந்து பாடி-பாடுபட்ட அந்த சுப்புரத்தினம்தான் புரட்சிக் கவி என்று தமிழ் நெஞ்சங்களால் போற்றப்படுகின்றார்.

### கடுத்த முகமும் கனிச்சாறும்!

மதுரையின் கடைத்தெருவில் நடந்து கொண்டிருக்கிறார் கவிஞர்; சின்னக் குழந்தையைப் போல் நடுவீதியில் நடக்கிறார்; ஒவ்வொரு கடையின் பெயர்ப் பலகையையும் படிக்கிறார். ''திண்டுக்கல் பூட்டு. கைப்பிடிகள் இங்கு விற்கக்கூடும்!'' என்று எழுதப்பட்டிருக்கிறது. பல்வேறு கடைகளிலும் இப்படியே ''விற்கக்கூடும்'' என்றே எழுதியிருக்கிறார்கள்.

''அதென்னப்பா ''விற்கக்கூடும்?'' விற்கக்கூடாமலும் போவதுண்டோ!'' என்று நையாண்டியாக அல்ல-வியப்பாகக் கேட்கிறார். உடன் வந்திருந்த முல்லை முத்தையா, 'இந்த ஊரில் அப்படித்தான் எழுதறாங்க' என்று கூறுகிறார்.

இன்னும் சிறிது தொலைவு நடக்கிறார். ''காதிபந்தர்' படுகிறது, கவிஞர் கண்ணில்..! இன்னும் சில அடிகள், மேலும் நடக்கிறார். ''வித்யா மண்டல்'' என்னும் பெயர்ப்பலகை இருக்கிறது. அதன் அருகில் ஏதோ ஒரு 'பவன்!'

நடையில் ஒரு விரைவு காட்டுகிறார் கவிஞர். கண்ணிலே ஒரு கடுகடுப்பு. இயல்பாகவே விரைந்து நடக்கிறவர். இப்போது மேலும் விரைவு காட்டுகிறார். நானும் முல்லை முத்தையாவும் ஓட வேண்டியதாகிறது அவர் பின்னால்!

தங்கியுள்ள விடுதிக்குப் போனவுடனே ஏதோ எழுதத் தொடங்குகிறார். நெஞ்சு பதைக்கும் நிலை போலும்!

**தணிப் பரிதாம் துன்பமிது!**

**தமிழகத்தின் தமிழ்த்தெருவில்**

**தமிழ்தானில்லை.**

**பவன் மண்டல் முதலியன**

**இனியேனும் தமிழகத்தில்**
**பயிலா வண்ணம்**
**அவண்சென்று முழங்கிடுவீர் !**

என்றெல்லாம் தணலில் தோய்த் தெடுத்துத் ''தமிழ் இயக்கம்'' தோற்றுவிக்கிறார்; ஒரே இரவில் முடிகிறது ஒரு முழுநூல்! நமக்குக் கிடைக்கிறது கரும்பு தந்த தீஞ் சாறு!

**பொருந்தியது தாழ்ப்பாள்—**
**நிறைந்தது நெஞ்சம் !**

ஏலத்தில் வந்த ஒரு வீட்டை வாங்கினார் பாவேந்தர்; வருகின்ற விருந்தாளிகட்கு வசதியுள்ளதாக மாற்றும் வேலையைத் தாமே முன்னின்று கவனித்தார். முன்பக்கம் இருந்த முழு அறையொன்று கழிப்பறை-குளியலறையாக மாறியது. கதவுகள் இட்டுத் தாழ்ப்பாள் பொருத்தும் வேலை நடந்தது. தச்சு, கருமார், வண்ணம் தீட்டுவது, கொல்லூற்று வேலைகள் உள்பட எல்லாமே அறிந்தவர் குயில் சிவா. கவிஞரின் உள்ளம் அறிந்த உயிர் நண்பர். அவரும் துணையாக நின்றார்.

தாழ்ப்பாள் பொருத்தும் வேலையில், கவிஞர், தாமே இறங்கினார். மறையாணி மரத்தில் இறங்கவில்லை. ஏதேதோ செய்தார் கவிஞர். குயில் சிவா, உதவும் நோக்குடன் வந்தார். தமது தோல்வியை உடனே ஒப்புக் கொள்ள முடியுமா? எப்படியோ போய்த்தொலை என்று கூறி விட்டுப் போய்விட்டார், சிவா தாத்தா! இரவு வேளையாகி விட்டது. வழக்கம் போல் வந்தார் சிவா தாத்தா!'' சிவா! இந்த இழவெல்லாம் எனக்கு வரலே. தமிழ் தவிர வேறு எதுவும் தெரியலே எனக்கு!'' என்றார் கவிஞர். பறந்து போனார், சிவா; சில நொடிகளில் தாழ்ப்பாள் பொருத்தி விட்டார்.

கவிஞர் சொன்னார்; 'பாரப்பா, சிவா ரொம்பக் கெட்டிக்காரர்; பூட்டுத் திறப்பது, தாழ்ப்பாள் தைப்பது, இதெல்லாம் இவருக்கு நல்லாத் தெரியும்'' என்றார்.

சிவா சிரித்தார்-அப்படியும் அவருக்கு ஒரு மன நிறைவு. அதுவரையில் தனக்கெனச் சொந்த வீடு இல்லாத நண்பர் சுப்புரத்தினத்துக்கு ஒரு வீட்டை உருவாக்க முடிந்ததில் அவருக்கிருந்த மகிழ்ச்சி அளவிட முடியாதது.

**தொடக்கமும் முடிவும் தொண்டே !**

பாரதிதாசன் முதன் முதலாக உரையாடலும் பாடல்களும் அமைத்த தமிழ்த் திரைப்படம்: ''ராமானுஜர்''

'**மணிக்கொடி**' பத்திரிகைக் குழுவினர்களான பாரதி அன்பர்கள் சிலரின் முயற்சி இந்தப் படம்!

எழுத்தாளர் வ. ரா. அவர்களின் விருப்பப்படி புரட்சிக் கவிஞர் இதனை ஒப்புக் கொண்டார்.

ராமானுஜரின் சமுதாயக் கருத்தில் கவிஞருக்கு அதிக ஈடுபாடும் உண்டு. படம் வெளிவரவில்லை.

கடைசியாக நம் கவிஞர் கதை உரையாடல்-பாடல் அமைத்து வெளிவந்த படம். ''வளையாபதி.

மேலவர்-கீழவர் என்று பாகுபாடு செய்வதை ஒழித்துக் கட்ட உழைத்த சமய குரவரின் வாழ்க்கையை எழுதத் தொடங்கிய பாவேந்தர், இழிகுலமக்கள் என்பது இழிகுணத்தோரே என்பதை வலியுறுத்தித் தமது 'வளையாபதி' யில் முடித்தார் திரைப் படத் தொண்டினை!

# குயில் பாட்டுத் தோட்டம்!

புதுச்சேரிக்கு ஒரு மைல் வடக்கே, முத்தியாலுப்பேட்டை என்று ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரில் கிருஷ்ணசாமி செட்டியார் என்று ஓர் இளைஞர் இருந்தார். அவருக்குத்தான் வெல்லச்சுச் செட்டியார் என்ற அருமையான செல்லப் பெயரை பாரதியார் கொடுத்தது. இந்தச் செட்டியாருக்கு, முத்தியாலுப் பேட்டைக்கருகாமையில் ஒரு தோட்டமிருந்தது. இந்தத் தோட்டந்தான் பாரதியாரின் ''குயில் பாட்டு''க்குக் காட்சி ஸ்தலம். இந்தத் தோட்டத்தில் ஓர் அற்புதம் நடந்தது.

குழந்தை பிறந்தவுடன் சோர்ந்து நித்திரையில் ஆழ்ந்து விடும் தாய்மார்களைப் போலக் கவிதை பிறந்தவுடன் பாரதியார் சோர்ந்துபோய், மண் தரையில் படுத்துக் கொள்ளுவார். தலைக் குயரமாய் எதையும் வேண்டார். எதையும் கொடுக்க, எங்களுக்குத் தைரியமும் உண்டானதில்லை. இயற்கைத் தாய் நர்த்தனம் செய்த உடலுக்கு இயற்கையான சயனந்தான் வேண்டும் போலும்!

'பாரதிதாஸன்' என்ற புனை பெயருடன் ஆச்சரியப்படத்தக்க தமிழ்க் கவிதை எழுதும் வாத்தியார் கனகசுப்புரத்தினம் பாரதியாருக்குத் தோழன்; சிஷ்யன். மேற்சொன்ன தோட்டத்தைப் பற்றி அவர் அதிசயமான சேதி ஒன்றைச் சொன்னார்.

**காற்றடிக்குது கடல் குமுறுது**
**கண்ணை விழிப்பாய் நாயகமே**

என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அது புதுச்சேரியில் அடித்த பெரும் புயல் சம்பந்தமாகத்தான். இன்றைக்குச் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன், புயல் அடித்தது. தமிழ் நாடு முழுதும் வெள்ளமும் புயலுமானது. உடைத்துக் கொள்ளாத ஆறுகள், ஏரிகள் இல்லை. மரங்கள் சடசடவென்று சரிந்து வீழ்ந்தன. ''காடெல்லாம் விறகான செய்தி'' ஆயிற்று நாடு முழுதும்.


புதுச்சேரி, கடற்கரை நகரம்; புயலால் நேர்ந்த சேதத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. ஒதியஞ்சாலை என்ற தோட்டத்திலிருந்த அழகான மரங்கள் எல்லாம் தலை குப்புற வீழ்ந்தன; தந்திக் கம்பங்கள் முறிந்து போயின; கட்டடங்கள் சரிந்தன; கூரைகள் அப்படியே, கூடாரம் அடித்ததுபோல, உட்கார்ந்து விட்டன. நகரம் முழுவதும் 'பேய் மேய்ந்த' காட்டைப் போலத் தோற்றம் அடைந்தது.

இவ்வளவு பயங்கரமான சேதத்தின் நடுவே, முத்தியாலுப் பேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திலிருந்த மரங்கள் மட்டும் விழவில்லை என்று பாரதிதாஸன் சொன்னார். எனக்கும் அவருக்கும் அற்புதத்தில் நம்பிக்கையில்லை; ஆனால், நிகழ்ந்ததை நம்பித்தானே ஆக வேண்டும்? இந்த மரங்கள் தப்பித்துக் கொண்ட காரணத்தை முழுவதும் ஆராயாமல், அற்புதம் என்று அதைக் கொள்ள என் மனம் கூசுகின்றது. தனது ரகசியத்தைப் பாரதியாருக்குப் போதித்த இடம் கெடாமல் இருக்க வேண்டும் என்பது இயற்கைத் தாயின் விருப்பமோ, என்னவோ என்றுகற்பனை கலந்து பேசலாம். ஆனால் மனிதனுடைய அறிவிலே அற்பமும் மகத்துவமும் கலந்து நிற்கின்றன. இயற்கையின் சூதை அற்ப அறிவினால் அளக்க முடியாது; அளப்பதற்குக் கவிதை உள்ளம் வேண்டும்.

—*1944* ஆம் ஆண்டில் அறிஞர் வ. ரா. அவர்கள் எழுதி வெளிவந்த 'மகாகவி பாரதியார்' என்னும் நூலிலிருந்து.



# ஆர்வமூட்டும் ஆட்சிமொழி




கோ. முத்துப்பிள்ளை

தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு ஆட்சி மொழி வகுப்புகளைப் பல ஆண்டுகள் நடத்தும் நல்வாய்ப்பைப் பெற்றவன் என்னும் முறையில் ஒரு சில கருத்துக்களை விளக்க விழைகின்றேன்.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்று பேசி வந்த நாம் இன்று ஆட்சித் தமிழ் என்று பேசுகின்றோம். ஆட்சிமொழி என்று சொல்வதை விடுத்து ஆட்சித் தமிழ் என்று சொல்வதுதான் நம் முன்னோர் செய்துள்ள வகைப்பாட்டிற்கு ஏற்றதாக அமைகின்றது.

### ஆட்சிமொழி அகராதிகள்

நம் அன்னை மொழியாகிய தமிழ்மொழி ஆட்சிமொழியாக மலர்வதற்குத் துணையாக இருக்குமாறு நாம் பல ஆட்சிமொழி அகராதிகளை வெளியிட்டுள்ளோம். பெரிய அகராதி ஒன்றும் பல துணை அகராதிகளும் உள்ளன. அரசு வெளியிட்டுள்ள ஆட்சி மொழி அகராதிகளைத் தவிர, தனியார்களும் பல அகராதிகளை வெளியிட்டுள்ளனர்.

இவற்றைப் போன்ற அகராதிகள் ஆங்கில மொழியில் உள்ளனவா? அனைவரும் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென நான் அவாவுறுகின்றேன். ஆங்கில மொழியிலே வகைவகையான அகராதிகள் கணக்கின்றிக் காணப்படுகின்றன. எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் அந்தப் பொருளைப் பற்றித் தனி அகராதிகள் உள்ளன. ஆனால், ஆட்சிமொழிக்கென்று தனியான அகராதிகள் உள்ளனவா என்பதுதான் என் வினா. இருக்க முடியாது. ஆங்கிலேயர் இயல்பாக, வழக்கமாகப் பேசுவதும் எழுதுவதும்தான் ஆட்சி மொழி! அங்கே இதற்கென்று தனி அகராதிகள் இல்லை!

நாமோ ஆட்சிமொழிக்கென்று அகராதிகள் வெளியிடுவதில் அக்கறை செலுத்தியும் போட்டி போட்டும் வருகின்றோம். இன்றுள்ள நிலையில், ஆட்சிமொழி அகராதிகள் தேவைதான். மேலும் சில அகராதிகள் புதிதாகக்கூட வர வேண்டியதுதான். ஆனால், ஆட்சிமொழிக்கென்று அகராதிகளின் தேவை என்றைக்கு அற்றுப் போகின்றதோ அன்றைக்குத்தான் நாம் முழு நிறைவு பெறுவோம். அந்தப் பொன்னாளை நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்ப்போமாக!

### அருந்தமிழ்ச் சொற்கள்!

தமிழின பெருமையை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இது குறித்து எத்தனையோ செய்திகளை அடுக்கடுக்காக நாம் எடுத்துச் சொல்லி வருகின்றோம். அவற்றையெல்லாம் மீண்டும் மீண்டும் தெரிவிக்கத் தேவையில்லை. ஆயினும் தமிழ்மொழியானது மிகவும் உயர்ந்த மொழி என்னும் செய்தி மட்டும் நம் உள்ளத்திலே உறுதியாக உறைத்து நிற்க வேண்டும். அப்போதுதான் அருமையான கட்டடங்களை நாம் அமைத்துக் கொண்டே போக முடியும். Opportunity என்னும் ஓர் ஆங்கிலச் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதன் பொருளை ஆங்கிலத்தில் Favourable juncture, good chance, opening என்றெல்லாம் விளக்குவார்கள். இதே முறையில் தமிழில் விளக்க முடியுமா என்று ஐயுறத் தோன்றும். தமிழில் சொல்லும்போது, ''செவ்வி, தறுவாய், வேளைவாய்ப்பு, வாய்ப்பு வேளை, நல்வாய்ப்பு, வாய்ப்பு வழி'' என்றெல்லாம் கூறமுடிகின்றது. எத்துணைப் பொருத்தமாக அமைந்துள்ளன இந்த அருந்தமிழ்ச் சொற்கள்? இவற்றுள், ''செவ்வி'' என்னும் ஒரு சொல்லை மட்டும் எடுத்துக்கொள்வோம். இதற்கு எத்தனை பொருள்கள் உள்ளனவென்று உரைக்கவும் வேண்டுமோ? 'ஏற்ற சமயம், காட்சி, மலரும் பருவத்திலுள்ள அரும்பு, பக்குவம், புதுமை, அழகு, சுவை, வாசனை, தன்மை, தகுதி'' என்னும் எத்தனையோ பொருள்கள். இதற்கு மேலும் விளக்கங்கள் வேண்டுமோ? தமிழின் வளத்தைப் பற்றியும் இனிமையைப் பற்றியும் யாருக்கும் எந்தவித ஐயப்பாடும் இருப்பதற்கு இடமே இல்லை.

### முன்னணியில் நாம்

ஆனால், அதே சமயத்தில் ஆங்கிலம் வளர்ந்துள்ள வகையையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். ஒப்பு நோக்குவதற்காக நான் இதைக் குறிப்பிடவில்லை. அளவினை அறிந்து கொள்வதற்காகவே குறிப்பிடுகின்றேன். ஆங்கிலம் எல்லாத் துறைகளிலும் செழித்து வளர்ந்துள்ளது. இன்று நம்முடைய ஆசையும் இப்படித்தான் இருக்க வேண்டும். நமதருமைத் தமிழன்னை இதேபோன்று துறைதோறும் துறைதோறும் வளர்ச்சியுறுதல் வேண்டும். இலக்கியத் துறையில் நம்மைத் தோற்கடிக்கக் கூடியவர் யாருமே இல்லையென்று சொல்லலாம். அன்றும் இன்றும் நாம் முன்னணியில் நிற்கின்றோம். ஆனால், பொறியியல், மருந்தியல், தொழில் நுட்பவியல் போன்ற பல்வேறு துறைகளில் நம்முடைய நிலை, மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து வருகின்ற ஒரு நிலையாகவே அமைந்துள்ளது.

### அந்த பொன்னாள்!

எல்லாத் துறைகளிலும் ஏற்கெனவே வளர்ந்துள்ள காரணத்தால், ஆங்கிலத்தில் இன்று எத்தனை சொற்கள் இருக்கின்றன, என்று கணக்கிடுதலே கடினமாக இருக்கின்றது. ஆர்வலர் சிலர், முப்பது இலட்சம் சொற்கள் இருப்பதாகச் சாற்றுகின்றனர்! (ஆதாரம்: Our wonderful world-Volume 13) நிதானப் போக்குடையவர்களோ குறைந்தது பத்து முதல் பதினைந்து இலட்சம் சொற்கள் இருக்கும் என்று கூறுகின்றனர். இந்தக் குறைந்த அளவு கணக்குக்கூட, நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றதல்லவா? இன்றைய நிலையில் தமிழில் எத்தனை சொற்கள் இருக்கின்றன என்று சரிவரக் கணக்கிடுதல் இயலாதென்றே சொல்ல வேண்டும். சில ஆண்டுகளுக்கு

முன்னர் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதி ( Tamil Lexicon ) இருந்த போதிலும், அரசின் சார்பில் இப்போது தொகுக்கப் பெற்று வரும் சொற்பிறப்பியல் அகராதி வந்த பிறகுதான் சரியான கணக்கு தெரியவரும். ஆட்சித்துறைத் தமிழ் என்னும் ஒரு துறையை எடுத்துக் கொண்டால், இன்று நம் அறிஞர்கள் ஆயிரமாயிரம் புதிய சொற்களை உருவாக்கியுள்ளனர். இவற்றையெல்லாம் புதிய கணக்கில் சேர்க்க வேண்டும். புதிய கலைகளைப் பொறுத்தவரையில் கூட, பல ஆயிரம் சொற்களை நம் ஆசிரியர்கள் புதிதாக அமைத்துள்ளனர். சட்டமொழி ஆணையமும் பல்லாயிரக் கணக்கான சட்டச் சொற்களைப் புனைந்து வருகின்றது. இவை யாவற்றையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறெல்லாம் கணக்கிட்ட பிறகும், நம் கணக்கு குறைவானதாகவே இருக்கும். எனினும் நாம் கடுநடை போட்டு வருகிறோம்! ஆங்கிலத்தோடு போட்டியிடும் நாள் அண்மையில் தான் இருக்கின்றது. அந்தப் பொன்னாள் விரைந்துவர அனைவரும் பாடுபட வேண்டும்.



### கங்கணம் கட்டிக் கொள்வீர் !

ஆங்கிலம் வளர்ந்துள்ள வகைக்கு இரண்டொரு எடுத்துக்காட்டுகளைத் தரலாம். புயல் என்னும் சொல்லை எடுத்துக் கொண்டால் ஆங்கிலத்தில் Storm, Cyclone, Gale, Gust, Hurricane, Typhoon என்று பலவகையாக்கிச் சொல்கின்றார்கள். இவற்றைத் தமிழில் முறையே, ''புயல்காற்று, சுழற்காற்று, கடுங்காற்று, வன்காற்று, சூறுவளி, கடும்புயல்' என்று கூறலாம். இந்தச் சொற்களைக் கருத்துக்கு ஏற்ப, மேலும் செப்பம் செய்யலாம் என்று தோன்றுகிறது. 'பனி' என்னும் சொல்லைப் பார்த்தால் Frost, Mist, Snow, Fog, Dew என்றெல்லாம் சொல்கின்றார்கள். இவற்றை முறையே 'உறைபனி, மூடுபனி, பனிமழை, மூடுபனி, பனித்திவலை'' என்று சொல்லலாம். இந்த மொழி பெயர்ப்புகளையும் செப்பம் செய்ய வேண்டும். Television என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதனைத் ''தொலைக்காட்சி'' என்று அழகாக மொழி பெயர்த்துள்ளோம். ஆனால் அதற்கு மேலும் அவர்கள் Television Terms என்று நீண்டதொரு பட்டியலை நீட்டுகின்றார்கள். இதனை எட்டிப்பிடிப்பது எப்போது? எதற்கும் ஈடு கொடுக்கத் தமிழ் அறிஞர்கள் கங்கணம் கட்டிக் கொள்ளல் வேண்டும்.

நமக்கு உள்ள வாய்ப்புகள் ஏராளம். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பழகி வந்துள்ள மொழி நம் அருமைத் தமிழ்மொழி. நினைப்பிற்கு எட்டாத காலந்தொட்டு நிலைத்து நிற்பது இந்த மொழி. இந்த மொழிக்கு ஈடாக எந்த மொழியும் இல்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நம் அன்னையர் இனிமையைக் குழைத்துக் குழைத்து ஊட்டிய மொழி இந்த மொழி. ஏர்த் தொழிலுக்கு நீர் உதவும் நீர்நிலைக்கு ''ஏரி'' என்று சுருக்கமாகப் பெயரமைத்தனர் நம் முன்னோர். மக்கள் சேர்ந்து வாழும் இடம் இரண்டே எழுத்தால் 'சேரி' என்று ஆகியது. நீரில் வாழும் உயிர்களைக் குறிப்பிட விரும்பிய பட்டினத்தார் 'நீரி' என்னும் அழகிய சொல்லை உருக்கி வார்த்துள்ளார். ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை என்னும் நிலையில் இருப்போரை 'அலி' என்று கூறுகிறோம். பொருளேதும் இல்லாது புலம்புவோரை 'இலி' என்று சொன்னாலே போதும். Orphanage என்னும் ஆங்கிலச் சொல்லை விரித்துப் படித்தால் Orphan Home என்று ஆகும். Orphanage என்பதற்குத் தமிழ் என்ன என்று நீண்டநேரம் பேச்சு அடிபட்டது. ''திக்கற்றவர் இல்லம்'' 'ஆதரவற்றவர் இல்லம்' என்றெல்லாம் அமைத்துப் பார்த்தோம். Poor Home என்றால் ''ஏழையர் இல்லம்'' என்கின்றோமே, Orphanage என்றால் 'இலியர் இல்லம்' என்றுரைத்தால் இனிக்காதா?



### தமிழில் இருக்கிறது !

வகுப்பில் ஒரு நண்பர் கேட்டார். ''ஐயா, Ignorance, Innocence ஆகிய இரண்டு சொற்களையும் தமிழில் எப்படிச் சொல்வது? Ignorance என்னும் சொல்லிற்கு உடனே சொல்லி விட்டேன். ''அறியாமை''. ஆம். இது நமக்கு நன்றாகத் தெரியும். எனவே உடனே ஓடிவந்துவிட்டது! Innocence என்னும் சொல்லை எடுத்துக் கொண்டால், 'நெஞ்சில் இருக்கிறது, ஆனால் வாயில் வரவில்லை'



என்னும் நிலைதான் ஏற்பட்டது. ''தமிழில் இருக்கிறது, நமக்கு வரவில்லையே'' என்று வருந்தினேன். நீண்ட நாட்கள் கழித்துத்தான் தோன்றியது. Innocence வேறெதுவும் இல்லை. ''ஏதுமறியாமை'' தான்.

### முந்துவோம் வாரீர் !

Rubber என்னும் சொல் ஏளனம் செய்வோரின் இதழ்களிலே எக்காளமிடும் ஒரு சொல். ''ரப்பர்'' என்று எழுதுவீர்களா அல்லது இலக்கண முறைப்படி ''இரப்பர்'' என்று எழுதுவீர்களா என்று கேட்பர். 'அழிப்பம், தேய்ப்பம்' என்னும் சொற்களை ஆசிரியர்கள் பயன்படுத்திப் பார்த்தனர். Rub என்னும் ஆங்கிலச் சொல்லின் அடியாக Rubber வந்தது என்பது தெரிகிறது. ஆனாலும் ''தேய்ப்பம்'' பொருந்தவில்லை என்பார்கள். நிதித்துறையைச் சேர்ந்த நண்பர் ''ஐயா, மென்மைப் பொருள் என்னும் அடிப்படையில் மென்மம் என்னும் சொல்லைப் பயன்படுத்தலாமே'' என்றார். எனக்கு ஏற்பட்ட இன்ப உணர்ச்சிக்கு அளவே இல்லை. ''எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது'' என்னும் உரை எத்துணை உண்மையான உரை!



தமிழ்நாட்டரசு ஆட்சி மொழியிலே அளவற்ற அக்கறை கொண்டுள்ளது. ஆங்கிலத்தில் உள்ளதாகச் சொல்லப்படும் முப்பது இலட்சம் சொற்களைக்கூட நாம் முந்திக்கொண்டு சென்று விடுவோம்!



# முதலைகளின் விசித்திர வாழ்க்கை

டாக்டர் டி. சுப்பிரமணியன்,
விரிவுரையாளர் (உயிரியல்),
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

முதலைகள் ஊர்வனவற்றில் மிகப் பெரிய உடல் அமைப்பைக் கொண்டுள்ளன. இருந்த போதிலும் அவற்றின் குள்ளமான கால்கள் உடலின் பாரத்தைத் தாங்கும் சக்தியை இழந்திருப்பதால் முதலைகள் பொதுவாக நிலத்தில் வாழ்வதைவிட நீரில் வாழ்வதையே மிகவும் விரும்புகின்றன. முதலைகள் வாழும் நீர்நிலைகள் வறண்டு விடும்போது அவை வெகுதூரம் நிலத்தில் ஊர்ந்து சென்று சதுப்பு நிலங்களிலும் காடுகளிலும்கூட உறைவதுண்டு. நீரில் நீந்துவதற்கு முதலைகளின் உறுதியான வால் ஒரு துடுப்பு போலப் பயன்படுகிறது. முதலையின் உடலில் காணப்படும் கொம்புநிகர் செதில்கள் கவசம் போல் உடலைப் பாதுகாக்கின்றன.

முதலையின் தாடைகளில் அமைந்துள்ள குழிகளில் நீண்டு வளர்ந்த கூர்மையான பற்கள் இருக்கின்றன. இவை தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்படும் திறனைப் பெற்றுள்ளதால், முதலைகள் எவ்வளவு வயதானபோதிலும் இரையைப் பிடிக்கும் சக்தியை இழந்து விடுவதில்லை. இத்தன்மையால் முதலைகள் மற்ற ஆட்கொல்லிகளிலிருந்தும் வேறுபடுகின்றன. முதலை வாயை மூடும்போது மேல் தாடையிலுள்ள பற்கள் மேல் தாடைக் குழிகளிலும் பொருந்தி விடுகின்றன. மேலும், முதலைக்கு வாயைத் திறக்கும் சக்தியைவிட மூடும் சக்தியே மிகுதியாக இருக்கிறது. எனவேதான், ''முதலையும் மூர்க்கனும் கொண்டதை விடா'' என்ற முதுமொழியே வந்தது போலும்.


முதலைகள் அவற்றின் இரையைப் பிடித்தவுடன், பாம்புகளைப்போல் அப்படியே முழுமையாக விழுங்குவதில்லை. ஏனென்றால் முதலையின் தொண்டை மிகவும் சுருங்கியதாக இருக்கிறது. எனவே, பிடித்த இரையை வாயில் வைத்துக் கொண்டே வேகமாகச் சுற்றியும் பக்கவாட்டில் தனது தலையை அசைத்தும், இரையைப் பாகம் பாகமாகக் கிழித்து விழுங்கி விடுகிறது.

எல்லா முதலை இனங்களும் மனிதர்களுக்குத் தீங்கு செய்வன அல்ல. உதாரணமாக கங்கை வாழ் கடியால் என்னும் முதலை மீன்களை மட்டுமே உண்ணுகிறது. ஆனால், பெருமுதலை எனப்படும் Crocodilus Porosus; இளம் பருவத்தில் நண்டுகளையும், பின்னர் மீன்களையும் பறவைகளையும் உண்டாலும் ஒருமுறை மனித ஊனின் ருசி கண்டுவிட்டால், பின்னர் அவை புலியைப் போல, மற்ற விலங்குகளைவிட மனிதனை வேட்டையாடுவதிலேயே அதிக நாட்டம் கொண்டுள்ளன. மனிதனைச் சாப்பிடுவதில் இணையற்ற இன்னொருவகை, நைல்நதி முதலைகளாகும். ஆப்பிரிக்காவில் விலங்குகளாலான வருடாந்திர மனிதச்சாவுகளில், இம்முதலைகள் ஏற்படுத்தும் சாவே அதிக எண்ணிக்கை உடையது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆண், பெண் முதலைகளை வெளித்தோற்றத்தால் கண்டறிவது கடினம். ஆண் முதலைக்கு ஒரு புணர் உறுப்புதான் உண்டு. இனப் பெருக்கப் பருவத்தில் நறுமணச் சுரப்பிகள் சுரக்கும் திரவத்தால் இவை தன் இனத்தை அடையாளம் கண்டுகொள்கின்றன. முதலைகளில் கருவுறல் உடலின் உள்ளே நடைபெறுகிறது. கருவுற்ற பெண் முதலை 20 முதல் 40 முட்டைகள் வரை இடுகிறது. கழிமுக முதலைகள் முட்டை இடுவதற்கு விரிவான கூடமைத்து அதைச் சுற்றிலும் அழுகும் தாவரங்களைப் பரப்பி வைக்கின்றன. இவ்வழுகிய தாவரங்கள் வெளிப்படுத்தும் வெப்பத்தால் முட்டையின் கரு வளர்கிறது. தாய் முதலை, கூட்டின் அருகிலே காவல் இருக்கிறது. மொண்ணை மூக்கு முதலையான Alligator - ன் இளம் உயிரி முட்டையிலிருந்து வெளிப்படும்

சதுப்பு நிலப் பெரு முதலையின் முழுத்தோற்றம்





குரோக்கடைலஸ் போரோசஸ் முழு உருவத்தோற்றம்

போது குரல் எழுப்புவது விந்தைக்குரியது. அக்குரலைக் கேட்ட மாத்திரத்தில் தாய் முதலை கூட்டை மூடிக் கொண்டிருக்கும் பொருள்களை அகற்றி அவை வெளிவர உதவுகிறது. இது வன்றோ உண்மைப் பெற்றோர் ஆதரவு! சிறிதுகாலம் தனது இளவல்களைப் பாதுகாத்துவிட்டுப் பின்னர் நீர்நிலைகளுக்கு அழைத்துச் செல்கிறது. இத்தகைய சில சந்தர்ப்பங்களில் குறிப்பாகத் தென் அமெரிக்க கைமான் (Caiman) முதலை, அவற்றை வாயினுள் வைத்து எடுத்துச் செல்கிறது. ஆயினும் இவை இட மாற்றத்திற்காக அவற்றைத் தூக்கிச் செல்கின்றனவா அல்லது அவற்றை விழுங்கும் செயலில் ஈடுபட்டுள்ளனவா எனத் திட்ட வட்டமாய்க் கூற முடியாது.

முதலைகளின் வாயமைப்பினைப் பார்த்தால், அது, விழுங்குவதற்கு ஏற்றதாகத்தான் இருக்கிறதே தவிர, விழுங்கியதை வெளிக்கொணர ஏற்றதாக இல்லை. எனவேதான் இச்செயல் தாயின் பாசத்தினலா அல்லது பசியினலா என்ற சந்தேகம் எழுகிறது.

இத்தகைய அதிசய வாழ்க்கையினைக் கொண்ட முதலைகள் இன்று அற்றுப் போகும் நிலையில் இருக்கின்றன என்பது வருந்துதற்குரியது. இவற்றின் விலை மதிக்கத் தக்க தோலிற்காக இவை வேட்டையாடப்படுவதே இந்நிலைக்கு முக்கியக் காரணம் ஆகும். இதைத் தடுக்கவே நமது அரசு தக்க தருணத்தில் சென்னையின் புறநகர்ப் பகுதியில் முதலைப் பண்ணை ஒன்றினை நிறுவி, முதலை இனத்தைக் காக்கச் சிறந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

**[நன்றி: வானொலி]**

## தொடர்ந்து படிக்க...


தமிழ்நாட்டில் 6-11 வயதுத் தொகுதிச் சிறார்களில் 93.4 விழுக்காட்டினரும், 11-14 வயதுத் தொகுதிச் சிறாரில் 56.8 விழுக்காட்டினரும் இதுவரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1977-78-ஆம் ஆண்டில் இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 3.21 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1977-78-ஆம் ஆண்டில் இருந்து 33,104 தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 65.85 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,978 ஆகும். ஆசிரியர், மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

தொடக்கப் பள்ளியில் சேரும் மாணவ மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே பெரும் எண்ணிக்கையில் பள்ளியிலிருந்து நின்றுவிடும் நிலையை மாற்ற அரசு முனைந்துள்ளது.

முதல் வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5-ஆம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்கின்றனர். மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்டு நின்றுவிடுகின்றனர்.

தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்களும், கற்பலகைகளும் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ, மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு, கல்வி வல்லுநர்களின் கருத்தைப் பின்பற்றி, தொடக்கப் பள்ளிகளில் முதல் சில வகுப்புகளிலாவது ஆண்டிறுதித் தேர்வில் மாணவர்கள் எவரையும் தோல்வியுறச் செய்யாமலிருப்பதும் ஓரளவு பரிகாரமாகும்.

1977-78 முதல் 1-3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறையைச் செயல்படுத்த அரசு கருதியுள்ளது. அதாவது, எடுத்துக்காட்டாக, 1977-78-ஆம் ஆண்டில் 1/2/3 வகுப்புகளில் பயில்வோர் அனைவரும் 1978-79-ஆம் ஆண்டில் 2/3/4 வகுப்புகளுக்கு அனுப்பப்படுவர். அதே நேரத்தில் கீழ் வகுப்புகளிலும் புகட்டப்படும் கல்வியின் தரம் நல்ல முறையில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும், அவ்வகுப்புகளிலும் பயிலும் மாணவர்களின் படிப்பறிவு வளர்ச்சியை அவ்வப்பொழுது மதிப்பிட்டு, கவனம் தேவையான மாணவர்களுக்குக் கூடுதல் கவனம் செலுத்திடச் செய்யவும், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.




**கல்வி முறையில் புதிய மாற்றங்கள் வரப்போகின்றன. பள்ளிப் படிப்பை 10 ஆண்டுகளாக்கி அதற்குமேல் பள்ளிப் படிப்புக்கும், கல்லூரிப் படிப்புக்கும் இடையே உயர்பள்ளிப் படிப்பென்று இரண்டு ஆண்டுகள் படிக்கச் செய்து, பிறகு பட்டப் படிப்பை மூன்று ஆண்டுகள் எனச் செய்து, புதிய கல்விமுறை அமலுக்கு வருகிறது. இதுதான் 10+2+3 என்ற புதிய கல்வி முறை! இந்த முறையின் பயன்கள் குறித்து, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் விளக்கியுள்ளார்கள்.**

டாக்டர்
## எச். எஸ். எஸ். லாரன்ஸ்
**பள்ளிக் கல்வி இயக்குநர்**

ஜூன் திங்கள், 1978 முதல் தமிழகத்தில் அறிமுகப்படுத்த விருக்கும் புதிய கல்வி அமைப்பு (10+2+3) கல்வியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இந்திய மக்களின் ஆவல், தேவைகள் ஆகியவற்றிற்கு இது பொருந்தும். பழைய பொருத்த மில்லாத முந்தைய கல்வி முறை யின் குறைகளைக் களைவதற்கு இப் புதிய முறை ஒரு பொன்னான வாய்ப்பாக அமையும்.

எந்த ஒரு கல்வித் திட்டத்தின் தரமும், இன்றியமையாத நான்கு அடிப்படைக் கூறுகளைச் சார்ந்திருப்பதாகக் கல்விக் குழு தன் அறிக்கையில் குறிப்பிட்டுள் ளது:—

1. கல்விக்கூம்பு அமைப்பின் பற்பல நிலைகள்.

2. மொத்த காலத் தொடர்ச்சி யின் பற்பல நிலைகள்.

3. ஆசிரியர்களின் தரம், பாடத் திட்டம், கற்பித்தல் முறைகள், மதிப்பீடு.

4. கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்தல்.

புதிய கல்வி அமைப்பில், இந்த எல்லா அடிப்படைக் கூறுகளும் தொடர்புடையதாக அமைந்து, கல்வியில் மிகச் சிறந்த தர, விளைவை ஏற்படுத்தும்.

பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பி லும், பட்ட வகுப்பின் முத லாண்டிலும் கற்பிக்கப்படும் பாடப் பகுதிகளைச் சேர்த்து உயர் செகண்டரி நிலையின் பாடத்திட்டம் உயர்த்தப்படு கின்றது. பட்ட மேற்படிப்புடன் பி. ஈ. டி. பட்டமும் உடைய சிறந்த தகுதியுடைய ஆசிரி யர்கள் நியமிக்கப்படுவர். கூடு தல் கட்டடங்கள், அறிவியலுக் காக மூன்று தனியான ஆய் வகங்கள், நன்முறையில் அமைந்த நூலகங்கள் ஆகிய சிறந்த வசதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் செகண்டரி பள்ளிகளுக்கு, படிப்படியான திட்டத்தின்கீழ் அளிக்கப்படும். இந்த உயர் செகண்டரிக் கல்வியினால் முழு மையான தர உயர்வு ஏற்படும்.

மொழிகள், அறிவியல், கணக்கு, வரலாறு, புவியியல், உடற்கல்வி, கலை, கைத்தொழில், அறக்கல்வி ஆகியவை அடங்கிய பொதுக்கல்வி ஒவ்வொரு குழந் தைக்கும் கிடைக்க வேண்டும். கல்வி மறு அமைப்பில், முதல் பத்தாண்டுகளில் ஒவ்வொரு மாணவனும், மாணவியும் இத் தகைய பொதுக்கல்வியில், கருத் தூன்றி இருப்பர். ஒவ்வொரு குடி மகனும் 10 ஆண்டு, பொதுக் கல்வி பெற வேண்டும்.

**சிறப்புப் பயிற்சி என்ற கேள்வி** 10-ஆம் வகுப்பிற்குப் பிறகு, உயர் செகண்டரி நிலையில் எழு கிறது. பகுதி III-A-ன் கீழ் சிறப்புப் பயிற்சிக்கான பாடங் களையும், பகுதி III-B-ன் கீழ் சிறப்புப் பயிற்சிக்கான தொழில் பாடங்களையும் தேர்ந்தெடுக்கும் மனப்பக்குவம், மாணவர்களுக் குப் பத்தாம் வகுப்புத் தேர்ச் சிக்குப் பிறகே ஏற்படுகின்றது.


**தேசியக் கல்விக் குழு :** பள்ளி, கல்லூரி வகுப்புகளுக்கு ஒரே மாதிரியான அமைப்பை (10+2 +3) நாட்டின் எல்லாப் பகுதி களிலும் மேற்கொள்ளுவது மிகவும் விரும்பத்தக்கது என்று 1964-66-ல் கோத்தாரி தேசியக் கல்விக்குழு முடிவுக்கு வந்தது. 12 ஆண்டுகள் பள்ளிப் படிப்பு நிலை என்றும் உயர் செகண்டரிக் கல்வி தொழில்மயமாக இருக்க வேண்டும் என்றும் இக்குழு கருதி யது. இதனால், இந்நிலையில், 50 சதவீதம் சேர்க்கை, தொழில் முறையில் இருக்கும்.

**மத்திய ஆலோசனை வாரியம் :**

கல்விக்கான மத்திய ஆலோ சனை வாரியம், கோத்தாரி குழு வின் கருத்துக்களை அனுமதித் தது. மேலும், அது, தொழில் மயத்தை வலியுறுத்தியதோடு, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங் களும் ஒரே மாதிரியான கல்வி அமைப்பை மேற்கொள்ளுமாறு பரிந்துரையும் செய்தது. இந்தியா விலுள்ள பெரும்பான்மையான மாநிலங்கள், இந்தப் புதிய அமைப்பை மேற்கொண்டன. இந்தப் புதிய கல்வி அமைப்பைப்

பற்றி ஒருமித்த தேசியக் கருத்து உள்ளது என்று நாம் கூறலாம்.

பள்ளிகளில் இந்த உயர் செகண்டரி வகுப்புகள் அமைய வேண்டும். பத்து ஆண்டு எஸ். எஸ். எல். சி. வகுப்பை முடிக்கும் மாணவர்கள், மன எழுச்சியிலும், மனநிலையிலும், உடல் நிலையிலும் பெரிய கல்லூரி வகுப்புகளில், அதிகம் படித்த பேராசிரியர்கள் நிகழ்த்தும் விரிவுரைகளை, ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவத்தில் இல்லை! தனி நபர் கவனம், வழிகாட்டுதல், கிடைக்கக்கூடிய சிறிய வகுப்பறைச் சூழ்நிலை அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. இதனால் உயர் செகண்டரிக்கல்வி, பள்ளிகளுடன் இணைக்கப்பட வேண்டும். கல்லூரிகளுடன் இணைக்கப்படல் ஆகாது. கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும், பட்டப் படிப்பு நிலை, பட்ட மேற்படிப்பு நிலை ஆகிய உயர் கல்வியில் ஈடுபட வேண்டும்.



உயர் செகண்டரி நிலையைக் கிராமப் புறங்களில் அமைப்பதன் வாயிலாக, ஒருபுறம் பெற்றோர்களுக்குப் பணச் செலவு குறைகின்றது. மற்றொருபுறம், உயர் கல்வியால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. உயர் செகண்டரிக் கல்வியால், தொழில் திறமையுடன், தாமாக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிகின்றது.

மாற்றம் என்பது வாழ்க்கையின் சட்டமாகும். நாட்டில் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய எல்லா நிலைகளிலும் மாற்றத்தைக் காண்கிறோம். கல்வி முறையில் மாற்றம், மிக அவசரமாகத் தேவைப்படுகின்றது.

கல்வியானது, சமுதாயத் தேவைகளுக்கு ஈடுகொடுப்பதாக அமைந்தால், நற்பயன் விளையும். தற்போதுள்ள முறையில், பள்ளி உலகிற்கும், வேலை உலகிற்கும் பெரிய இடைவெளியுள்ளது. புதிய கல்வி அமைப்பினால், இத்தகைய பழங்கால குறைபாடுகளைக் களைய வாய்ப்பு ஏற்படும்.

புதிய அமைப்பு கல்வியின் நோக்கங்களைப் பற்றி யாவரும் அறிந்து கொள்ள வேண்டும். ஒரே மாதிரியான தேசீயக் கொள்கையை உருவாக்க முடியும். உற்பத்தியுடன் கல்வியை இணைக்க முடியும். மக்கள் பெருக்கத்தினால் இது தவிர்க்க முடியாததாகும். கல்லூரிகளில் சேர்க்கை நெருக்கத்தைக் குறைக்க முடியும். உயர் செகண்டரி நிலைக் கல்வியில் இரு வழிகள் உண்டு. ஒன்று படிப்புப் பற்றியது. மற்றொன்று தொழில் பற்றியது. தொழில் பாடங்களில் ஆர்வமும் திறமையும், உடைய மாணவர்கள் தம் விருப்பம்போல் எந்தப் பாடத்தையும் படிக்கலாம். உயர் செகண்டரிக் கல்வியைப் பரவலாக்க முடியும். இதனால் கிராமத்திலுள்ள மாணவர்கள், உயர் செகண்டரி நிலை நிறுவனங்களில் மேற்படிப்பைத் தொடர இயலும். கல்வியின் தரத்தையும் உயர்த்த முடியும்.

உயர் செகண்டரி நிலையில் முன்னேற்றம் காண, உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. கல்வித் துறையின் அரசு ஆணையரும், செயலரும் தலைவராக அமைந்த குழுவில் 16 உறுப்பினர்கள் இருந்தனர். இக்குழு, 10 முறை சந்தித்து அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுத்தது. உயர் செகண்டரி நிலைக் கல்வித் தொடர்பான எல்லா விஷயங்

## புதியதோர் உலகம் செய்வோம் !

புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இதுஎன தெ'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள் தனி'எனும் மனிதரைச் சிரிப்போம் :

இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண் டாம்எனில் அனைவரும் புசிப்போம்,

—பாவேந்தர் பாரதிதாசன்.

களிலும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஆலோசனை கூற, உயர் செகண்டரிக் கல்வி வாரியம் அமைக்கப்பட்டது. வழிகாட்டும் குழு ஒன்று, அலுவலர்களின் பணியை ஆய்வு செய்து, வழி காட்டியது. பாடத்திட்டக் குழுக்கள் அமைக்கப் பெற்றன. 250 உறுப்பினர்களுடன் கூடிய 32 குழுக்கள் நிறுவப்பட்டன.

உயர் செகண்டரி நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையைப் பற்றி ஈண்டுக் குறிப்பிட வேண்டும். ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளைத் தவிர்த்த 560 நிறுவனங்கள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, உயர் செகண்டரி நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

உயர் செகண்டரி நிலைக்கான பாட நூல்களை எழுதவும், ஆய்வு செய்யவும் 150 ஆசிரியர்களும், ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 42 பாட நூல்களை வெளியிடும். மற்ற மொழிகளுக்கும், பாடங்களுக்கும் ஆன நூல்கள் ஏற்கெனவே கிடைக்கக் கூடியவை வைக்கப்படும்.

உயர் செகண்டரிக் கல்வியில் தொடக்கத்தைப் பற்றியும், பாட முறை பற்றியும், தொழில் மயத்தைப் பற்றியும் விளக்கிட வேண்டும். புதிய உயர் செகண்டரி முதலாண்டு ஜுன் 1978-ல் தொடங்குகிறது. இரண்டாம் ஆண்டு ஜுன் 1979-ல் தொடங்குகிறது. இரண்டாண்டு படிப் பிற்குப் பிறகு, உயர் செகண்டரி நிலைக்கல்வி மாணவர்களின் முதல் தொகுதியினர் மார்ச் 1980-ல் பொதுத்தேர்வு எழுதுவார்கள்.

இப்புதிய முறையில் இரண்டு வழிகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. படிப்பு, தொழில், உயர் செகண்டரி வகுப்பு சிலருக்கு முடிவாகவும், மற்றவர்க்கு உயர் படிப்பின் ஆயத்தமாகவும் இருக்கும். படிப்பு முறைகள் இரண்டு குழுவிற்கும் ஏற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளன. உயர் செகண்டரி நிலையில், கற்றல் உலகிற்கும், வேலை உலகிற்கும் இடையேயுள்ள தடைகள் நீங்கும். இரண்டிற்கும் இடையே தொடர்பு உண்டாகும் கல்வியில் வேலை அனுபவப் பயிற்சிக்கு இடமுண்டு. ஒவ்வொரு குடிமகனையும் படைக்கும் தொழிலாளியாகவும், உற்பத்தித் தொழிலாளியாகவும் மாற்ற வேண்டும். தொழில் பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்தரம் உண்டு.

புதிய அமைப்பின் தொடர்புகளைப் பற்றியும், பின் தொடர் செய்கைகளைப் பற்றியும் சிறிது குறிப்பிட வேண்டும். இத்திட்டத்தினால் ஆசிரியர்கள் மிகுதியாகவுள்ள இவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும். மாணவர்கள் எளிதில் சென்று அடையுமாறு உயர் செகண்டரிப் பள்ளிகள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. போதிய இடவசதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அறிவியல் பாடங்களைக் கற்பிக்க, மூன்று தனி ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. இதற்குக் கல்லூரி இணைப்பையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ரூ. 50,000 மதிப்புள்ள அறிவியல் பொருள்கள் பள்ளியிலுள்ள ஆய்வகங்களுக்கும் அளிக்கப்படும். உயர் செகண்டரி நிலையில் உயர்த்தப்பட்ட பாடத் திட்டத்தை நடத்த ஆசிரியர்களுக்குப் புத்துணர்வுப் பயிற்சி அளிக்கப்படும். தொழில் படிப்பைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, பள்ளிகளிடத்தும், மேலாண்மைகளிடத்தும் விடப்பட்டுள்ளது.

இப்புதிய கல்வி அமைப்பினால் ஏற்படும் அனுகூலங்களைப் பற்றி யாவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இதனால் மாணவர்களிடத்து, தன்னம்பிக்கை உணர்வு வளரும். மாணவர்கள், உழைப்பின் உயர்வை உணர்வர். படித்து வேலையற்று இருப்பவர் எண்ணிக்கை பெருகாது, ஏனெனில், தொழில் கல்வி உள்ளது. கல்வியின் தரம் மேலும் உயரும். உயர் கல்விக்கு மாணவர்களைப் பக்குவப்படுத்த முடியும். ஆசிரியர்களுக்குத் தங்கள் பணியில் சிறந்த மன நிறைவு ஏற்படும். ஏனெனில், தரத்தில் சிறந்த மாணவர்களே, பல்கலைக்கழக முறைக்கு வருகின்றனர். எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியான கல்வி முறை அமைவதால், தேசிய ஒருமைப்பாடு வளரும். உயர் செகண்டரி பள்ளிகள் கிராமங்களில் ஏற்படுத்தப்படுவதால், நகர்ப்புறங்களுக்கு மாணவர்கள் படிப்புக்காகச் செல்வது குறையும் என்பது திண்ணம். கிராமத்திலேயே 12 ஆண்டுப் படிப்பு கிடைக்கும். இப்புதிய கல்வி அமைப்பிலுள்ள தொழில் கல்வியினால், மாணவர்கள் வேலையும் பெறுவர். இதனால் படித்த இளைஞர்களிடையே, தோல்வியையும் ஏமாற்றத்தையும் பெருமளவில் நீக்க முடியும்.

இந்தக் கல்விச் சீரமைப்பு ஆழமான பொருளுடைய குறிக்கோளை அடிப்படையாக உடையது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆய்வு அலுவலர்கள் ஆகியோரின் தெளிவு பெற்ற ஒத்துழைப்புடன், இந்த முக்கிய கல்வி சீர்திருத்தம், தமிழ்நாட்டில் வெற்றிபெறும் என நிச்சயமாக நம்பலாம்.

[சென்னை வானொலியில் 18-4-1978 அன்று ஆற்றிய உரை]

# தொழிலாளர்களின்

## கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு

கடமை—பாட்டாளிகளுடைய கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

—பேரறிஞர் அண்ணா




# இரத்தக் கொதிப்பு ஒழியட்டும்!

## உங்களுக்குத் தெரியுமா?

* உங்களது ஒரு கையின் முஷ்டி அளவிற்கே உள்ள உங்களது இருதயம் உங்களது உடலிலேயே மிக வலுவான தசைநார்களால் ஆனது

* உடலில் ஓடுகிற மொத்த இரத்தத்தின் அளவு சுமார் 6 லிட்டர்; அந்த 6 லிட்டர் இரத்தமும் உங்களது இருதயத்தின் வழியாக ஒரே நிமிடத்தில் உடலின் மற்றப் பாகங்களுக்குச் செல்கிறது. சராசரி நபரின் இரத்தக் கொதிப்பு அளவு 130 லிருந்து 150 வரைதான்.

* கடுமையான இரத்தக் கொதிப்பு பெரும்பாலான நேரங்களில் வெளிப்படையான எந்தவித அடையாளமும் இன்றி வந்துவிடுகிறது. சில நேரங்களில் சில எச்சரிக்கைகள் ஏற்படலாம். அவை தலைவலி, மயக்கம், சோர்வு, பொதுவான வலி மற்றும் படபடவென்ற திடீர் இதயத்துடிப்பு ஆகியவை. இத்தகைய எச்சரிக்கைகள் வரும் போது அவற்றை நாம் புறக்கணித்துவிடக்கூடாது. இதில் உள்ள சில அடையாளங்கள் மற்ற நோய்களுக்குப் பொருந்தும்; ஒரு டாக்டர்தான் கடும் இரத்தக் கொதிப்பா, இல்லையா? என்பதைக் கண்டுபிடிக்க முடியும்.

* குண்டாக இருப்பவர்களுக்குத்தான் கடுமையான இரத்தக்கொதிப்பு வரும்.

* நரம்புத் தளர்ச்சியால் இரத்தக்கொதிப்பு அதிகமாகும்.

* ஆரம்பத்திலேயே இரத்தக்கொதிப்பைக் கண்டுபிடித்து இடைவிடாது சிகிச்சை அளித்துக் கொண்டே வந்தால் கடும் இரத்தக்கொதிப்பைத் தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்.

## சில பயனுள்ள யோசனைகள்:

* உங்களது இரத்த அழுத்தத்தை அடிக்கடி சோதனை செய்து டாக்டரிடம் சிகிச்சை பெறுங்கள்.

* கடும் இரத்தக்கொதிப்பிற்கு இடைவிடாது சிகிச்சை அளிக்க வேண்டும். மருந்துகள், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள், உட்கொள்ள வேண்டிய உணவு முறைகள் ஆகிய எல்லாப் பிரச்சினைகளிலும் டாக்டரின் ஆலோசனையை அப்படியே பின்பற்றுங்கள்.

* உப்பினால் இரத்தக் கொதிப்பு அதிகரிக்கும். எனவே, உப்பைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

* பருமனாக இருந்தால் இருதயம் மிகக் கடுமையாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, உங்களது உடல் எடையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

* கவலை கொள்ளாதீர்கள், உணர்ச்சிவசப்படாதீர்கள். இவற்றால் இரத்தக் கொதிப்பு ஏற்படும். உடலும், மனமும் அமைதி கொள்ளும் சூழ்நிலையை அடிக்கடி ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

* போதுமான ஓய்வும், தூய்மையான காற்றும் அவசியம்.

* புகை பிடிக்காதீர்கள்! மதுவகைகளைத் தொடாதீர்கள்!

—[இவ்வாண்டு உலக சுகாதார நாளின் (7-4-78) முழக்கம் 'இரத்தக் கொதிப்பு ஒழியட்டும்' என்பதாகும்.]



# பட்டுக்கூடு உற்பத்தி பயனுள்ள தொழில்!

தமிழ்நாட்டில் குறிப்பாக பட்டு உற்பத்தி சேலம், தர்மபுரி கோயமுத்தூர் மாவட்டங்களில் ஆங்காங்கே குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் நடைபெற்று வந்தது. ஆனால், கடந்த ஐந்தாண்டுகளாகத் தமிழ்நாட்டில் பட்டுப் புழு வளர்த்தலும், பட்டுக்கூடு உற்பத்தியும் பரவலாக நடைபெற்று வருகின்றது. குறிப்பாக, கோயமுத்தூர், அவினாசி, பல்லடம் பகுதிகளில் கிணறுகள் வற்றி, தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாக, சோளம், ராகி, கம்பு, நிலக் கடலை, புகையிலை மற்றும் பருத்தி போன்ற பணப்பயிர்களை எதிர் பார்த்த பரப்பில் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு மங்கி விட்டது. இதனைச் சரிக்கட்டுவதன் வாயிலாகத் தற்பொழுது முசுக்கட்டை சாகுபடிக்கு வந்துள்ளது.

முசுக்கட்டைகளை மழைக்காலத்தில் நட்டுப்பராமரிப்புசெய்துவிட்டால் அவை வேரூன்றி நிலையாக நின்று தழைகளைக் கொடுக்கும். நீர்ப்பாசனம் தேவைக்கேற்பக் கொடுக்க முடியாத வறட்சிக் காலங்களிலும் முசுக்கட்டைச் செடியின் வேர் நிலத்தினுள் ஆழமாகச் சென்று விடுவதால் உடனடியாக வறண்டு போவதில்லை. ஆகவே, முசுக்கட்டைச்சாகுபடி பற்றியும், பட்டுக்கூடு உற்பத்தி பற்றியதுமான பொருளாதாரத்தை ஆய்வதன் பொருட்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகப் பொருளியல் துறை ஓர் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்விற்காக கோவை மாவட்டத்தில் கோயமுத்தூர், அவினாசி, பல்லடம், கோபிசெட்டிப்பாளையம், பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டைப் பகுதிகளிலுள்ள பட்டுக்கூடு உற்பத்தி செய்யும் 52 பண்ணைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்த ஆராய்ச்சியின் முடிவுகளின்படி, ஓர் எக்டேர் முசுக்கட்டைத் தோட்டம் நிறுவ, சராசரியாக ரூபாய் 1860.45 ஆகிறது. இப்படி நிறுவிய தோட்டம் ஐந்தாண்டுகளுக்கு மறுதாம்பாக விடமுடியும் எனவும், மேலும் சரியான பராமரிப்பும் கவனமும் செலுத்தினால் 12 ஆண்டுகளுக்கு மறுதாம்பாக விடமுடியும் எனத் தெரிய வருகிறது.

பட்டுக்கூடு உற்பத்தியின் வரவு செலவை ஆராயும்பொழுது, ஓர் எக்டேர் முசுக்கட்டைப் பயிரிலிருந்து கிடைக்கும் தழைகளை உபயோகித்துப் பட்டுக்கூடு உற்பத்தி செய்ய ஆகும் மொத்தச் செலவு ரூ. 13,451.64. இந்த மொத்தச் செலவில் நடப்புச் செலவு ரூபாய் 9,939.61 (73.89 விழுக்காடு) எனவும், நிரந்தரச் செலவு ரூபாய் 3512.03 (26.11 விழுக்காடு) எனவும் தெரிய வருகிறது. தோட்டம் பராமரிப்பதற்கும், மற்றும் பட்டுப் புழு வளர்ப்பிற்கும் மனித உழைப்பிற்கு ஆகும் செலவு மொத்தச் செலவில் 37.57 விழுக்காடு எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தமனித்உழைப்பிற்கு ஆகும் செலவைக் காணும்பொழுது, பட்டுக்கூடு உற்பத்தியின் மூலம் கிராமப்புற வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், வேலையின்மையைக் குறைக்கவும் முடியும் எனத்தெரிய வருகிறது. ஓர் எக்டேர் முசுக்கட்டை சாகுபடி செய்து சராசரியாக 894.50 கிலோகிராம் பட்டுக்கூடு உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலம் பெறும் வருமானம் ரூபாய் 23,573 ஆகும். ஒரு கிலோ கிராம் பட்டுக்கூடு உற்பத்தி செய்ய ஆகும் செலவு ரூபாய் 15.04 எனவும், மற்றும் நிகரலாபம் ஒரு கிலோ கிராமுக்கு சராசரியாக ரூபாய் 11.31 எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் முடிவுகளின்படி முசுக்கட்டை சாகுபடி செய்து, பட்டுக்கூடு உற்பத்தி செய்வதன் மூலம் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் முழு நேர வேலை வாய்ப்பினை அளிக்க முடியும் எனத் தெரிய வருகிறது. முசுக்கட்டைத் தோட்டம் நிறுவுதல், பராமரிப்பு மற்றும் பட்டுப்புழு வளர்த்தல் ஆகியவற்றிற்கு மனித, எருது உழைப்பு பெரும் அளவில் தேவைப்படுகின்றது.

தோட்டம் நிறுவுதல், பராமரிப்பு மற்றும் பட்டுக் கூட்டுப் புழு வளர்ப்பு, ஆகியவற்றிற்கு 606.90 ஆண் உழைப்பு நாட்களும், 827.58 பெண் உழைப்பு நாட்களும் தேவை எனக் கணக்கிடப்பட்டது. மொத்த மனித உழைப்பு நாட்களில் பட்டுப்புழு வளர்ப்பிற்கு 59.37 விழுக்காடு ஆண் உழைப்பு நாட்களும், 60.05 விழுக்காடு பெண் உழைப்பு நாட்களும் முறையே தேவைப்படுகிறது. புழு வளர்ப்பிற்கு அடுத்தபடியாக அதிகப் பெண் உழைப்பு நாட்கள் தழை பறிப்பதற்குத் தேவைப்படுகிறது எனத் தெரியவருகின்றது.

இந்த ஆய்வின் முடிவுகள் பட்டுக்கூடு உற்பத்தியை இன்னும் விரிவாக்க வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தெளிவாக்குகிறது; பட்டுக்கூடு உற்பத்தியின் மூலம் சிறு விவசாயிகளின் குடும்ப வேலை ஆட்களுக்கு ஆண்டு முழுவதும் முழு நேர வேலை வாய்ப்பினைத் தருகிறது. அவ்வப்பொழுது இத்தொழிலினால் தொடர்ந்து நிலையான வருமானம் கிடைக்கின்


றது. மூன்றாவதாக, முசுக்கட்டை களர் நிலங்களிலும் ஓரளவு நன்றாக வளர்ந்து ஆதாயம் கொடுக்கின்றது.

முசுக்கட்டை வறட்சியைத் தாங்கக்கூடிய சக்தி உடைய பயிராக இருப்பதால் தண்ணீர் தட்டுப்பாடான நிலைகளுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. அன்றியும் தண்ணீர் கிடைக்கும் வசதிக்கேற்பவும் தழைகள் கிடைக்கும் அளவைப் பொருத்தும் முட்டைகளின் அளவைக் குறைத்துக் கொள்ளக் கூடிய வசதியும் இருக்கின்றது. இறுதியாக உயர்தர இரகங்களான முசுக்கட்டைச் செடிகளும், பட்டுப்புழு இரகமும் கோயமுத்தூர் மாவட்டத்தின் தட்ப-வெப்ப நிலைகளுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. எனவே, மேற்கூறிய அனுகூலங்களை ஆராய்ந்து பார்த்ததில் சராசரியாகத் தோட்டத்தின் பரப்பில் ஆறில் ஒரு பாகத்தில் முசுக்கட்டை சாகுபடி செய்து பட்டுக்கூடு உற்பத்தியில் ஈடுபட வாய்ப்புள்ளது என்பதை ஆய்வின் முடிவுகள் தெளிவாக்குகின்றன.

முசுக்கட்டை சாகுபடி செய்து பட்டுக்கூடு உற்பத்தி செய்வதன் மூலம் வருவாயைப் பெருக்குவதற்குப் பெருமளவு வாய்ப்பு உள்ளது என அறியப்படுகின்றது. ஆகவே, தற்போதுள்ள பிரச்சினைகளை அறிந்து அவற்றினை அறவே தீர்ப்பது மிக அவசியமாகும். இந்த ஆய்வின் மூலம் கண்டு கொள்ளும் பிரச்சினைகளாவன:

*பட்டுப்பூச்சி முட்டைகள் தேவையான காலத்தில் எல்லாப் பகுதிகளிலும் உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதில்லை. உற்பத்தியாளர்களுக்குத் தகுந்த காலத்தில் எல்லாப் பகுதிகளிலும், தேவையான அளவு கிடைக்க தற்போது உள்ள நிறுவனங்களை வலிவுபடுத்துவதோடல்லாமல் விரிவுபடுத்துதலும் இன்றியமையாததாகும்.

*தற்சமயம் விற்பனை செய்ய உள்ள வசதிகள் போதுமானதாக இல்லை. ஆகவே, பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் சுமார் 80 சதவிகிதத்தை மைசூர் மாநிலத்திற்கு எடுத்துச்சென்று விற்பனை செய்கின்றனர். இதனால் செலவு அதிகரித்து



காலமும் வீணாகின்றது. இதைத் தவிர்க்க ஆங்காங்கே பட்டுக்கூடுகள் வாங்குவதற்கும், பதப்படுத்துவதற்கும், நூல் நூற்பதற்கும் வேண்டிய அடிப்படை அமைப்புகளை ஏற்படுத்துதல் அவசியம். இப்பணிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னோடியாக இருக்கலாம்.


*பட்டுக்கூடு விலைகளில் சில சமயங்களில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. இதைத்தடுக்கப் பட்டுக்கூடுகளை நிலையானதும் நியாயமானதுமான விலையில் வாங்குவதற்கான வசதிகளை அரசு தொழில் நிறுவனங்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

*இத்தொழிலை ஆரம்பிக்க அடிப்படை மூலதனம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. ஆகவே, சிறு விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபடுவது சிரமம். அவர்களை ஊக்குவிக்க நிறுவனங்களும் வர்த்தக வங்கிகளும் முன் வந்து நீண்ட கால, இடைக்காலக் கடனுதவி செய்தல் அவசியம்.

*முசுக்கட்டை சாகுபடி, பட்டுக்கூடு உற்பத்தி பற்றிய தொழில் நுணுக்கங்கள் பெரும் அளவில் விவசாயிகளிடம் பரவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**தகவல்: திரு. பா.கி. அய்யாசாமி**
**டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி**
**திரு. சே. தேவராஜன்.**
**வேளாண் பொருளியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்.**





## புழுதியில் இறங்கி வா!

உருத்திராக்க மணிகளை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும், தந்திரமும் ஆடலும், பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கின்றாய்? கண்ணைத் திறந்து, உன் கடவுளை உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக் கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான்; வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் துவராடையைத் தூக்கியெறி! அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து, நின் இறைவனைக் கண்டுகொள்!

—தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து....



# எது கவிதை?

## பேரறிஞர் அண்ணா

"தமிழகத்தில் இன்றைய தினம் நல்ல தமிழ்க் கவிதைகளைத் தரக்கூடிய கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள். நாம் அறிந்த பொருளுக்கே நாமே வியக்கத் தக்க அளவுக்கு மெருகூட்டக் கூடியவர்கள் கவிஞர்கள்.

எனக்குக் கவிதைகளைப் படிக்குமளவுக்கு-மற்றவர்கள் படித்துக் கேட்கும் அளவுக்கு உள்ளது போல், கவிதை எழுதிப் பழக்கமில்லை. நேரத்தைப் போக்கக் கிறுக்குவதாக இருக்கக் கூடாது என்று அந்த முயற்சியை நிறுத்திக் கொண்டேன்.

இந்தத் துறையில் உள்ளவர்கள் வேறு துறையில் புகுவதால் இத்துறையும் கெட்டு அத்துறையும் கெடுகிறது. வேறு பலர் புக முடியாதது கவிதைத்துறை-இந்தத்துறையில் உள்ளவர்கள் தமிழ்க் கவிதைகளை நிரம்பத் தர வேண்டும். நிறைய நூல்களும் வர வேண்டும். அவைகளை மக்கள் விலைகொடுத்து வாங்குவார்களா என்ற அச்சம் தேவையில்லை. கவிதைக்கு, குறிப்பாக தமிழ்க் கவிதைக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

சிந்தித்தால் உரையாற்றலாம், சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும் தான் கவிதை இயற்ற முடியும். தான் கண்டு, உள்ளம் நெகிழ்ந்ததை மற்றவர்கள் நெகிழத் தக்க அளவுக்கு அள்ளித் தருவது தான் கவிதை.

காலையில் கதிரவனைப் பார்க்கிறோம். மாலையில் செவ்வானத்தைப் பார்க்கிறோம். அருவியின் சலசலப்பை-கொழு கொம்பிலே படர்ந்திருக்கும் முல்லையைப் பார்த்தோம்-ரசித்தோம். மறுகணம் மறந்துவிடுகிறோம். இவைகளைக் காணாதவர்கள் மனம் நெகிழத்தக்க அளவுக்கு-கண்டவர்களும் உயிரோட்டத்தை ஓவியத்தில் பார்க்கலாம்-கவிதைகளில் பார்க்கலாம். கவிதைகள் நிரந்தரத் தன்மையைத் தருகின்றன.

மனக்கண் காணத்தக்க வடிவத்தைக் கவிதையில் தருகிறார்கள். எத்தனையோ நாள் காலைக் கதிரவனைப் பார்த்திருக்கிறோம். மகிழ்ந்து கொண்டிருக்க மனம். இடம் கொடுக்கவில்லை. அதையே கவிதையில் படிக்கும்போது கதிரவன் இப்படியா இருந்தது என்ற வியப்போடு நாளைக் காலையில் பார்க்கும் போது கவிதையில் கண்டவற்றை மகிழ்ச்சியோடு காண்போம். தமிழ்ச் சமுதாயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய சூழ்நிலையில் திகழ்ந்திருக்கிறது.

கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து-இலக்கியம் வளர்ந்து, அதை மக்கள் உணருகின்ற நேரத்தில்தான் தோன்றும்.

தமிழ் இலக்கியத்திற்கும்-தமிழ்க் கற்பனைக் கவிதைக்கும் வேறுபாடு உண்டு. தெரிந்த பொருளை வைத்துத் தெரியாத பொருளை உவமை காட்டுவது இலக்கியம். உதாரணமாக அன்று மாலை ஆற்றோரத்தில் பார்த்த ஆரணங்கு எப்படி இருப்பாள் தெரியுமா என்றால், செந்தாமரை போலிருக்கிறாள் என்று சொல்வார்கள். செந்தாமரையைப் பார்த்திருக்கிறோம்-புரிகிறது. ஆனால் மேனகையோ ஊர்வசியோ என்று வியக்கும் வண்ணம் இருக்கிறாள் என்றால், நாம் கண்டதை மறந்து காணாததற்கு ஏங்கிக் கொண்டிருக்கிறோம். அறிந்த பொருளைக் காரணம் காட்டி, சான்று காட்டி உவமை நயத்தோடு சொல்வது தமிழ்க் கவிதை.

வார்த்தைகளுக்குப் புதுப் பொருளைத் தருவதில் தமிழ்க் கவிஞர்களைப் போல மற்ற யாரும் கையாள்வதில்லை. அது பாரதியார் காலத்தில் நாடு அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்ததால் தேசியப் பாடலாக அமைந்தது. பாரதிதாசன் காலத்தில் விடுதலை கிடைத்திருந்தாலும் ஏழை, பணக்காரன், உயர்ந்த ஜாதி—தாழ்ந்த ஜாதி என்ற மனப்பான்மை இருந்ததால் புரட்சிக் கவிதைகளாக உருவெடுத்தது. இப்போதுள்ள இளம் கவிஞர்கள் உவமைகளை அள்ளி அள்ளித் தருகிறார்கள். காலத்திற்கேற்ற வடிவத்தைத் தமிழ்க் கவிதை தந்து விடுகிறது.

தமிழ் உணர்வு உள்ளத்தில் உள்ள காரணத்தால் கட்டாயம் கவிதை வரும்! அதைக் கவிதை அல்ல என்று கூறுவார்கள் புலவர்கள். ஆனால் நான் கவிதை அல்ல என்று கூறமாட்டேன். இலக்கணத்தை அடிப்படையாக வைத்து அதைக் கவிதை அல்ல என்று புலவர்கள் கூறலாம், நான்-உணர்ச்சியை வைத்து அதைக் கவிதை என்கின்றேன்!

இன்னும் சொன்னால்-மக்கள் பார்வையே ஒரு கவிதை; மக்கள் பேச்சே ஒரு கவிதை; மக்கள் கையொலியே ஒரு கவிதை; மக்கள் வாழ்த்தொலியே ஒரு கவிதை, இங்கே எங்கும் நிறைந்திருக்கும் நாதமே ஒரு கவிதை!"

இதைப் பற்றி எந்தக் கவிஞன் முழுதும் பாடிட முடியும்? அன்றலர்ந்த மலரைத்தான் கவிஞன் பாடிட முடியும்; 10 நாட்களும் மலர்ந்திருக்கும் (மக்களின் முகம்) மலர்களைப் பற்றி எந்தக் கவிஞன் பாடிட முடியும்?

ஒரு வெண்ணிலவைத்தான் கவிஞன் பாடிட முடியும்; கறையேதுமில்லாத லட்சக்கணக்கான வெண்ணிலவுகளை எந்தக் கவிஞன் பாடிட முடியும்? மக்களே கவிதையாகிவிட்ட பிறகு யார் மக்களைக் கவிதையில் வடிக்க முடியும்?

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பேசும்போது, 'கவிதை என்பது அழகும் உள்ள உணர்ச்சியும் உள்ளது' என்றார். அப்போது மக்கள் கைதட்டினார்கள்! கைதட்டலுக்குப் பொருள் என்ன என்று சிந்தித்துப் பார்த்தேன். அழகும்-உள்ள உணர்ச்சியும் உள்ளவர் எம். ஜி. ஆர். எனவே, அவரே ஒரு கவிதை என்பதால் மக்கள் கைதட்டினார்கள் என்பதைக் கண்டேன்.

கவிதையின் அளவுகோல் என்னைப் பொறுத்தவரை உணர்ச்சிதான்! அந்தக் கவிதையில் சந்தம் இல்லாது இருக்கலாம்-இலக்கணம் இல்லாது இருக்கலாம். இதைக் கூறுவதால் கவிதைக்கு இலக்கணம் இருக்கக் கூடாது என நான் கூறவில்லை.

ஆனால் இலக்கணத்திற்கும் மேலாக-ஊடாக இணைந்தோடும் உணர்ச்சியும் அழகும் தூய்மையும் நல்ல திறமையும் கொண்டு செய்யப்படும் செயலும் அந்தச் செயலுக்குக் காரணமான சிந்தனையும் ஒரு கவிதையே.

— 1968ல் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து

# தொழிலே எழில்!

புரட்சிக் கவிஞர்

**பாரதிதாசன்**

தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ
எழிலை உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

* * *

இந்தவான், மண், கனல், எரி, வளி தோன்று
அந்தநாள் எழுந்தஓர் “அசைவி”னால் வானொடு
வெண்ணி லாவும், விரிகதிர் தானும்,
எண்ணிலா தனவும் எழுந்தன வாகும்.
அணுத்தொறும் இயங்கும்அவ் வசைவியக் கத்தைத்
துணிப்பிலா இயற்கையின் தொழிலெனச் சொல்வர்.
அழியா தியங்கும்அவ் வசைவே மக்களின்
தொழிலுக்கு வேரெனச் சொல்லினும் பொருந்தும்.
ஆயினும் உன்னினும் அதுசிறந் ததன்று
தாயினும் வேண்டுவது தந்திடுந் தொழிலே!

* * *


மக்களின் தேவை வளர்ந்திடும் அளவுக்குத்
தக்க வாறு தளிர்த்திடு கின்ற
அறிவிலே தோன்றுவை; அந்தோள் தழுவுவை;
மறுவிலாக் கருவியில் வாய்விட்டுச் சிரிப்பை;
பொருள்பல நல்கிஅப் பொருள்தொறும் கலைத்திறம்
அருள்புரிந்து குறைபா டகற்றுவை தொழிலே!

* * *

பசித்தவன் புசித்திடப் பறப்பது போன்றஓர்
அசைப்பிலா ஆவலும், அசைப்பிலா ஊக்கமும்
அடைந்தோர் உனைத் தம் ஆயிரம் ஆயிரம்
தடந்தோள் தழுவியே கடந்தனர் வறுமை!









தொழிலே காதுகொடு! சொல்வேன்! எங்கள்
அதிர்தோள் உன்றன் அழகிய மேனி
முழுதும் தழுவ முனைந்தனர் பார்நீ!
அழகிய நாட்டில் அந்நாள் இலாத
சாதியும் மதமும் தடைசெயும் வலிவிலே
மோதுதோள் அணைத்தும் மொய்த்தன ஒன்றாய்க்
கெண்டை விழியாற் கண்டுகொள் தொழிலே
வாராய் எம்மிடை வாராய் உயிரே!
வாராய் உணர்வே! வாராய் திறலே!

அலுப்பிலோம் இருப்புக் கலப்பை துடைத்தோம்
மலையெனச் செந்நெல் வழங்களம் தோளில்வா!
கரும்பா லைக்குக் கண்ணெலாம் நெய்யிட்
டிரும்பா லைக்கு வரும்பழு தகற்றினோம்
பண்டம்இந் நாட்டிற் பல்க மகிழ்ந்துவா!

* * *

சூட்டி ரும்பும் துளியும் போலஎம்
தோட்கூட் டத்தில் தொழிலுன் வல்லமை
சேர்வது நாங்கள் விடுதலை சேர்வதாம்!
யாமும் நீயும் இரண்டறக் கலப்பின்
தூய்மை மிக்க தொழிலா ளிகள்யாம்:
கப்பல் முடைவோம் கப்பல் கட்டுவோம்
பூநாறு தித்திப்புத் தேனாறு சேர்ப்போம்
வானூர் தீயாலிவ் வையம் ஆள்வோம்.

* * *

ஐயப் படாதே! அறிவு புகட்டும்
வையநூல் பல்எம் மனத்தில் அடுக்கினோம்
மாசு தவிர்ந்தோம்; மாசிலா மணியே
பேசு; நெருங்கு; பிணைதோ ளொடுதோள்:
இன்பம்! இன்பம்!! இதோபார் கிடந்த
துன்பம் தொலைந்தது! தொலைந்தது மிடிமை!
வாழிய தொழிலே, செந்தமிழ்
வாழிய! வாழிய வண்டமிழ் நாடே!



['முல்லை' இதழில்
1946-ல்
வெளியானது.]

# மக்கள் கவிஞரின் மதுவிலக்குப் பாட்டு

—டாக்டர் ந. சஞ்சீவி,

பேராசிரியை திருமதி கிருஷ்ணு சஞ்சீவி.

தேசியக் கவிஞர்—தெய்வக் கவிஞர்—சுப்பிரமணிய பாரதியாரைப் போலவே புரட்சிக் கவிஞர்—நாத்திகக் கவிஞர் பாரதிதாசனும் **மக்கள் கவிஞர்** என்பதில் எவர்க்கும் எள்ளளவும் ஐயம் இராது. உண்மையைச் சொன்னுல் பாவேந்தர் பாரதிதாசனின் கடவுள் மறுப்புக் கொள்கைக்கு அடிப்படையே அவர்தம் மக்கள் மனமே. சமய உணர்வினும் (குறுகிய நோக்கில்) சிறப்புடையதே சமுதாய உணர்வு (பெரிய போக்கில்) என்ற பகுத்தறிவுப் பாவலர் பாரதிதாசன் கொண்டிருந்த கொள்கை முற்றிலும் தமிழக வரலாற்றிற்கோ—தமிழினப் பண்பாட்டிற்கோ புதுவது அன்று. அது, தொல்காப்பியர் தொட்டுச் சான்ருேர் பலரும் வற்புறுத்தி வந்த நல்வழி—நன்னெறி (=சன்மார்க்கம்) சமயப் பொதுமையானது மட்டுமின்றி சமயங் கடந்ததும் எனலாம். இவ்வுண்மை திருக்குறள், திருமந்திரம், திருவருட்பா போன்ற தமிழ் மறைகளால் நன்கு விளங்கும். புறச்சாயலில் இந்த நூற்ருண்டு நாத்திகரும் முந்தை நூற்ருண்டு சித்தர்களும் சடங்குகள் நிறைந்த சமய வழிபாட்டின் — குறைகள் மலிந்த கோயில் வழிபாட்டின் — புறக்கணிப்பாளர்களாகவும்—பகைவர்களாகவும் கூட விளங்கினர் என்பது வெள்ளிடை மலே.

மெய்மையில் சமயமும் சாத்திரமும் கோயிலும் தெய்வங்களும் மனித மனத்தைப் பண்படுத்தி மாசு மறுவற்றதாய் ஆக்கி இயற்கை > உண்மை > இறை என்று வளர்ச்சி பெறவே அமைந்தன ஆகும். இன்னும் சொன்னுல் அவரவரும் அவரவருடைய உள்ளத்துள்—உயிருள்—உறையும் உண்மையை உணர்வதே ஒரு நெறி — பெரு நெறி — திருநெறி—என்று சான்ருேர் உணர்த்தினர். இந்த நிலேயை எல்லோரும் எய்துவதற்கு ஏற்ற படிகளாய் அமைக்கப்பட்டனவே அறம் (Ethics), சமயம் (Religion), தத்துவ சாத்திரம் (Philosophy) என்ற படிகள். இவற்றுள்ளும் முதலாவது இல்லேயேல் இரண்டாவதும் மூன்ருவதும் இல்லே.

தெளிவாகச் சொன்னுல் அறவுணர்வில் அழுத்தம் ஏற்படவே சமயமும் தத்துவமும். மறம் மலிந்த மன்பதையில் 'எதற்காக அறிவு / அறம்?' என்ற வினு மக்கள் மனத்தில் எழுதல் இயற்கை. அப்போது 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்ற சட்டத்திற்கு 'மேலோர்'களும் இரையாதல் இயற்கை. இந்நிலேயில் அச்சத்திற்காக அன்று — அறத்திற்காக—தன்னேயும் சமூகத்தையும் வாழ்விக்கும் அறத்திற்காக—அதனினும் பெரிதாம் பரம்பொருளின் அருளுக்காக — என அமைந்ததே அறம் — சமயம்—தத்துவம் எல்லாம் என்ற விளக்கம் எழும். உருவகித்துச் சொன்னுல் அறம் காக்கும் வாளும் கேடயமுமே சமயமும் தத்துவமும். உயர் நிலேயில் இவை மூன்றும் வேருகாது ஒன்றித்து விடும் பேறும் பெறும். ஆனுல் உலகியலில் பல — பலபோது—காக்க வேண்டியதே தாக்கும் தாழ்மையும் பெறுவது போல சமயமும் தத்துவமும் சழக்கர் வழக்கால் தற்கொலேக் கருவிகளாதல் கண்கூடு.

இவ்விளக்கப் பின்னணியில் பகுத்தறிவும் மெய்யறிவும் பொது வேர் உடையன ஆகும். புலன்கட்கு மட்டுமே புலனுகும் பொருளியல் (Physical Material) நிலேயிலேயே அமைதி பெறுவது அணேவது (1) (அவிவது) பகுத்தறிவு; புலன்கட்கு அப்பாற்பட்டும் விளங்கும் அருளியல் (Meta-Physical spiritual) நிலேக்கும் விழைவது / விரைவது அணேவது(2) (சேர்வது) மெய்யறிவு. எனவே, புலால் உணவையும் பொறுக்கும் மெய்யறிவாளரும் போதைப் பொருளேப் பொறுப்பதில்லே.

**ஓர் ஆதார மேற்கோள் :**

Our last rule was "Refrain from taking intoxicating drinks, or drugs". Well, we should have said enough throughout this course to let you realise the dangers of driving the astral body willy-nilly from the physical body, and-as it were-stunning it.

Intoxicating drinks harm the soul, they distort the impressions transmitted through the silver cord, they impair the machanism of the brain which, we must remember, is but a receiving and transmitting station concerned with the manipulation of the body upon earth and the receipt of knowledge in the world beyond.

* *

We suggest, then, that if you want to eat meat, do so. If you want to eat vegetables or grass, do so....

Smoking, in moderation, probably never hurt anyone, but drink-intoxicating liquors-does harm people because it interferes with the astral.

—You-Forever (1965/1970)
by T. Lobsant Rampa P.P. 197, 217.

மேற்கண்ட பின்னணியில் பாவேந்தர் — மக்கள் கவிஞர்—புரட்சிப் புலவர்—பாரதிதாசன் நாட்டில் மதுவிலக்குச் சட்டம் எந்த வகையிலும் வடிவிலும் வருவதற்கு முன்பே—நாற்பத்து மூன்று ஆண்டுகட்கு முன்பே (1935)—தமது நாற்பத்து நான்காம் அகவையில் மதுவிலக்கைப் பாட்டால் வரவேற்று வாழ்த்தியிருப்பது எண்ணி எண்ணி இன்புறத் தக்கது. அப்பாட்டிலும் **மக்கள் நலம்** ஒன்றே பாவேந்தரின் நோக்கும் போக்குமாய் இருத்தல் ஆராய்ந்து இன்புறத் தக்கது.



மக்கள் கவிஞரின் மதுவிலக்குப் பாட்டு வருமாறு :

## மதுவிலக்குப் பாட்டு

### நோட்டு, தாளம் ஒற்றை

1. மதுவிலக்கு மதுவிலக்கு மனைவிமக்கள் வாழியே
மதிகலக்கும் மதுவை விட்டு மகிழ்வுபெற்று வாழ்குவாய்!
நிதியனைத்தும் வீணிலாக்கும் நிலைமைகண்டு நீங்குவாய்!
நிதமிழுத்து நலியவைக்கும் நேசர்கையி லேங்குவாய்!
(மதுவி)

2. சதியனைத்தும் காசுதந்து சம்மதித்து வாங்கவோ?
சதையனைத்தும் நையவைத்து நிதமரைப்பொன் தேடுறாய்
மதுவிலக்கு மதிதுலக்கு மனிதவாழ்வில் மேன்மைகொள்
மகிதலத்தில் உனதுநாட்டை வடுவகற்ற நோன்புகொள்
(மதுவி)

3. அறிவுனக்கு மணிவிளக்கம் அதைவிருத்தி செய்குவாய்!
அறமிதென்றும் மறமிதென்றும் அறியவேண்டு மல்லவோ?
நிறைகுளத்தைப் பாசிமூடி நிலைகெடுக்கும் வாறுபோல்
நின்மனத்தில் தெளியவைக்கும் நீசமது நீக்குவாய்!

4. பொறுமைகொண்டு புகழடைந்து பொன் மிகுந்து தமிழிலே
புலமை கொண்டு வாழ்வதென்ற புதுநினைவு கொள்ளுவாய்!
திறலிழந்து செயலிழந்து தெருவிலெங்கும் வெறியனாய்த்
திரியவைக்கும் குடியைவிட்டுத் தேசசேவை செய்குவாய்!

மேற்கண்ட நான்கு பாடல்களில் உள்ள இலக்கிய, நயங்களுள் சிலவற்றைச் சிந்திப்போம்.

1. முதல் பாட்டின் முதல் வரியே மக்கள் கவிஞர் மதுவிலக்கின் தலையாய பயன்பற்றிக் கொண்டிருந்த தலைமைக் கருத்தின் சிறப்பைக் காட்டும். அது 'மனைவி மக்கள் **வாழ்வு**'.

1.2. இரண்டாம் வரியின் முதல் சீரின் அருமையே அருமை! **'மதிகலக்கும்** மதுவை விட்டு மகிழ்வு பெற்று வாழ்குவாய்!' மதுவின் கொடிய செயல் **மதி கலக்கல்**. ஆம். அதனால்தான் அந்தக் கெட்ட மதுவைக் குடிப்போருமே அதைக் 'கலக்கல் என்று கூறுகின்றனர் போலும்! ஆனால் அந்தக் கலக்கல் அவர்கட்குக் கலக்கல் (கலங்கல்) தரவில்லையே! காரணம் மது கலக்கலின் மாபெரும் ஆற்றல் போலும்! கலக்கலையும் கலக்கும் கலக்கல்!

1.3. அண்மையில் இந்தியப் பிரதமர் மதுவிலக்கின் தலையாய நோக்கத்தைக் காந்தி அடிகள், இராசாசி வழி நின்று வற்புறுத்தி யிருப்பதையே நாற்பத்து மூன்று ஆண்டுகட்கு முன்பு தமது நாற்பத்துநான்காம் அகவையில் நற்றமிழ்க் கவிஞர் பாரதிதாசன் பாடியுள்ளார்: 'நிதி**யனைத்தும்** வீணிலாக்கும் நிலைமை!'

1.4. முதல் பாட்டின் முடிவு அடி மதுவுக்கு மண்டியிட்டார் படும்பாட்டைப் படமாக்கிக் காட்டுகிறது : 'நிதமிழுத்து நலிய வைக்கும் ; நேசர் கையி லேங்குவாய்' மதுவின் கொடுமை **தினசரி** நடக்கும் கொடுமையாகி விடுகிறதாம்! அந்தக் கொடுமை இரு வகையாய் உள்ளதாம். (1) தெரு சிரிக்க இழுத்து விடுமாம் ; இழுத்து நலியவும் வைக்குமாம்! இரக்கம் கொண்ட நேசர் கையால் ஏங்கச் செய்யுமாம்! ஆம். இப்போதும் தெருக்குடியரை—தினக்குடியரை நண்பர்கள் இரக்கத்தால் காப்பது காண்கிறோம்!

2.1. இரண்டாம் பாட்டின் முதலடி மக்கள் கவிஞரின் எள்ளல் இழையோடும் நகையின் மென்மையைக் காட்டுகிறது! 'சதியனைத்தும் காசுதந்து சம்மதித்து வாங்கவோ?' இந்த அடியில் உள்ள சொற்கள் ஒவ்வொன்றிலும் புலவரின் கேலி புலப்படுகிறது!

2.2. இரண்டாமடி முதலடியைப் போல 'குத்திக்' காட்டுகிறது. **'சதையனைத்தும் நைய வைத்து நிதம் அரைப்பொன் தேடுறாய்'.** பொன் விலை கொள்ளை மலிவாய் இருந்த காலத்திலேயே சதை **அனைத்தையும் நைய வைத்தால் தானே அரைப்பொன்** கிடைக்குமாம்.

2.3. மூன்றுவது வரியில் முதலிரு சீரிலேயே மதுவிலக்கின் மாண்பைக் கூறி அந்த மாண்பு வேறு எப்பிறவியினும் மனிதப் பிறவியிலேனும் சிறப்புற வேண்டியதின் இன்றியமையாமையைக் கவிஞர் எடுத்துரைக்கிறார்! 'மதுவிலக்கு **மதிதுலக்கு மனித வாழ்வில்** மேன்மை கொள்'.

2.4. இரண்டாம் பாட்டில் ஈற்றடி தனி மனிதன் பின்பற்ற வேண்டிய தலையாய அறமாகிய 'மதுவிலக்கு' எத்தகைய சமுதாய அறமும் ஆகும் என்பதைச் சாற்றுகிறார். இது திருவள்ளுவர் 'கள்ளுண்ணாமை'யை அறத்துப் பாலில் அமைக்காது பொருட்பாலில் பொருத்திய பொருண்மையையும் புலப்படுத்தும். 'மகிதலத்தில் உனதுநாட்டை வடுவகற்ற நோன்புகொள்'. 1935ல் இப்பாட்டு எழுந்த நாளில் இந்தியா—நம் தாய்நாடு அடிமைப் பட்டுக் கிடந்தது. அது புண் கூட அன்றும்; **வடு**வாம். அந்த வடுவகற்ற 'நோன்பு' கொள்ள வேண்டுமாம்! 'நோன்பு' இருப்பவர் மது அருந்தலாமா? பாரதிதாசன் 'பக்தர்' அல்லர்; பகுத்தறிவாளர்; ஆனால் அவரும் 'நோன்பு' **வேண்டுகிறார்!**



3.1. மூன்றும் பாடல் முத்தாய்ப்பான பாடல். தொடக்கத்தில் நாம் சிந்தித்தவாறு பாடியவர் பகுத்தறிவு நாத்திகரா?—அல்லது பயிற்சி மிக்க சித்தரா? என்று எண்ணச் செய்யும் ஏற்றமுடையது இப்பாடல். காரணம் மனித வாழ்வின்—உயர்—உயிர்—மாண்பையே இப்பாடல் உணர்த்துகிறது. அதிலும் முதல் அடி முதன்மை மிக்கது; 'அறிவுக்கு மணிவிளக்கம் அதைவிருத்தி செய்குவாய்!' 'மணிவிளக்கு'—யோ(க்)கியர் பாடு படுவதெல்லாம் இதற்கே என்பர். பகுத்தறிவுப் புலவர் பாட்டில்தான் பழமை—பக்தி இலக்கியத் தின் சொல்லும் பொருளும் சுழலும் சுழற்சிதான் என்னே! நாத்திகரும் ஆத்திகரின் தம்பியர்தானே! அனைவரும் ஆண்டவனின்!—இல்லை!—இயற்கையின் குழந்தைகள்தானே!

3.2. இக் கட்டுரையின் தொடக்கத்தில் எடுத்துரைத்தவாறு ஆத்திகர்—நாத்திகர் யாராயி னும்' அறிவு எதற்கு?' என்ற வினவிற்குப் புதுவைக் கவிஞர்—புரட்சிக் கவிஞர்—புரியுமாறு சரியான விடை பகல்கிறார்; ''அறமிதென்றும் மறமிதென் றும் அறியவேண்டு மல்லவோ?''

3.3. மூன்றுவது பாட்டில் மூன்றுமடியிலேனும் ஓர் உவமை/-உருவகம் வராவிட்டால் அப்புறம் என்ன பாவேந்தர் பாரதிதாசன்? 'நிறை குளத் தைப் பாசிமூடி நிலைகெடுக்கு மாறுபோல்!' ஆம். இயற்கையான அறிவு 'நிறைகுள'மாம்! அது மது வருந்தப் பாசிபடிந்த குளமாக்குமாம்! பாசி படிந் தால் காலையும்கூட குளத்தில் வைக்க முடியாது வழுக்கும்! வாழ்வே போகும்! ஆம். அதனால்தான் 'நிலை கெடுக்கும்' என்றார்.

3.4. மூன்றும் பாட்டின் நான்காமடி இரண் டாம் சீர் கருதத்தக்கது. 'தெளியவிக்கும்' என்பது அந்தச் சீர். இச்சீர் 'தெளிவவிக்கும்' என்றிருந் தால் நன்றாக இருந்திருக்கும்போல் தோன்றுகிறது. இல்லையேல் தெளி=தெளிவு; தெளி(வு) அவிக்கும் என்று பொருள் புரியல் பொருந்தும். இப்பாட்டில் மனிதனை நீசனக்கும் மதுவை 'நீசமது' என்று ஆசிரியர் பழித்தல் சாலப் பொருந்தும். 'நின் மனத்தில் தெளியவிக்கும் நீசமதுவை நீக்குவாய்!'

4.1. நான்காம் பாட்டின் வேகம் நத்தை வேகம் அன்று; நதி வேகம். காரிகை கற்றுக் கவி பாடுவோர் பாட்டின் பரிவு—வேகம்-நத்தைவேகம். கருவிலே திருவுடைய கவிஞர் கவிதையின் வேகமோ கங்கை—காவிரி வேகம். ஆனல், வேகம் நிறைந்த புரட்சிக் கவிஞரே பொறுமை கொண்டு வாழப் புத்தி புகட்டுகிறார்! வேகத்தோடு விவேகம் நிறைந் தவர்! அப்படிப் பொறுமையை முதலாகக் கொண்டாலே புகழும் பொன்னும் மிகும் என்றும் இடிக்கவிஞர் மின்னல் ஒளிவீசுகிறார்! 'பொறுமை கொண்டு புகழடைந்து பொன்மிகுந்த தமிழிலே.'

4.2. புலியின் குணம் புலியை விடுமா? குடி கெடுக்கும் குடியைக் குடிக்காமல் இருப்பதும் எதற் காம்? 'புலமை கொண்டு வாழ்வதென்ற புது நினைவு கொள்ளுவாய்!' ஆம். புலமை—புதுமை இரண்டும்தானே புரட்சிக் கவிஞரின் இரு விழிகள்?

4.3. குடிகாரனின் கதியென்னவாம்? நான் காம் பாட்டின் மூன்றும் அடி உச்சந் தலையில் மூன்றடி வைத்து முழங்குகிறது; 'திறலிழந்து செயலிழந்து தெருவெங்கும் வெறியனய்', ஒலி நயத்தோடு ஒளி (=காட்சி) நயம்! சொற்சித்திரம் சுவர் சித்திரம் மலர்ந்தது போலல்லவா இதழ் இதழாய்—சீர் சீராய் மலர்கிறது! எந்தச் சொல்லை யேனும் எடுக்க முடியுமா? அடுக்கிய அடுக்கை அசைத்தால்—ஓர் அசை அசைத்தாலும் — உயிர் கவிதையின் உயிர்—போய்விடுமே! அவ்வளவு ஒருமை—ஒற்றுமை உடைய கவிதை அல்லவா? அதுதானே கவிதை?

4.4 கட்டிப்பாகில் எந்தப் பகுதியில் கூடுதல் குறைவு இருக்கும்? முதலடி போலவே முடிவடியும்? ஏன்? எல்லா அடிகளும்!

கவிஞரின்—கவிதையின்—கடைசி அடியைத் தான் பாருங்களேன்! 'திரிய வைக்கும் குடியை விட்டுச் தேச சேவை செய்குவாய்' ஒவ்வொரு சொல்லும் ஊற்றெடுத்துப் பாய்கின்றதே! கருத் தூற்றும் கல்வியூற்றும் கலந்து பாய்கின்றனவே. ஆம். இத்தகைய பாடல்கள்தான் பிணி தீர்க்கும் பன்னீர் மணம் பரப்பும் வெந்நீர் ஊற்றுகள்! விட வேண்டியது 'திரிய வைக்கும் குடி'. விடாமல் செய்ய வேண்டியது 'தேச சேவை'.

இன்னும் சில இலக்கிய நயங்கள்—படைத்த பாவலனே தன்னை அறியாமல் பெற்றெடுத்த தமிழ்க் குழந்தையின் — இயல் தமிழின்—இயல் பான அழகைப் பார்ப்போம்.

1. நான்கு பாடல்கள்—பதினறு வரிகள். முதல் பாட்டில் முதல் அடி. 'மதுவிலக்கு மதுவிலக்கு மனைவி மக்கள் வாழியே!' நான்காம் பாட்டின் நான்காம் அடி. 'திரியவைக்கும் குடியைவிட்டுத் தேசசேவை செய்குவாய்!'



2. இன ஒற்றுமைபோல் — இலக்கியத்தில் அதுவும் இன்பக் கவிதையில்—இன்றியமையாததாய் உள்ள மோனையின் ஒருமைப்பாடு வழங்கும் காட்சி காணீர்:

| | | | | |
|---|---|---|---|---|
| I | ம | ம | ம-ம | வா |
| | ம | ம | ம | வா |
| | நி | வீ | நி | நீ |
| | நி | ந | நே | ஏ |
| II | ச | கா | ச | வா |
| | ச | நை | நி | தே |
| | ம | ம | ம | மே |
| | ம | உ | வ | நோ |
| III | அ | ம | அ | செ |
| | அ | ம | அ | அ |
| | நி | பா | நி | மா-வா |
| | நி | தெ | நீ | நீ |
| IV | பொ | பு | பொ | த |
| | பு | வா | பு | கொ |
| | தி | செ | தெ | வெ |
| | தி | கு | தே | செ |

பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்களிடமும் 'அந்த நாள்' மாணவனுய் இருந்தவர்களுள் யானும் ஒருவன்! அவர் புரட்சிக் கவிஞரிடம் தாம் கண்ட இலக்கியச் சிறப்புகளுள் பெருஞ்சிறப்பாய் இயம் பியது பாவேந்தரின் சொல்லாட்சித் (Diction) திறனே ஆகும். அது இப்பாட்டில் இடம் பெற்று உள்ள வலம் (வெற்றி) பார்ப்போம்!

1. பாடல்களில் ஈற்றில் முடியும் பதினாறு சொற்கள் சீர்களுள் எட்டு வருமாறு:

| | |
|---|---|
| வாழ்குவாய் | 2 |
| நீங்குவாய் | 3 |
| ஏங்குவாய் | 4 |
| தேடுறாய் | 5 |
| செய்குவாய் | 9 |
| நீக்குவாய் | 12 |
| கொள்ளுவாய் | 14 |
| செய்குவாய் | 16 |

இவற்றுள் 'செய்குவாய்' ஈரிடங்களில் இடம் பெற்றிருத்தல் இன்பம். அவ்வாறே தன்வினை பிற வினைகளின் வாய்பாடாக நீங்குவாய், நீக்குவாய் அமைந்திருத்தல் நினையத் தக்கது.

3. நான்கு பாடல்களில்—பதினாறு அடிகளில் பின்வருவன—12—தனித் தனி அடிகளாகவே முழுப் பொருள் வழங்கக் காணலாம்.

(அ)

1. மதுவிலக்கு மதுவிலக்கு மனைவிமக்கள் வாழியே!

2. மதிகலக்கும் மதுவைவிட்டு மகிழ்வு பெற்று வாழ்குவாய்!

3. நிதியனைத்தும் வீணிலாக்கும் நிலைமை கண்டு நீங்குவாய்!

4. நிதமிழந்து நலியவைக்கும் நேசர்கையி லேங்குவாய்!

(ஆ)

5. சதியனைத்தும் காசுதந்து சம்மதித்து வாங்கவோ?

6. சதையனைத்தும் நையவைத்து நிதமரைப் பொன் தேடுறாய்!

7. மதுவிலக்கு மதிதுலக்கு மனிதவாழ்வில் மேன்மைகொள்!

8. மகிதலத்தில் உனதுநாட்டை வடுவகற்ற நோன்புகொள்!

(இ)

9. அறிவுனக்கு மணிவிளக்காம் அதை விருத்தி செய்குவாய்!

10. அறமிதென்றும் மறமிதென்றும் அறிய வேண்டு மல்லவோ?

11. நிறைகுளத்தைப் பாசிமூடி நிலைகெடுக்கு மாறுபோல்

12. நின்மனத்தில் தெளியவைக்கும் நீச மதுவை நீக்குவாய்!

4. நான்காம் பாட்டு மட்டும் ஈரீரடிகளாய் பிரித்துப் பொருள் புகலத் தக்கனவாய் உள்ளன.

1. பொறுமைகொண்டு புகழடைந்துபொன் மிகுந்து தமிழிலே
புலமைகொண்டு வாழ்வதென்ற புது நினைவு கொள்ளுவாய்!

2. திறலிழந்து செயலிழந்து தெருவிலெங்கும் வெறியனாய்த்
திரியவைக்கும் குடியைவிட்டுத் தேச சேவை செய்குவாய்!

4. பாவேந்தரின் பதினாறு வரிகளிலும் $16 \times 4 = 64$ சீர்களிலும் என்னைப் பெரிதும் கவர்ந்த சீர்கள் இரண்டு:

மதுவிலக்கு மதிதுலக்கு

மந்திரம் போலும் இந்த இரு சீர்களில் பாட்டின் இதயமே துடிக்கும் துடிப்பைக் காணலாம்; கேட்கலாம்.

5. 'மதுவிலக்குப் பாட்டி'ல் 'நிதமிழந்து நலிய வைக்கும் நேசர் கையில் ஏங்குவாய்' என்ற வரியில் எனக்கு ஒரு நயம் ஒளிந்து ஒளிர்கிறது. 'நிதமிழுத்து நலிய வைக்கும்' என்றும் 'நேசர் கையில் ஏங்கு வாய்' என்றும் இருகூறாகப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். பிரிவினையில்லாமல் ஒற்றுமையாகப் பொருள் கொண்டால் இன்றும் சுவையாகவும் பயனாகவும் இருக்கும்போல் இருக்கிறது! ஆம். நம் 'நேசர்'களே நம்மை நிதமிழுத்து நலியவைப்பர்; அதன் காரணமாக அவர்களை நம்பி நயந்து ஏங்கவும் வேண்டும். இந்த இருபதாம் நூற்றுண்டில் நேசர்களிலும் மோசர்கள் யார்? உலக நூற்றுண்டுக் கணக்கீட்டிற்கே காரணமான ஏசுநாதரே 'இறைவா! என்னை என் நண்பர்களிடமிருந்து கப்பாற்று' என்றுதானே வேண்டிக் கொண்டார்!



6. ஒரு பாட்டைப் படிக்கும்போது தலைமையாக உணரத்தக்கது அப்பாட்டின் முதன்மையான —மேலோங்கிய உணர்ச்சியே ஆகும். அதையே தண்டியலங்கார ஆசிரியர் பாவிகம் எனப் போற்றுகிறார் எனலாம்.

'பாவிக மென்பது காப்பியப் பண்பே'
தண்டி. 89

என்பது சூத்திரம்.

இந்தப் பாவிகம் பாவேந்தர் திருவாசக உருக்கத்தோடு தந்துள்ள 'தேன் கவி'களாலேயே தெளிவாகும். இந்த உருக்கத்தை உணர 'மதுவிலக்குப் பாட்டின்' பதினாறு வரிகளையும் 'பாராயணம்' செய்வதுபோலப் பாடிப் பார்த்தாலே—தனக்கு உள்ளே பாடிப் பார்த்தாலே தெரியும். இந்த அனுபூதியில் திளைக்கும் நிலையில் 'சொல்லினும் பொருளினும் சுவைபடல் இன்பம்' என்னும் தண்டியலங்கார சூத்திரத்தையே (18) 'சொல்லினும் பொருளினும் உரு(க்)குதல் இன்பம்.' என்று சற்றே மாற்றி மகிழலாம்போல் தோன்றுகிறது. ஈண்டு பாவேந்தர் திருவாசகத்தில் பலகாலும் தோய்ந்தவர் என்னும் கருத்தும் நினைவுகூரத்தக்கது.

7. பாவேந்தரின் 'மதுவிலக்குப் பாட்டு' குடியனையும் குளிர வைத்து உள்ளத்தை உருக்கி உண்மையை உணர்த்தும் வகையில் 'மதுவிலக்கு மதுவிலக்கு மனைவி மக்கள் வாழியே!' என்று தொடங்குவது பாவேந்தர் உலகின்—உள்ளத்தின் இயல் புணர்ந்த நுட்பர் என்பதைத் திட்பமுறக் காட்டும்.

8. பாவேந்தரின் பதினாறு வரிப்பாட்டிலே முதலடியின் ஈறு மேலே உரைத்தவாறு 'வாழியே' என்று வாழ்த்தி—அதிலும் மனைவி மக்களைப் பொறுப்புடன் நினைவூட்டி (அச்சுறுத்தி?)-முடிகிறது. அப்புறம் எஞ்சிய வரிகள் பத்தில் 'வாழ்குவாய்'2 'நீங்குவாய்'3 'ஏங்குவாய்'4 'தேடுறாய்'5 'மேன்மைகொள்'7 'நோன்பு கொள்'8 'செய்குவாய்'19 'நீக்குவாய்'12 'கொள்ளுவாய்'14 'செய்குவாய்'16 என்னும் முன்னிலைச் சொற்கள் / சீர்கள் ஈற்றில் இடம் பெற்றுள்ளன. எஞ்சிய ஐந்து ஈறுகள் வருமாறு: 'வாங்கவோ'5, 'மேன்மைகொள்'7, 'நோன்புகொள்'8, 'அல்லவோ?'10 'ஆ/மாறுபோல்'11, 'தமிழிலே'13, 'வெறியனாய்'15 இந்த வரிசையும் இன்பப் பரிசே.

இவற்றுள்ளும் 'வாங்கவோ?', 'அல்லவோ?' என்ற ஈர் ஈறுகளும் வினா. 'மேன்மைகொள்', 'நோன்புகொள்' என்று அடுத்தடுத்து வரும் இரு சொற்களும் முன்னிலை ஏவல். மேன்மைக்கு நோன்பு தேவை!—பகுத்தறிவுக் கவிஞரின் பறையறை! 'தேடுறாய்' என்ற ஈறு மக்கள் கவிஞர் பேச்சு மொழிக்கும் இலக்கிய மூச்சுக்கொடுப்பதை நிறுவும், பதினாறு அடிகளிலும் ஒரே இடத்தில் 'தமிழிலே' ஒலிக்கிறது. இந்த நான்காம் பாட்டு முதலடி ஈற்றையும் நான்காம் பாட்டின் ஈற்றடி ஈற்றுச் சீர்கள் இரண்டையும் இணைத்துப் பார்த்தால் 'தமிழிலே—தேசசேவை செய்குவாய்' என்னும் கட்டளை கிடைக்கும்.

9. ஒரு பாவலன் பாட்டில், சொற்கள் அமைவதற்குக் காரணம் அவன் வலு முயற்சி அன்று; கருவிலேயே வாய்த்த திரு. கலை பாதி; கலைஞன் பாதி. சாதாரண மனிதன் பேச்சே கடலில் மிதக்கும் பனிக் கட்டியின் மறைவான முக்கால் பகுதியைப் போன்ற ஆழ் மனத்தின் விளைவாகும். அப்படியானால் கவிஞன் சொற்கள் எப்படி இருக்கும்? எடுத்துக்காட்டாக நாலாம் பாட்டின் முதலடியையே நல்ல சான்றாய்க் கொள்ளலாம். **'பொறுமை கொண்டு புகழடைந்து பொன்மிகுந்து தமிழிலே'** பொறுமை இல்லையேல்—புகழேது? ஊழால் இல்லை—ஊழலால் விளையும் இகழ்தான்! இந்த இகழுடையாரிடம் பொன்னிருந்தும் இல்லாதது போலத்தான். புகழுடையார் பொன்னே புகழ் தரும்—அதுவே எச்சம். அத்தகையோரே—பொன்னும் புகழும் ஒருங்கே உடையவரே—தமிழை இயற்ற—இயக்க வல்லார். அவர் இயற்றிய—இயக்கிய—தமிழே 'இறவாத புகழ்' பெற்றது.





10. மேற்கண்டவாறு பாவலரின் சொற்சுவையை ஆராய்வது போலவே பொருட்சுவையையும் (Content analysis) போற்றலாம். அவ்வகையில் சில சிந்தனைகள் : **எதற்காக மது விலக்கு ?** விடை வருமாறு: (1) மனைவி மக்கள் வாழ, (2) மதி கலங்காமையால் மகிழ்வு பெற, (3) நிதியனைத்தும் வீணாக்கும் நிலைமை நீக்க, (4) நிதம் இழுபடாதிருக்க, (5) நேசர்கையில் ஏங்காமல் இருக்க, (6) சதியனைத்தும் (கள் வாங்க) காசு தந்து சம்மதித்து வாங்காமல் இருக்க (ஆம். சம்மதிக்கச் செய்வதே ஒரு பெருஞ்சதிதானே!), (7) சதையனைத்தையும் நைய வைத்து (ஐயோ! நாளைக்கு அந்தச் சதை இருக்குமோ?) நிதம் (ஆம்! தினக் கூலி-அரைக் கூலி) சம்பாதிக்கும் அரைப் பொன்னையும் பாழாக்காமல் பாதுகாக்க, (8) மதிதுலங்கி மனித வாழ்வில் மேன்மை கொள்ள, (9) மகிதலத்தில் உனது நாட்டை வடுவகற்ற நோன்பு கொள்ள, (10) மணிவிளக்கமாம் உன் அறிவை விருத்தி செய்ய, (11) அறமிது-மறமிது என்று பிரித்தறியும் பகுத்தறிவு பெற, (12) மனத்தெளிவு பெற, (13) பொறுமை கொண்டு புகழ் அடைந்து பொன்னும் பெற்று தமிழிலே புலமை கொண்டு வாழ, (14) திறலிழந்து செயலிழந்து தெருவில் எங்கும் வெறியனாய்த் திரியாது தேச சேவை செய்ய.

இந்தப் பதினாலுள் தனி மனிதன் நலமே பெரிதும் போற்றப்பெறுகிறது—இயற்கை! அந்தத் தன்னலம் கருதியேனும் மதி மனிதன் மது மனிதன் ஆகக் கூடாது என்பது கவிஞரின் ஆழ்மன—அடிமன—ஆராமை போலும்! ஆனால் 'மது விலக்குப் பாட்டி'லேயே (1) மனைவி மக்கள், (2) நாடு, (3) தேச சேவை, (4) தமிழிலே புலமை, (5) மகிதலம் ஆகிய அறங்களும் ஏற்றப்படுகின்றன; போற்றப்படுகின்றன.

**நன்றி:**—பாவேந்தர் மதுவிலக்குப் பாட்டு 1935ல் வெளிவந்த 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' இதழில் உள்ளது. இதை யான் கண்ணுற அருள் பாலித்த சர்வோதயத் தலைவர் திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.



# மேதினி நாள்

கவிஞர்
இரா. வைரமுத்து




"வையகத்தின் அழுக்குகளை....வேர்வை ஆற்றில்
வாருங்கள் சலவைசெய்வோம்'' என்று பாடி
வெய்யிலுக்கு முன்ஞலே விழிக்கும் எங்கள்
வீரர்களைச் சிறப்பிக்கும் திருநாள் மேநாள்!
கையெழுத்தை இடுவதற்குக் கூட இன்னும்
கற்காத கைகள்தாம் இந்த மண்ணின்
மெய்யெழுத்துச் சரித்திரத்தை எழுதிச் செல்லும்!
மேதினமும் இதையேதான் திருப்பிச் சொல்லும்!

வித்தெடுத்து நட்டவனும், எந்தி ரத்து
விசைமுடுக்கி விட்டவனும், மூச்சை வென்று
முத்தெடுத்து வந்தவனும், பூமிப் பெண்ணின்
மூர்ச்சைதெளி வித்தவனும், இயற்கை அன்னை
தத்தெடுத்துக் கொண்டவனும், கொடிகள் பூக்கச்
சம்மதிக்க வைத்தவனும், வறுமைப் பேய்க்குக்
கொத்தடிமை யாயிருக்கும் கொடுமை தன்னைக்
குறிபார்த்துச் சபதமிடும் திருநாள் இந்நாள்!

முதுகுகளில் நாளைகளைச் சுமந்து கொண்டு
முன்னேறும் நதிகளிவர்; காலம் தன்னுள்
பதுக்கிவைத்த ரகசியத்தை எல்லாம் மண்ணின்
பார்வைக்குக் கொண்டுவரும் இவர்கள் இன்னும்
ஒதுக்கிவைக்கப் படலாமா? மேக மந்தை
உதயத்தை மேய்ந்துவிட நினைத்தாற் போல்தான்!
நதிக்கரையில் பிறந்ததுவாம்! இருந்தால் என்ன?
நாகரிகம் அழுக்காய்த்தான் உள்ள திங்கே!

'உலகமெ'ன்று தொடங்குகின்ற செய்யுள் போதும்!
உழைப்பென்று தொடங்குகின்ற கவிதை வேண்டும்
''நிலவுகொண்ட கறைகூட எங்கள் கைகள்
நீளுவதால் அழிந்துவிடும்'' என்னும் கொள்கைத்
திலகங்கள் பொற்காலம் படைப்பர்; ஆனல்
திராவகத்தீ நெஞ்சுடையார், உழைப்ப வர்க்கு
மலர்மாலை சூட்டவில்லை எனினுங் கூட
மலர்வளையம் வைக்காமல் இருந்தால் போதும்!



# உங்களது ரூபாய் நல்லதோர் பணிக்கு உதவட்டும்!

தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம்
மக்கள் நல்வாழ்வுத் திட்டம்.

இதன் வருவாய் கிராமப்புற மக்களின்
மேம்பாட்டுக்காக — அவர்களுக்கு
குடிநீர் வழங்குவதற்காக — பயன்படுத்தப்படுகிறது.



## இன்றே வாங்குங்கள்
# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒவ்வொரு வரிசைக்கும் 2 முதல் பரிசுகள்

ஒவ்வொரு வரிசைக்கும் மொத்தப் பரிசுகள் 2655
மொத்தப் பரிசுத் தொகை ரூ 3,90,000

ரூ. 50,000 வீதம்


மற்றும் ஏராளமான பரிசுகள்.

மொத்தம் 3 வரிசைகள்: BL, BM, BN

**பரிசுச் சீட்டின் விலை ரூ 1/- மட்டுமே!**

**குலுக்கல் நாள்: 20-5-1978**

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# நாட்டுப்புறக் கலைகளின் வரலாறு!


— டாக்டர் ஏ. என். பெருமாள்
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)


**நா**ட்டுப்புறக் கலைகள் பழமையும் பல்சுவையும் இணைந்து எளிய மக்களின் இனிமையான அரவணைப்பில் வளர்ந்து அரிய சிறப்புகளுடன் அன்றுதொட்டு இன்றுவரை மங்காப் பொலிவுடன் வாழ்ந்து வருகின்றன.

நாட்டுப்புற மக்கள் நாடகத்தின் சாயலுடைய காட்சிகளை அரங்கமின்றித் தெருக்களில் நின்றவாறு பாடல்களை மிகுதியாகக் கலந்து கூத்தாடிக் கூத்தாடி மக்களை மகிழ்விக்கும் கலையைத் தெருக்கூத்து என்று கூறலாம். இயற்கைச் சூழலே அரங்கமாக அமைந்தது. ஒளிக்காகவும் இயற்கையையே நம்பினர். வள்ளல்கள் மனமுவந்தளிக்கும் நன்கொடைகளை எதிர்பார்த்தே கலைஞர்கள் தெருக்கூத்து ஆட வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. தெருக்கூத்தின் அமைப்பு, உருவம், தன்மை ஆகியவை மாறுபட்டாலும் பொருளமைப்பில் காதலையும் கடவுளையும் உள்ளீடாகக் கொண்டே விளங்கும்.

இடைக்காலத்தில் மிகவும் கவர்ச்சிகரமாகவும் நடத்தப்பட்ட தெருக்கூத்து நாடகங்களில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், குளுவ நாடகம் ஆகியவற்றைச் சிறப்பாகக் கூறலாம். நிகழ்ச்சிகளை விளக்கும் முறையிலும் உரையாடலைக் கையாளும் முறையிலும் அவற்றில் நாடகத்தன்மை முழுக்க முழுக்க விளங்குவதைக் காணலாம். பாடல்களும் ஆடல்களும் நிறைந்துள்ளமையால் அவை நாட்டிய நாடகத்தின் தோற்றம் காட்டும். பண்டைக் கூத்துக்களின் சேர்க்கையாக வளர்ந்து பின்வரும் நாடகத்துக்கு முன்னோடியாகத் தெருக்கூத்துக்கள் விளங்கின என்று கருத இடமுள்ளது.

**பள்ளு :**

விவசாயத்தைத் தொழிலாகவுடைய பள்ளர்களே பள்ளு நாடகங்களின் முக்கிய பாத்திரங்கள். பள்ளுவின் முன்னோடிப் பாடல்களை 'உழத்திப் பாட்டு' என்று பன்னிரு பாட்டியல் சுட்டுகிறது. உழவர்கள் பாடக்கூடிய பாடல்களாக 'விருந்திற்பாணி' 'ஏர் மங்கலம்' ஆகிய இரண்டையும் சிலப்பதிகாரம் கூறுகிறது. திருவரங்கம் கோயிலில் பள்ளுப் பாட்டு, பறைப்பாட்டு ஆகியவை மிகச் சிறப்பாகப் பாடப்பட்டதாகக் கோயில் நிகழ்ச்சிக் குறிப்பான 'கோயிலொழுகு' கூறுகிறது.

**குறவஞ்சி :**

குறவஞ்சியில் ஒரு குறத்தி குறிசொல்லும் வாயிலாக அழ





கான பெண் ஒருத்தியின் காதல் நிகழ்ச்சி விரிவாகக் கூறப்படும். இறையுணர்வுக்கு ஒரு சிறந்த இடம் கொடுக்கப்பட்டிருக்கும். குறத்தியைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றன.

## நொண்டி நாடகம்:

நாட்டிய நாடகத்தின் ஒரு வகையான நொண்டி நாடகத்தில், நொண்டி ஒருவன் நாடகத்தில் முக்கியமான பாத்திர மாக வருவான். பொதுவாக நொண்டிச் சிந்து பாடல் அமைப்பில் இத்தகைய நாடகங்கள் எழுதப்படும். 18-ஆம் நூற்றாண்டில் இவை மிகச் சிறப்புற்று விளங்கியதாக அறிகிறோம்.

## குளுவ நாடகம் :

குளுவ நாடகத்தில் குளுவன் என்ற பாத்திரத்துக்குத்தான் சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் தொண்டு வேலை செய்யும் சாதாரண மனிதன். அவனுக்குச் சிறப்புக் கொடுக்கப் படுவதனால் இத்தகைய நாடகங்கள் பாமர மக்களைக் கவர்ந்தன.

## தெருக்கூத்து:

இவை தவிர, தெருக்கூத்தாகப் பல நாடகங்கள் நாட்டுப்புறக் கலைஞர்களால் நடிக்கப்பட்டன. ஊரில் நடத்தப்படும் திருவிழா, கோடைவிழா ஆகியவற்றில் இத்தகைய நாடகங்கள் மிகச் சிறப்பாக நடத்தப்படுவது உண்டு.

## கும்மியடித்தல்:

கும்மியடித்துப் பாடி ஆடுவது ஒரு சிறந்த காட்சியாகும். பெரும்பாலும் பெண்களே இந்த ஆட்டத்தில் கலந்து கொள்வர். நடிக்கப்படும் பாத்திரங்களுக்குத் தக்கவாறு ஆடையணி புனைந்தும் ஆடுவர்.

## ஒயிலாட்டம் :

கோவை மாவட்டத்தில் ஒயிலாட்டம் புகழ்பெற்ற நாட்டுப்புற ஆடலாகும். ஆண்கள் ஆடும் இந்த ஆட்டத்தின் வாயிலாக, முருகன், மதுரை வீரன், காத்தவராயன் போன்ற கதைகள் நடித்துக் காட்டப்படும். பெரும்பாலும் கலைஞர் கதைக்குத் தக்க வேடம் புனைந்து ஆடுவர்.

## பொம்மலாட்டம் :

பொம்மைகள் அல்லது பதுமைகளைப் பயன்படுத்திப் புராணக் கதைகளை நடித்துக் காட்டுவது பொம்மலாட்டம். திரைக்குப் பின்னுலிருந்து சூத்திரதாரி என்பான் பொம்மைகளைக் கயிற்றால் கட்டி அவற்றைக் கதைக்குத் தக்கவாறு ஆட்டி அசைத்துப் பாடுவான். குரலை மாற்றி மாற்றி உரையாடல் செய்வதனுல் சுவை மிகுதியாகும்.

## தோற்பாவைக் கூத்து:

தோலினுல் பாத்திரங்களின் உருவங்களைப் படமாக்கி அவற்றை ஒரு கழியுடன் இணைத்து சூத்திரதாரி இயக்குவதனுல் கூத்து இனிது நடைபெறும். பொம்மலாட்டம் போன்றே இது பெரும்பாலும் அமையும்.

## உறுமிக் கோமாளியாட்டம்:

ஊர்களில் விழா நடக்கும் போது ஒருவர் அல்லது இருவரால் உறுமிக் கோமாளியாட்டம் நடைபெறுகிறது. நகைச்சுவை கூட்டும் நடிகர்களைப் போன்று வேடிக்கையான தொப்பி, ஆடை அணிகள் முதலியவற்றை அணிந்தவாறு ஆடுவர். சில ஊர்களில் ஒப்பனை செய்யப்பட்ட இரண்டு காளைகளுடன் சேர்ந்து அவர்கள் ஆடுவதாகக் கூறப்படுகிறது.

## கரக ஆட்டம்:

கரக ஆட்டம் என்பதைச் சில ஊர்களில் 'கும்பாட்டம்' என்று கூறுவர். ஒரு பெண் தலையில் ஒப்பனை செய்யப்பட்ட ஒரு கும்பத்தை வைத்துக் கொண்டு நையாண்டி மேளத்தின் இசைக்குத் தக்கவாறு அபிநயம் பிடித்து ஆடுவதே கரக ஆட்டம்.

## பகல்வேடம் :

இரவில் வேடமிட்டு ஆடுவது போன்று சிலர் பகலில் வேடமிட்டு ஆடிப் பொருள் பெறுவது உண்டு. பெரும்பாலும் இவர்கள் அறுவடை நடக்கும்போது களத்து மேடுகளில் ஆடி, நெல் பெற்றுச் செல்வது வழக்கம். இத்தகைய பழக்கம் பெரும்பா




லும் வட மாவட்டங்களில் முன்பு அதிகமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

**கைச்சிலம்பு:**

விழக்காலங்களில் ஒரு சிலம்பை வைத்து அசைத்து ஒலியை எழுப்பி ஆடும் ஆட்டத்துக்குக் கைச்சிலம்பு ஆட்டம் என்று பெயர். தமுக்கு முதலிய தோல் கருவிகளின் தாள இசைக்குத் தக்கவாறு குதித்துக் குதித்து ஆடுவர்.

**காவடியாட்டம்:**

முருகக் கடவுளின் வணக்கத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது காவடியாட்டம். பெரும்பாலும் காவடியாட்டம் கும்பாட்டத்துடன் சேர்ந்து நையாண்டி மேள இசைப்புடன் நடைபெறும். காவடியை மயில் பீலியால் ஒப்பனை செய்திருப்பர்.



**அனுமன் ஆட்டம்:**

புராண இதிகாசக் கதைப் பாத்திரங்கள் போன்று வேடம் புனைந்து விழாக் காலங்களில் ஆடி, மக்களை மகிழ்விப்பது நாட்டுப்புறக் கலைஞர்களின் வழக்கம். அவ்வாறு அவர்கள் தாங்கும் வேடங்களில் ஒன்று அனுமன். குரங்கு போன்று வாலும், முகமும் கொண்டு வண்ண ஆடையணிந்து தலையில் ஒரு தொப்பி வைத்து ஆடுவர்.

**பொய்க்கால் குதிரையாட்டம்:**

மரத்தினால் ஒரு குதிரையின் மேற்பகுதியைச் செய்து கீழ்ப் பகுதியை ஒரு துணியால் மறைத்து விடுவர். அந்தக் குதிரையின் உள் பகுதியில் ஒரு மனிதன் நிற்கக்கூடிய அளவுக்கு இடைவெளி இருக்கும். அவன் மரத்தாலான செருப்பு அணிந்திருப்பான். அதனைத் தரையுடன் மோதிக் குதிரையின் குளம்பு ஒலி எழுப்புவான். இந்த ஆட்டத்துக்குத் துணையாக இசைக்கப்படும் வாத்திய இசைக்கு ஒத்துக் குதிரையை ஆட்டிப் பிடித்தவாறு அசைந்து அசைந்து ஆடுவான். அதில் கலைச் சிறப்புச் காணப்படும். ஊரில் விழாக்கள் நடக்கும்போது பலவித ஆட்டங்கள் நடைபெறும். அவற்றுள் ஒன்றாகப் பொய்க்கால் குதிரையாட்டமும் நடக்கும்.

**உறியடியாட்டம்:**

இது கண்ணனின் கதையைத் தழுவிய ஒருவித ஆடல். உறியில் வெண்ணெய் திருடும் காட்சியைச் சித்திரிக்கும். கண்ணன் வேடமிட்ட ஒருவன் கைத்தடியடன் ஆடி ஆடி வருவான்; ஓர்



உறியில் பானை ஒன்று தொங்கும். அதைக் கைத்தடி கொண்டு தாக்கும்போது, பக்கத்தில் மறைந்திருக்கும் ஒருவரால் உயரே இழுக்கப்பட்டுவிழும்; பின், தாழ்த்தப்படும். இப்படிப் பலமுறைக்குப் பின்னர் கண்ணனின் கைத்தடிக்குப் பானை பலியாகும்; ஆட்டமும் முடிவுறும்.



### கிருட்டின ஆட்டம்:

இந்த ஆட்டத்தை நாட்டுப்புற மக்கள் 'கிட்ன ஆட்டம்' என்று கூறுவதைக் கேட்கலாம். கண்ணனைப் போன்று புல்லாங்குழலைக் கையில் தாங்கி, அதை ஊதுவது போன்று காட்டி, இசைக்குத் தக்கவாறு ஆடுவது இன்பக் காட்சியாகும்.

### வேதாள ஆட்டம்:

வேதாளம் என்பது ஒருவகைப் பூதம். குறுகிய உயரம்; கொடூரமான முகத்தோற்றம் ஆகியவை கொண்டது வேதாளம். இந்த ஆட்டம் ஆடுபவன் ஒரு முகமூடி அணிந்து இருப்பான். அதைப் பார்க்கவே மிகவும் பயமாக இருக்கும். கையில் ஒரு தீச்சட்டியும் உடம்பு முழுவதும் கருமைக் கோலமும் கொண்டு விளங்குவான். அவனைச் சுற்றிச் சிறுவர்கள் வேப்பங்குழையைக் கையில் வைத்துக் கொண்டு ஆடுவர். அவர்களைக் 'கொள்ளி யாப்பை' என்று மக்கள் அழைப்பர். உண்மையில் அவர்கள் கொள்ளி வாய்ப்பேயின் வேடப் புனைவுகள் ஆகும். உடம்பு முழுவதும் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி இருப்பார்கள்.

### ஆலி ஆட்டம்:

அச்சந்தரும் பெரிய மனித உருவத்தை மூங்கிலாலும் வைக்கோலாலும் செய்து, அதற்கு ஒரு முகமூடியும் சூட்டுவர். அதற்கு ஆலி என்று பெயர். அதற்குள் ஒரு மனிதன் நின்று ஒருவிதமான கீச்சொலி எழுப்பி, அங்கும் இங்கும் துள்ளி ஆடுவான். நாதசுர இசைக்குத் தக்க இந்த ஆட்டம் நடைபெறும். கிராம தேவதைகளை ஊர்சுற்றி எடுத்து வரும்போது இம்மாதிரியான ஆட்டங்கள் உடன் நிகழும்.







## சுணியான் ஆட்டம்:

பொதுவாக இயக்கி, சுடலை, மாடன், பிச்சைக்காரன் போன்ற ஊர்த் தேவதைகளுக்கு விழா எடுக்கும்போது சுணியான் ஆட்டம் நடைபெறும். ஆண்கள் பெண் வேடமிட்டுச் சாமியாடுபவருடன் கூடி ஆடுவார்கள். அவர்கள் மகுடம் என்ற தோற் கருவியின் தாளவொலிக்குத் தக்கவாறு பாட்டுப்பாடி ஆடுவார்கள்.

## புலிவேடம்.

புலிபோன்று புனைந்து பெரு நாட்களில் ஊரில் ஒரு தனி இடத்தில் ஆடும் ஆட்டத்தைப் புலிவேடம் என்று சொல்வர். ஒரு மனிதன் உடல் முழுவதும் வரி வரியாகக் கோடு போட்டு கடுவாய் போன்று வண்ணம் பூசி ஆடுவதைப் பார்க்கலாம். கையில் சிலர் ஆட்டுக் கொம்பை வைத்துக் கொடூரமான முகத் தோற்றம் காட்டி ஆடுவர். செண்டை மேளத்துக்குத் தக்கவாறு ஆட்டம் நடக்கும். புலிவேடம் புனைவோர் உடலில் புள்ளி புள்ளியாக வண்ணம் பூசி இருப்பர். இரண்டும் தனித் தனி ஆட்டமாகவே தோன்றுகின்றன.

## சக்கையாட்டம்:

பண்டைக் காலத்தில் பரவலாக நடைபெற்றுவந்த சாக்கைக் கூத்தின் வழித் தோன்றலாக இதனைக் கூறலாம். ஆட்டம் ஆடும்போது வேடிக்கையான ஆடையணிகளை அணிந்திருப்பர். ஆடைகள் மிகப் பெரிதாக இருப்பதனால் அங்கும் இங்கும் தொங்கிக் காணப்படும். நகைப் பேச்சும், எள்ளல் உரைகளும் இந்தக் கலைஞர்களின் வாய் மூலம் வெளிப்பட்டுச் சிரிப்பை மூட்டிச் சிந்தனையைத் தூண்டுவதாகக் கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் பல ஊர்களில் இத்தகைய ஆட்டம் நடைபெறுகிறது. இதன் வளர்ச்சிக் கூறாகக் கேரளாவில் இன்று மிகச் சிறப்பாக நடைபெறும். கதகளியைச் சொல்லலாம். செண்டை மேளம், சேமக்கலம் முதலியவை ஒலிக்க, இவ்வாட்டம் மிக விமரிசையாக நடைபெறும். ஒரு குத்து விளக்கு எரிந்துகொண்டிருக்கும். சிலர் நிகழ்ச்சிக்குத் தக்க பாடல்களைப் பாடுவர். குமரி மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் இந்த ஆட்டம் பரவலாக நடைபெறுவதைப் பார்க்கலாம்.

## வில்லுப்பாட்டு:

வில்லுப்பாட்டை மிகச் சிறந்த நாட்டுப்புறக் கலையாகக் கூறலாம். வில்லின் நாணொலி மகிமையை அறிந்த மனிதன் அதனை முறைப்படுத்தி விரைவில் இசையின் வசப்படுத்திக் கருவிகளின் துணையினை அதோடு இணைத்து வில்லிசையைச் செம்மைப்படுத்தி ஒரு நல்ல பெரும் கலையாக்கி மகிழ்கிறான்.

இதைத்தவிர தேவராட்டம் என்ற ஒருவகையான ஆட்டம் இருந்ததாக அறியமுடிகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் வடபாங்கு, தென்பாங்கு ஆகிய இருவகைத் தெருக்கூத்து நாடகங்கள் நடத்தப்படுவதாகக் கூறுகிறார்கள். இலங்கையில் பட்டிகோலா என்ற இடத்தில் தமிழ் நாட்டுப் புறக்கூத்தின் கூறுகள் நிறைந்த வடமோடி, தென்மோடி ஆகிய நாடகங்கள் நடத்தப்படுவதாக அறிகிறோம்.

(தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்திய ஆறாவது கிராமியக் கலை விழாச் சிறப்பு மலரிலிருந்து)



எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும்!


TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.*

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.



# கோழிகளைத் தாக்கும் கொடிய புற்றுநோய்

**மா**ர்க்ஸ் நோய் கோழியினத்தையும் வான்கோழிகளையும் தாக்கும் ஒரு கொடிய புற்று நோய் ஆகும். இந் நோயினால் நம் நாட்டில் மட்டுமல்லாது உலகத்தின் பல பாகங்களிலும் பலத்த பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. இந் நோய் ஒரு வகை ஹெர்பிஸ் வைரஸ் என்னும் நோய் நுண்கிருமிகளால் ஏற்படுகிறது. 6 வாரம் முதல் 26 வாரங்கள் வயதுள்ள கோழிகளையே இந் நோய் தாக்கும். முக்கியமாக இளங் குஞ்சுகளை இது கொடூரமாகத் தாக்குகிறது. இது மிக வேகமாகப் பரவக்கூடிய ஒரு தொற்று நோய் ஆதலால், ஆழ்கூளக் குழி முறையில் கோழிகள் நெருக்கமாகவும் கூட்டங்களாகவும் வளர்க்கப்படுவதால் இந் நோய் மிக வேகமாகப் பரவும்.

### நோய் பரவும் விதம்

ஹெர்பிஸ் வைரஸ் எனப்படும் இந்நோய்க்குக் காரணமான நோய் நுண் கிருமிகள், இந் நோய் பீடிக்கப்பட்ட கோழிகளின் உடலில் இருந்து கீழே விழும் இறகுகளிலும், உதிர்ந்த தோல் தூள்களிலும் மற்றும் கழிவுகளிலும் மிகுந்து காணப்படும். மற்றும் இவ்வாறு வெளிவரும் நுண்கிருமிகள் தண்ணீரிலும், காற்றிலும் நிறைந்திருக்கும். இந் நுண்கிருமிகளை உட்கொள்வதன் மூலமாகவும், காற்றில் நிறைந்திருக்கும் நுண்கிருமிகளைச் சுவாசித்தல் மூலமாகவும் இந் நோயினால் பீடிக்கப்படுகின்றன. இவ்வாறு தொற்றுதல் மூலம் ஒரு கோழியிலிருந்து, பண்ணையில் உள்ள மற்ற குஞ்சுகளுக்கு இந் நோய் எளிதில் பரவுகிறது.

### நோயின் அறிகுறிகள் :

கோழிப் பண்ணையில் ஒவ்வொரு நாளும் திடீரென்று இறக்கும் கோழிகளின் எண்ணிக்கை அதிகமாவதுடன், இறந்த கோழிகளில் பெரும் பாலானவை இளம் குஞ்சுகளாக இருக்கும். இந் நோயினால் தாக்கப்பட்ட குஞ்சுகள் உறங்கிக் கொண்டு, சோர்வுடன் காணப்படுவதுடன், கால்களும் இறக்கையும் முன்னும் பின்னுமாக மடங்கி நடக்க முடியாமல் இருக்கும். கண் பார்வை மங்கும்.

இந் நோயினால் இறந்த கோழிகளைப் பரிசோதித்துப் பார்த்தால் கல்லீரல் சற்றுப் பெருத்து இருப்பதுடன், கல்லீரலில் மேல்புறத்திலும், உள்ளிலும் 0.5 முதல் 1.5 செ.மீ. அளவுள்ள வெண்ணிறமுள்ள தடிப்பான புள்ளிகள் காணப்படும். மற்றும் இதயம், மண்ணீரல், தோல், மூத்திரக் காய், குடல் முதலிய உறுப்புகளிலும் இது போன்ற வெண்ணிறத் தடிப்புகள் காணப்படும். மேலும் இறக்கைக்குச் செல்லும் முக்கிய நரம்பும் பின் கால்களுக்கான நரம்பும் வெண்ணிறமாக, தட்டையாக ரிப்பன் போன்று இருப்பதிலிருந்து மாறுபட்டுச் சாம்பல் நிறத்தில் ஒருபென்சிலைப் போன்று தடித்து இருக்கும்.

### நோய்த் தடுப்பு முறை :

நோயினால் பாதிக்கப்பட்ட கோழிகளை மருந்து கொண்டு குணப்படுத்த முடியாது. ஆகவே தடுப்பு முறைகளின் மூலமாகத்தான் இதனை ஓர் அளவிற்குக் கட்டுப்படுத்த முடியும். எனினும் தற்போது உள்ள தடுப்பு ஊசி மூலம் இந் நோயினை அடியோடு தடுக்க இயலாவிடினும், ஓர் அளவிற்கு அதன் கொடுமையைக் குறைக்க முடியும்.

1. நோய் இல்லாத பண்ணைகளிலிருந்து மட்டும் குஞ்சுகளை வாங்க வேண்டும்.

2. குஞ்சு பொரித்த ஒருநாளுக்குள் அவைகளுக்குத் தடுப்பு ஊசி போட வேண்டும்.

3. முதல் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குக் குஞ்சுகளைப் பெரிய கோழிகளிடமிருந்து பிரித்து வளர்க்க வேண்டும். ஏனெனில் அப் பருவத்தில் தான் இந் நோய் கோழிகளை எளிதில் தாக்குகிறது.

4. சுத்தமான சுகாதார முறையினாலும், பாதிக்கப்பட்ட கோழிகளை உடனே கவனித்துத் தனியாகப் பிரிப்பதன் மூலமும் இந் நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

5. கோழிக் கூண்டுகளை அடிக்கடி பூச்சி கொல்லி மூலம் சுத்தப்படுத்தி, இந் நோய்க் கிருமிகளைத் தாங்கியிருக்கும் பூச்சிகளை அழிக்கலாம்.


6. இந் நோயினால் இறந்த கோழிகளை, எரித்துவிட வேண்டும்.

7. தற்போது இந் நோய்க்கு எதிர்ப்புச் சக்தியுள்ள கோழி இனங்களை உற்பத்தி செய்ய ஆராய்ச்சி மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


**தகவல் :**

**ஆர். இராமகிருஷ்ணன்,**
**ஜி. எ. இரகுமதுல்லாகான்,**
**பி. முரளி மனோகர்,**

**நோய்க் குறியியல் துறை,**
**சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.**

# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.




பண்டைச் சிறப்பும் நவீன
நளினமும் இணைந்து திகழ்வது
வண்ணத்துப்பூச்சி

# பாட்டாளி நலனுக்குப் பாடுபட்டால்தான்...



— பேரறிஞர் அண்ணா

நம் நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக் கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள். இயற்கை வளத்தைப் பயன்படுத்தித் தொழில் திறனை உண்டாக்குபவர்கள் — தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் யாரும் ஐயப்பட வேண்டாம்!

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்து விட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

தொழிலாளர் உரிமைகளையும், அவர்கள் நலனையும் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ அவ்வளவு விரிந்த அளவில், தொழில் வளம் பெருகும். நாட்டுடைமை சேதமாகாமல் செயல்படுமானால் தொழிலைப் பெருக்கலாம். தொழிலாளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்க வேண்டும்.

முதலாளிகளுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்.

நன்றாக ஓடிய பந்தயக் குதிரை கொஞ்சம் நொண்டியானால்கூட சுட்டுவிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோலத் தொழிலாளர் நலிவடைந்தால் அவர்களை விரட்டிவிடக்கூடாது.

சுடப்பட்ட குதிரை இறந்த பின்பு அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வார். ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால் அவன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

அமெரிக்காவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இயந்திரம் தருவிக்கலாம். ஆனால், மனித இயந்திரங்களைத் தருவிக்க முடியாது. அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம்தான் செய்கிறது. நூறில் ஒரு பங்காவது பாட்டாளி நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

தொழிலாளர் சமூகம், நல்ல பலம் பெற்றால் அவர்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் தெம்போடு உழைப்பார்கள். மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்; செல்வம் வளரும்.

எனவே, தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டாலும் அது சமூகத்துக்கு, ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும். தொழிலாளருக்காகச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்கில் கணக்காகி விடுவதில்லை.

இன்று மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றும் நவீன கருவிகளைப்பற்றிக் கூறுகிறார்கள். அதையும் மனிதன் தான் செய்தான் என்பதை மறந்துவிடலாகாது.

உணர்ச்சியில் உந்தப்படுபவன் மனிதன். அந்த மனிதன் அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி-அவனது கண்களில் கண்ணீர்-அவனது நெஞ்சத்தில் வலி-அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால், அந்த மனித யந்திரத்திடமிருந்து முழுப் பயனும் பெறமுடியாது.

அந்த மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து அவனது வலியினையும் வாட்டத்தையும் போக்கிடக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பு இது. அந்த மனித இயந்திரத்தினைக் கவனித்தால், அது உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை நிற்கும்.

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டால்தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைபட்ட மனத்தோடு அவர்கள் வேலை செய்தால் தொழிலில் நேர்த்தியிருக்காது-தரம் இருக்காது-பயனும் கிடைக்காது.

இயந்திரங்களை எந்த அளவு நேர்த்தியாக வைத்துக் கொள்கிறோமோ அந்த அளவு அவற்றிலிருந்து பயன்பெற முடிகிறது.

காலையில் எழுந்தவுடன் பச்சைப் பசேலென்ற காட்சியும் பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழ்தலே உடலுக்கு நலன் பயக்கும் என்று உடற்கூறு நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கான கட்டடங்களாகி விடுகின்றதைப் பார்க்கிறோம். தொழில்கள் அதிகமாகி வளரும்போது புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்தக் காரணங்களால், நாம் தொழில் வளர்ச்சியை விட்டு விட முடியாது. தொழில் வளர்ந்தால்தான் பொதுச் செல்வம் ஏற்படும்-அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளமுண்டாகும்.

தொழிலாளரது வாழ்வானது பாழ்நிலமாக அல்லாமல், பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும்.

# திரையுலகுக்குப் புதுவாழ்வு!

**த**மிழ்ப் புத்தாண்டு நாள் !

தமிழ்த் திரையுலகம் பூரித்து மகிழ்ந்த நாள். கடந்த ஒன்பது ஆண்டுகளாக வளர்ச்சியில்லாமல் நசிந்துவிட்ட தமிழ்த் திரைப் படத் தொழில் தமிழக அரசின் உதவியினால் ஆக்கமும்—ஊக்கமும் பெற்று வளரும் என்ற நம்பிக்கை பிறந்த நாள்!

*14-4-1978*—சென்னை திரைப் படத் தொழில் நுட்பக் கல்லூரி யில் சிறப்பானதொரு விழா. திரைப்படத் தொழில் சம்பந்தப் பட்ட பெருமக்கள் பலரும் பங்கு ஏற்ற சீரிய விழா.

இளைஞர் ஒருவர் —இருதய நாத் என்று பெயர்—மேடைக்குச் செல்கிறார். மாண்புமிகு முதல் வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிட மிருந்து ஒரு சிறு அட்டைப் பெட்டியைப் பெற்றுக் கொள் கிறார். அடுத்து திருமதி தமிழரசி. அவருக்கும் ஓர் அட்டைப்பெட்டி யைப்பெறுகிறார்கள். தொடர்ந்து ராஜகோபால்-ரமேஷ் பாபு என்ற இருவர்—ஒரு பெட்டியைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

மூர்த்தி சிறிது-கீர்த்தி பெரிது என்பார்கள். சிறிய அட்டைப் பெட்டிதான். ஆனால் ஒவ்வொரு பெட்டிக்குள்ளும் இருந்ததோ ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை; மூன்று தமிழ்த் திரைப்படங்களின் தயாரிப்பா ளர்களுக்குத் தமிழக அரசு அளித்த உதவி நிதி.

தரமான நல்லதமிழ்த் திரைப் படங்களுக்கு உதவி நிதி அளிக் கும் புதியதோர் திட்டத்தைத் தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ளது.

''நம் நாட்டிலுள்ள கோடிக் கணக்கான ஏழை மக்களுக்குத் திரைப்படங்களை விட்டால் வேறு பொழுது போக்கு எதுவுமில்லை. அந்த ஏழை மக்களின் உள்ளங் களில் உயர்ந்த கருத்துக்களைப் பதிய வைப்பதற்குத்திரைப்படங் களைப்போல் வேறு சிறந்த சாதன மும் இல்லை. எனவே பொழுது போக்கு அம்சங்கள் மட்டுமின்றி சிறந்தகருத்துக்களையும் கொண்ட திரைப்படங்கள் உருவாக்கப்பட வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடும் திரைப்படத்தயாரிப்பா ளர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதுதான் இந்தத் திட்டத் தின் இலட்சியம். . .'' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் இத்திட்டத்தின் நோக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

''அரசுக்கு எந்தச் செலவும்— சிரமமும் இல்லாமல் ஆண்டொன் றுக்கு 20 கோடி ரூபாய்க்கு மேல் வருமானத்தைக் கொடுப்பது திரைப்படத் தொழில். இந்தத் தொழில் கடந்தஒன்பது ஆண்டுக் காலம் அழிக்கப்பட்ட அசோக வனம்போல் சிதைந்து சீர்குலைந்து விட்டது. அந்த நிலையை மாற்றி —தமிழ்த் திரையுலகுக்குப் புத் துயிர் அளிக்கவே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது '' என்று மாண்புமிகு செய்தி — சுற்றுலா அமைச்சர் கோடிட்டுக் காட்டினார்.

ஆண்டுதோறும் சிறந்த தமிழ்ப் படங்கள் என ஐந்தைத் தேர்ந்து எடுத்து ஒவ்வொரு படத்தின் தயாரிப்பாளருக்கும் ஒரு இலட் சம் ரூபாய் நிதி உதவி அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய அம்சம்.

இதற்கேற்ப 1976-77ல் வெளி யான படங்களுள் ஐந்து படங் களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு பு. ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் அரசு ஒரு குழுவை அமைத்தது. இந்தக் குழு, போட்டியில் கலந்து கொண்ட படங்களைப் பார்த்த பின்னர் மூன்று படங்களை மட்டும் தேர்ந்தெடுத்தது. அவை — **'அன்னக்கிளி', 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'சந்ததி'.**

இக்குழுவில் உறுப்பினராகப் பங்கேற்றிருந்த திரைப்பட இயக்குநர் திரு ப. நீலகண்டன் கூறுகிறார் :


''மூன்று படங்களும் மூன்று கோணங்களில் தனித்து விளங்கு கின்றன.

''கிராமப் புறத்தில் ஒரு மருத்து வச்சி—இளம் பெண்தான் என்று லும் சொந்த சுக துக்கத்தைக் கருதாத தொண்டு மனம் கொண் டவள். அவளது தூய அன்புக்குப் பாத்திரமான பள்ளி ஆசிரியன் ஒருவன். வரதட்சிணை தர முடி யாத காரணத்தால், திருமணம் ஆகாமல் இருக்கும் தன் சகோ தரிக்கு வாழ்வு தருவதற்காக வசதியுள்ள ஒருவரின் பெண்ணை மணந்து, அதன் வாயிலாகத் தன் சகோதரியின் நல்வாழ்வுக்கு வழி கோலுகிறான். அவன் மேல் ஆருக் காதல் (காதலா அது ?. . . அல்ல . . .அல்ல . . .அதனினும் மேலான —வார்த்தைகளால் சொல்ல முடியாத —அன்புப் பிணைப்பு) கொண்டிருந்த அந்த மருத்துவச்சி, தனக்கேற்பட்ட ஏமாற்றத்தைத் தியாக உணர் வோடு தாங்கிக் கொண்டு — அந்த ஆசிரியனின் குடும்ப நலத் துக்காகத் தனது இன்னுயிரைத் தியாகம் செய்கிறாள். இது **'அன்னக்கிளி'** கதை.

இந்தப் படத்தில் அன்பு என் னும் உறவு மிகவும் தூய்மையாக வும்—கண்ணியமாகவும் சித்திரிக் கப்பட்டுள்ளது. படம் முழுவதும் கிராமியச் சூழ்நிலையில் —கிராம வாழ்க்கையின் சிறப்புக்களையும், கிராம மக்களின் வித விதமான எண்ண ஓட்டங்களையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது. மிகக் குறைந்த செலவில் தயாரிக்கப்

**'அன்னக்கிளி'** படத்திற்குரிய நிதி உதவியைத் **தமிழரசி** பெறுகிறார்.





'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்திற்குரிய நிதி உதவியை இருதயநாத் பெறுகிறார்.

பட்ட இந்தப் படத்தின் வாயிலாகப் புதியதோர் இசையமைப்பாளர் தமிழ்த் திரை உலகுக்குக் கிடைத்திருக்கிறார்.

''நடுத்தரக் குடும்பங்களைச் சுற்றிச் சுழல்கிறது 'சில நேரங்களில் சில மனிதர்கள்' கதை அமைப்பு. இன்றைய இளம் தலைமுறையினருக்கு இந்தப் படம் சில நல்ல படிப்பினைகளைத் தருகிறது. எந்தப் பருவப் பெண்ணும்—எந்த நேரத்திலும் — முன்பின் தெரியாத எந்த ஆடவனுடன் பழகும் பொழுதும் விழிப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். சந்தர்ப்பச் சூழ்நிலைகளால்—எதிர்பாராத விதமாக ஒரு முறை கெட்டுப்போனவர்கள் மனமுடைந்து தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளாமல் —அல்லது கெடுத்துக் கொள்ளாமல் மனத் துணிவோடு தூய வாழ்க்கை வாழ வேண்டும் — வாழ முடியும் என்பதற்கு இந்தப் படத்தின் கதாநாயகி கங்கா நல்லதோர் எடுத்துக் காட்டு. அவள் நினைத்திருந்தால் தனக்கு ஏற்பட்ட களங்கத்தை மறைத்து, இன்னொருவனை மணந்துகொண்டு இல்வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஆனால் அவள் மனச்சாட்சி அதற்கு இடம் தரவில்லை. தனக்குக் கணவனாக வரப்போகிறவனை ஏமாற்றுவதோடு — தன்னையும் ஏமாற்றிக் கொள்ள அவள் விரும்பவில்லை. தன்னைக் கெடுத்தவன் யாரோ அவனையே மணந்து கொள்ளவேண்டும். அதுவும் சரீர சுகத்துக்காக அல்ல.... சமுதாயக் கட்டுப்பாடுகளுக்காக என்று நினைக்கிறாள். அது கைகூடாத போது அந்தத் துயரத்தை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு தனி மரமாக நிற்கிறாள்.

''சந்ததி''—சாதி வெறியையும்—உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற அந்தஸ்து வேறுபாடுகளையும் கண்ணியமாகத் தாக்குகிறது. நோய்வாய்ப்பட்டுக்கிடக்கும் தன் தாயைக் காப்பாற்றுவதற்காக, மனச்சாட்சிக்குவிரோதமாகநிர்ப்பந்திக்கப்பட்டு ஒரு பெண் விலைமகளாகி விடுகிறாள். ஒரு பணக்காரர், தனக்குச் சந்ததி வேண்டுமென்பதற்காக, நோய்வாய்ப்பட்டிருக்கும் தன் மகனுக்குக் குறிப்பிட்ட காலம் வரை மனைவியாக இருந்து ஒரு குழந்தையைப் பெற்றுத்தர வேண்டும் என்று அந்தப் பெண்ணிடம் கேட்கிறார். அவளும் சம்மதிக்கிறாள். அதற்குக் காரணம்—இதிலிருந்தாவது தனக்கு ஒரு நல்வாழ்வு கிட்டாதா என்ற நம்பிக்கைதான். விலைமகளாக இருந்த அவள், தன் கணவனிடம் அன்பாகவும் —நம்பிக்கையாகவும் நடந்து கொண்டு ஒரு குழந்தையையும் பெற்றுத் தருகிறாள். ஒப்பந்தப்படி, குழந்தையைக் கொடுத்து விட்டுப் பணத்தை எடுத்துக் கொண்டு விலகிவிடச் சொல்கிறார், அந்தச் செல்வந்தர். ஆனால், அவளோ தனக்குப் பணம் வேண்டாம் — குழந்தைதான் வேண்டும் என்று தாய்மையுணர்ச்சியோடு மன்றாடுகிறாள். அந்தஸ்தும்—உயர்ந்தவன் —தாழ்ந்தவன் என்று வேறுபாடும் குறுக்கே நிற்கிறது. ஆனால் முடிவில் அந்தஸ்தின் ஆர்ப்பாட்டம் அடங்கித் தாய்மை வெற்றியடைகிறது. தன்னலம் என்பதே சிறிதும் இல்லாத தாய்மையுணர்ச்சி இந்தப் படத்தில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது''.

இந்த மூன்று படங்களுக்கும், அரசின் உதவி நிதியான ஒவ்வொரு இலட்ச ரூபாயைத் தமிழக முதல்வர் வழங்கினார்.

'நடைமுறை ஆண்டிலிருந்து, சிறந்த படம்—சிறந்த நடிகர்—நடிகை—இயக்குநர் —கதை — உரையாடலாசிரியர் என்று பல பரிசுகள் — தமிழ்த் திரையுலகின் முன்னோடியாக விளங்கிய இயக்குநர் ராஜா சாண்டோ நினைவு நிதி உதவி ஆகியவை வழங்குவதற்கான அரசின் புதிய திட்டத்தை இவ்விழாவில் அறிவித்த செய்தி—சுற்றுலா அமைச்சர், நாடகக் கலை வளர்ச்சிக்கும் அரசு திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தும்' என்று உறுதியளித்தார்.

—டி. கே. டி. துரைராசன்

'சந்ததி' படத்துக்குரிய நிதி உதவியை ராஜகோபால், ரமேஷ் பாபு பெறுகின்றனர்.



# தொழிலாளர் நலம்!

எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்.,
தொழிலாளர் துறை ஆணையர்

தமிழ்நாடு இன்று தொழில் அமைதியில் முன்னோடியாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள், தோட்டத் தொழில் நிறுவனங்கள், மோட்டார் தொழிற்கூடங்கள் ஆக 10,374 நிறுவனங்கள் தங்களுள் 6,61,245 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ளன. அவற்றில் இன்று தொழில் தகராறுகளினாலும், வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பினாலும் பாதிக்கப்பட்டவை 19 தொழில் நிறுவனங்களும், 4,957 தொழிலாளர்களும் மட்டுமே என்றால் அது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலனுக்கும் சிறந்த அறிகுறியாகும்.

இந்தச் சூழ்நிலை உருவாவதற்குத் தொழிலாளர்களின் உரிமை எதுவும் பறிக்கப்படத் தேவையில்லை.

தமிழ்நாட்டில் 1977ல் மக்களாட்சி ஏற்பட்டவுடனேயே, குமுறிக் கொண்டிருந்த தங்கள் ஏக்கங்களையும் குறைகளையும் தொழிலாளர்கள் தங்கள் வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டம் முதலியவற்றால் தெரியப்படுத்தினார்கள். ஆனால், அரசின் அனுதாபமான அணுகுமுறையின்மூலம் அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் நிவாரணம் கிடைத்து உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. 1977ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதி முதல் 1978ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதி முடிய ஏறத்தாழ 5,401 தொழிற் தகராறுகள் ஏற்பட்டன. அவற்றுள் 4,508 அரசு அமைச்சர்களின் தலையீட்டாலும் தொழில் துறை அலுவலர்களின் சமரச முயற்சிகளாலும் சுமுகமாகத் தீர்க்கப்பட்டன. 489 தொழில் தகராறுகள் தொழில் நீதிமன்றங்களின் தீர்ப்பிற்கு விடப்பட்டது.


தொழிலாளர்களின் நலனையும், உரிமையையும் பாதுகாக்கப் பல சட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. தொழிற்சாலைச் சட்டம் 1948, தொழில் தகராறு சட்டம் 1947, பூரிப்பூதியம் வழங்கும் சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய விழா விடுமுறை) சட்டம், 1959, குறைந்த பட்ச ஊதியச் சட்டம் 1948 முதலிய பற்பல சட்டங்களின் நற்பயன் தொழிலாளிக்கு முழுமையாகக் கிடைக்க அவற்றைச் சிறப்புறச் செயற்படுத்துவதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. அதோடு நில்லாது, அந்தச் சட்டங்களின் ஓட்டைகளை அடைக்கவும் சிக்கல்களை நீக்கவும் முயற்சி எடுத்து வருகிறது. அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.

தொழில் தகராறு ஏற்பட்டவுடன் முதலாளி, தொழிலாளி ஆகிய இரு தரப்பினரையும் அழைத்துத் தகராறைத் தீர்த்து வைக்கச் செய்யும் பணியைத் தொழில்துறை அலுவலர் ஏற்கிறார். ஆனால், ஒரு சில நிர்வாகத்தினர் அவர் அழைக்கும்பொழுது வராத காரணத்தினால் மேற்கண்ட அலுவலர் செவ்வனே செயல்பட முடியாமல் போய்விடுகிறது. இதைத் தவிர்க்கச் சமரச அலுவலர்களுக்குக் கட்டாயமாக வரவழைக்கும் அதிகாரம் (Summoning powers) கொடுக்க வேண்டும் எனத் தமிழக அரசு மத்திய அரசிற்குப் பரிந்துரை வழங்கி உள்ளது.

தற்போது உள்ள சட்டத்தில் பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு (Protected workman) ஒரு சில சலுகைகள் உள்ளன. ஆனால், பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்கள் யார் என்பது பல நேரங்களில் சிக்கலில் முடிகிறது. தொழிற் சங்கங்கள் பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்களின் பட்டியலை அனுப்பி நிர்வாகத்தினர் பார்த்துப் பதில் அனுப்பியபின் அவர்கள் பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்கள் ஆவார்கள். இப்போது எல்லாத் தொழிற் சங்க அலுவலர்களுமே பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்களாகக் கருதப்பட வேண்டும் என்று சட்டத்தைத் திருத்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

உடன்படிக்கைகளை மீறுபவர்களுக்கு அபராதம் அல்லது சிறைத் தண்டனை தற்போதைய சட்டத்தில் உள்ளது. உடன்படிக்கைகளை மீறுபவர்களுக்குச் சிறைத் தண்டனை மட்டுமே வழங்க சட்டத்தில் திருத்தக் கேட்கப்பட்டு உள்ளது. இதனால் ஒப்பந்தங்களை மீறிவிட்டு அபராதம் கட்டிவிட்டுச் செல்லும் நிலை மாறும். சங்க அலுவலர்களை ரகசிய வாக்கு எடுப்பு மூலம் தேர்ந்து எடுக்க வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 240 நாட்கள் வேலை செய்தால்தான் ஈட்டிய விடுப்பு கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. அதை மாற்றி



வாரத்தில் 5 நாட்கள் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 200 நாட்களும் வாரத்தில் 6 நாட்கள் இருக்கும் மாதத்திற்கு 25, 26 நாட்கள் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஏதாவது ஒரு ஆண்டு 240 நாட்கள் வேலை செய்து விட்டால் தொடர்ந்து 20 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுக்க வேண்டும் என சட்டத்தைத் திருத்த, பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பிரசவ வசதி சட்டத்தின்கீழ் செயல்படத் தகுதியுள்ள நாட்களில் தேசிய பண்டிகைவிடுமுறை நாட்களையும் இணைத்துக்கொள்ள வகை செய்து சட்டத்தைத் திருத்த இருக்கிறது.

பெருந் தொழிற்சாலைகளில் உள்ள தொழிற்சாலைகள் மட்டும் அல்லாது சிதறிக் கிடக்கும் பல்வேறு பாட்டாளிகட்கும் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறும் வகையை அரசு செய்துள்ளது. அதற்காகவேகீழ்க்கண்டதொழில்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் உயர்த்த வேண்டும் அல்லது முதன் முறையாகத் தர வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1. சினிமாத் தொழிற் பணிகள்.

2. உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த பணிகள்.

3. செங்கல், ஓடு தொழிலில் ஈடுபடும் பணிகள்.

4. தீப்பெட்டி, மத்தாப்புத் தொழில்கள்.

5. சவ்வரிசித் தொழில்.

6. உப்பளத் தொழில்.

இவை மட்டுமல்லாது கீழ்க்கண்ட தொழிலிலுள்ள உழைப்பாளிகளுக்கும் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1. எண்ணெய் ஆலைகளில் பணிபுரிபவர்.

2. சலவைத் தொழிலகங்களில் (Laundry) பணிபுரிபவர்.

3. கடை மற்றும் நிறுவனங்களில் பணி புரிபவர்.

4. சினிமாப் படத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள்.

5. செயற்கை வைரம் செய்யும் தொழிலாளிகள்.

6. டீத் தூள் செய்யும் தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளிகள்.


7. மர வியாபாரத்தில் பணியாற்றும் தொழிலாளிகள்.

8. சந்தை, மார்க்கெட்டுகளில் மூட்டை ஏற்றி, இறக்கும் தொழிலாளிகள்.

இத் தொழில்களில் ஈடுபட்டு இருக்கும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் இதன் விளைவாகக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும். இதனால் தொழிலாளருடைய வேலையில்லாத் திண்டாட்டத்தால் உண்ணும் உணவுக்குக் கூட போதியதாக இல்லாத குறைந்த கூலி கொடுத்து, தொழிலாளியின் உழைப்பால் கொழுக்கும் போக்கு அறவே நீக்கப்படும்.

தொழிலாளர்களுக்குச் சட்டப்படி தரப்பட்டுள்ள உரிமைகளையும், நலன்களையும் மட்டுமே நிர்வகிப்பது மட்டுமின்றி அவர்கள் நல்வாழ்விற்குப் பயன்தரும் பல சிறந்த பணிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 10 இடங்களில் தொழிலாளர் நல மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அங்குக் குழந்தைகள் பராமரிப்பும், விளையாட்டுகளும் கவனிக்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர் குடும்பத்தினருக்குத் தையல் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அம்பத்தூரில் தொழிலாளர்களுக்காகவே ஒரு டி.வி. செட் தரப்பட்டுள்ளது. அவர்களுக்கு 4 இலவச வாசகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களுக்குப் பயன் தரும் கல்வி விளக்கத்திற்காக சினிமா ப்ரொஜக்டர் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விடுமுறை நாட்களை உல்லாசமாகக் கழிக்க மாமல்லபுரம், குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி முதலிய இடங்களில் ஓய்வு இல்லம் அமைக்கப்பட்டுள்ளன. சென்னைக்கு வரும் தொழிற்சங்கத் தலைவர்கள் தங்குவதற்கும் ஓர் ஓய்வு இல்லம் கட்டப்பட இருக்கிறது.

இவ்வாறு தொழிலாளர்களின் நலனை வளர்த்துத் தமிழ்நாட்டில் நல்லதொரு சமுதாயம் அமைக்க தொழிலாளர் துறை பாடுபட்டு வருகிறது.





# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை

# விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

7

# அண்ணா எனும் இலக்கியவாதி





பி.சி.கணேசன்

இலக்கியத் துறையில் பண்பட்ட ஒரு நெறியாளராக அண்ணா விளங்கினார். சாசுவதமான இலக்கியத் தரம் கொண்ட எதையும் அவர் படைக்கவில்லை என்பது உண்மை என்றாலும் இலக்கியத் துறையில் ஓர் இடத்தை அண்ணா பெற்று விட்டார் என்பதும் உண்மை.

இது எப்படிச் சாத்தியம் ஆயிற்று? அண்ணாவின் படைப்புக்களில் இலக்கிய அழகு இருந்தது. ஆனால் அவர் ஓர் இயக்கத்தைச் சார்ந்து இருந்ததாலும், அந்த இயக்கங்களின் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதையே குறிக்கோளாகக்கொண்டு இருந்ததாலும், அவர் இலக்கிய வடிவமாகச் செய்ய வேண்டும் என்கிற நோக்கோடு எதையும் படைக்க முடியாமல் போயிற்று. பிரச்சார வெற்றியே குறிக்கோளாகி விட்டதால் மற்றவைகளைப் பின்னுக்குத் தள்ளுவதும் தவிர்க்க முடியாதது ஆயிற்று. ஆகவே, படைத்த அனைத்தையும் அண்ணா சுவையாகப் படைத்தாரே தவிர, இலக்கியமாகப் படைத்தார் என்று சொல்ல முடியாமற் போயிற்று.

இருந்தும் தமிழ் இலக்கியத்தில் அண்ணா பெற்றுள்ள இடத்தை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. தமிழுக்கு அவர் ஒரு புது நடை தந்தார். அது வேகமான நடை, விறுவிறுப்பான நடை, சொல் அழகு கொண்ட நடை, படிப்போரைச் சோர்வில் ஆழ்த்தாத நடை, மேலும் மேலும் படிக்கத் தூண்டிப் பரவசப் படுத்தும் நடை, திரும்பத் திரும்பப் படித்து ஓசை நயத்தை அனுபவிக்கக் கூடிய ஒய்யார நடை. இந்த விஷயத்தை, இவ்வளவு எளிய வாக்கியங்களில், இத்துணை அழகுடன் சொல்ல முடியுமா என்று படிப்போர் வியக்கும் வண்ணம் அருமையான ஒரு நடையை அண்ணா தனக்கு என்று உருவாக்கிக் கொண்டு இருந்தார்.

பெரியாரின் 'விடுதலை' நாளேட்டில் அவர் தலையங்கம் தீட்டிய காலத்திலிருந்து, அவர் அமரர் ஆவதற்கு முன், அவருடைய வார இதழான ''காஞ்சி''யில் கடிதங்கள் எழுதியது வரை, அவர் கையாண்ட நடையை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை தெளிவாகப் புலப்படும். காலத்தின் வளர்ச்சியோடு தன்னுடைய நடையின் போக்கையும்

## முதல்வரின் முத்துக்கள்

'சிரித்து வாழவேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' என்று சொல்லும் பொழுது எல்லாரும் மகிழ்ச்சியுடன் மனநிறைவோடு குறை இல்லாமல் வாழ்வது நல்ல குடும்பமாக இருக்கும்.

அதேபோல நாம் செய்யும் தவறான காரியங்களால் பிறர் சிரிக்கும்படி வாழ்ந்தால் நாட்டுக்குத் தலைகுனிவு வேறு இருக்க முடியாது.

* * *

நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்பார்கள். குழந்தைகள் தாய்க்கும் தந்தைக்கும் பெருமை தேடித் தரும் வகையில் சிறந்தவர்களாக உருவாகி தமிழகத்திற்குப் பெருமையினைத் தேடித்தர வேண்டும்.

* * *

ஒரு மனிதன் தன் அறிவை நம்பி, தன் ஆற்றலை நம்பி, சமுதாயத்தில் தனக்குள்ள பங்கை நம்பி வாழ வேண்டும். பணத்தையும் பொருளையும் நம்பி வாழக்கூடாது. பேசுகிற பேச்சில் பொருள் இருக்க வேண்டும்.

* * * *

நமது பெரியவர்கள் நமக்கு அகராதி போன்றவர்கள், அவர்களுடைய அனுபவங்களை, கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அறிவும் ஆற்றலும் மிக்கவர்கள் நம்மைவிட வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்களைப் பெரியவர்களாக மதிக்க வேண்டும்.

* *

பூமிக்கு வரும் வானத்து நீர் நல்ல தண்ணீராக வருகிறது. அது உப்பு நிலத்தில் விழுந்தால் உப்பு நீராக மாறி விடுகிறது.

குழந்தைகளைக் கட்டுப்பாட்டுடனும் கடமையுடனும் வளர்த்தால் நிச்சயம் எல்லாக் குழந்தைகளும் நல்லவர்களாக வளர்வார்கள்.

* *

கல்வி, தொழில், ஒழுங்குமுறை ஆகிய மூன்றையும் ஒழுங்குபடுத்தித் திட்டங்கள் தீட்டினால்தான், நாடு செழிப்படையும். அப்போதுதான் பிற நாட்டுடன் நாம் போட்டிபோட முடியும்.




அவர் மாற்றிக் கொண்டே வந்து இருக்கிறார். எதுகை, மோனை அழகோடு எழுதுவது என்பது அவர் ஆரம்பத்தில் கையாண்ட நடை. அடுக்குத் தொடர் என்பதும் அப்படியே. பின்னர் அவர் எழுதிய எழுத்துக்களில் எல்லாம் ஓசை நயம் இருந்ததே தவிர, எதுகை மோனைகள் அதிகம் இருந்ததாகச் சொல்ல முடியாது. சொல்ல வந்த எதையும் சுவையாகச் சொல்வதை ஒரு கலையாகப் பயின்றவர் அண்ணா. கேலி, ஏகடியம், வஞ்சப் புகழ்ச்சி ஆகியவற்றில் அவர், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத எழுத்து மேதையாகத் திகழ்ந்தார். வாக்கிய அமைப்புகளில் சிந்தனைகளை வரிசைப்படுத்தி, உணர்ச்சியைத் தோற்றுவிப்பதில் அவர் சமர்த்தர். வேலைக்காரி நாடகத்தில் ஒரு வசனம் : ஆனந்தனிடம் அவனுடைய மனைவி சரசா ''நான் அழகாக இல்லையா?'' என்று கேட்கிறாள். பழி வாங்குவதற்காகவே அவளைத் திருமணம் செய்து கொண்ட ஆனந்தன் பதில் சொல்லுகிறான்! ''கழுதை கூடத்தான் அழகாக இருக்கும்'' என்று சொல்லி நிறுத்தி, ''அது குட்டியாக இருக்கும்போது'' என்று முடிக்கிறான். சாதாரணக் கருத்துதான் இது என்றாலும், அந்த வாக்கியத்தை அமைத்துச் சொல்லுகின்ற முறையில் அண்ணா ஒரு 'சஸ்பென்'ஸை உண்டாக்கி, வாக்கியத்தை முடிய விடுகிறார். 'இளமையான எதுவும் அழகாக இருப்பதைப் போலத்தான் நீயும் அழகாக இருக்கிறாய்' என்று ஆனந்தன் தன்னுடைய மனைவியைக் குத்திக் காட்டுவதை, இதை விட அழகான வாக்கிய அமைப்பால் ஒரு நாடக ஆசிரியரால் உணர்த்த முடியுமா என்பது சந்தேகமே!

இப்படி, இடம் அறிந்து வாக்கிய அமைப்புக்களை உருவாக்கி, தான் உணர்த்த விரும்பிய கருத்தை மனத்தில் பதியும்படியாகச் சொல்வதில் அண்ணா ஒரு ரசவாத வித்தைக்காரராக இருந்தார்.

தமிழில் புது நடை காண வேண்டுமென்று எண்ணி அண்ணா செயல் பட்டதாகச் சொல்ல முடியாது. ஆங்கிலத்தில் நிறைய நூல்களைப் படிக்கின்ற பழக்கம் உடையவராக அண்ணா விளங்கினார். கார்லைல் எழுதிய 'பிரஞ்சுப் புரட்சி' அண்ணாவுக்குப் பிடித்தமான புத்தகங்களில் ஒன்று. ''ரோம் சாம்ராஜ்யத்தின் சரிவும் வீழ்ச்சியும்'' என்கிற நூலை அண்ணா விரும்பிப் படித்தார். கிப்பனுடைய ஆங்கில நடையில் அண்ணாவுக்கு மிகுந்த கவர்ச்சி உண்டு. ஆங்கிலத்தில் அருமையாக உரை நடை எழுதக் கூடியவர் என்ற பெயர் பெற்றவரும், தன்னுடைய 'யுத்த நினைவுகள்'' என்கிற நூலுக்கு நோபல் பரிசு பெற்றவருமான சர். வின்ஸ்டன் சர்ச்சில், ஆண்டுக்கு ஒரு தடவையாவது கிப்பன் எழுதிய 'ரோம் சாம்ராஜ்யத்தின் சரிவும் வீழ்ச்சியும்' என்கிற நூலை ஊன்றிப் படிப்பாராம். நல்ல ஆங்கிலம் எழுத விரும்புகிறவர்கள் கிப்பனின் நடையைப் பயில்வது அவசியம் என்று கருதுகின்றவர்களும் இருக்கிறார்கள்.

அண்ணாவுக்குப் பிடித்த ஆசிரியர்களில் கிப்பன் ஒருவர். தமிழில் பல சந்தர்ப்பங்களில் கிப்பனுடைய ஆங்கில நடையைத் தழுவி அண்ணா எழுதி இருப்பதை அநேக மேற்கோள்களுடன் எடுத்துக் காட்ட முடியும். கிப்பனைப் போலவே அண்ணாவுக்குப் பிடித்த மற்றோர் ஆசிரியர் இங்கர்சால். இங்கர்சால் ஒரு பழுத்த நாத்திகவாதி. அமெரிக்காவின் தலை சிறந்த பேச்சாளர்களில் மிகவும் உன்னதமான இடத்தைப் பெற்று இருந்தவர். அவர், மைதானங்களில் பேசுவது கிடையாது. மண்டபங்களில் தான் பேசுவார். பேச்சுக்குக் கட்டணம் உண்டு. கட்டணம் இல்லாமல் அவருடைய பேச்சை எவரும் கேட்க முடியாது. ஒரு மாதத்தில் அமெரிக்க ஜனாதிபதி பெறுகிற சம்பளத்தை விடத் தன்னுடைய பேச்சின் மூலம் இங்கர்சால் பல மடங்கு வருமானத்தைப் பெற்றார் என்பது வரலாற்று உண்மை.

இங்கர்சாலின் கருத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களும் அவருடைய பேச்சினுடைய நடை அழகை ரசிப்பதற்காகக் கட்டணம் செலுத்தி அவருடைய கூட்டங்களுக்குச் செல்வார்களாம். ஆங்கிலத்தில் எதுகை மோனை அழகோடு, உவமைகளை ஏராளமாகப் பயன்படுத்திப் புதிய நடையை உருவாக்கிய பெருமைக்கு உரியவர் இங்கர்சால். கருத்தால் அண்ணாவைக் கவர்ந்த இங்கர்சால் தனது எழுத்து நடையிலும் அண்ணாவைக் கவர்ந்து இருக்க வேண்டும் என்பதை அண்ணாவின் தமிழைப் படிக்கின்ற எவரும் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். ஆங்கிலத்தில் 'பேலன்ஸ் ஸ்ட்ரக்சர்' என்று சொல்வார்கள். தமிழ் வாக்கிய அமைப்பில் இது அபூர்வம். இங்கர்சாலின் ஆங்கில நடையில் இந்த 'பேலன்ஸ் ஸ்ட்ரக்சர்' அருமையாகக் கையாளப்பட்டு உள்ளது. அதை அண்ணா தமிழில் கையாள ஆரம்பித்த போது தமிழுக்கு ஒரு புதிய நடை கிடைத்தது.

அண்ணாவின் சில ஆரம்பகாலப் பேச்சுக்களும் எழுத்துக்களும், இங்கர்சாலின் ஆங்கில நடையின் மொழி பெயர்ப்புப் போலவே இருக்கும். இந்த நடை தான் அவரை ஆரம்பக் காலத்தில் பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் ஆக்கிப் பெரிய வெற்றியைத் தேடித்தந்தது. இங்கர்சால் 'The working class who changed the forests into farms' என்று சொல்வதை அண்ணா தமிழில் ''காடு திருத்திக் கழனி ஆக்கிய பாட்டாளி மக்கள்'' என்று குறிப்பிடுகிறார். இப்படி இங்கர்சாலின் நடையை அண்ணா எவ்வாறு கையாண்டு தமிழுக்குப் புது நடை தந்தார் என்பதற்கு நூற்றுக் கணக்கான மேற்கோள்களைக் காட்டமுடியும்.

—தொடரும்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.


படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்கு அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்கு அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு



# "தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"

- வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை !
- தமிழ் வரலாறு எழுதுவோர்க்கு ஊக்க உதவி !
- தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கான புதுத் திட்டங்கள் !
- சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மையம் !
- மதுரையில் தமிழ் இசைக் கல்லூரி !
- அரசவைக் கவிஞர் நியமனம் !

**எங்கும் தமிழ் ! எதிலும் தமிழ் !**

என்பதே நமது அரசின் இலட்சியம்.
இப்பணியில் வெற்றி குவிக்க
எல்லாரும் பாடுபடுவோம் !